# சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை

ஜனவரி 22 - 28, 2014 பக்கம் - 24 30/-




## முத்தமிட முத்தான பத்துக் கட்டளைகள்...

## வீரம் ஜில்லா விமர்சனம்

## உலகக் கிண்ண ஒத்திகை

# எங்களையும் தோண்டுங்கள்





மொபிடெல் இடமிருந்து மிகவும் சிறந்த IDD கட்டணங்கள்

| ரீலோட் / ரீசார்ஜ் பெறுமதி | கிடைக்கப் பெறும் IDD அழைப்புகளின் பெறுமதி | கிடைக்கப் பெறும் சர்வதேச SMS பெறுமதி | கிடைக்கப் பெறும் மொத்தப் பெறுமதி |
|---|---|---|---|
| ரூ. 189 | ரூ. 300 | ரூ. 100 | ரூ. 400 |
| ரூ. 589 | ரூ. 900 | ரூ. 400 | ரூ. 1,300 |

Sri Lanka Telecom Mobitel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 19



இன்னொரு மனிதப் பிறவியைப் பார்க்காமல் ஒரு நிமிடம் கூட அங்கு கழியுமா என்பது சந்தேகமே.

இதற்கு நேர் மாறாக இங்கிலாந்து போன்ற ஒரு நாட்டில், ஒருவீதியில் செல்லும்போது, ஆளரவம் இல்லாது வீதி வெறிச்சோடிக் கிடப்பது, நடக்க முடியாத ஒன்றல்ல.

ஆனால் இந்தியாவில் பொலிந்து விளங்கும் நட்புறவும், இந்திய மக்களின் பண்பட்ட மனிதாபிமானமும், அநாதரவு உணர்வுடன் எவரும் கைவிடப்படாது பார்த்துக் கொள்ளும் எனலாம். இத்தகைய சமூகச் சூழல்களில் வாழும் மனித வெள்ளத்தால் சூழப்பட்ட நிலையில் எனது உள்ளார்ந்த உணர்ச்சிகளும் எப்போதும் விழிப்பாக இருந்த இடம் தமிழ் நாடு. இந்த உணர்வு, சமூக ஊடாட்டங்களினால் மட்டும் வரவில்லை. இலட்சோப லட்சம் மக்களின் சமூக, பொருளாதார பரிதாபச் சூழ் நிலையை அடுத்தடுத்துப் பார்த்து அதனால் கிளர்ந்த உணர்வும் ஒருகாரணம். மக்களின் வாழ்வில் வறுமை புரிந்த கோரம் அப்பட்டமாகத் தெரிந்தது. அந்தத் துயரம் என்னை ஆழமாகப் பாதித்திருந்தது. அதைப் பற்றிக் குறிப்பிடாது இருப்பது தவறு என்றே கருதுகிறேன்.

செல்வம் கொழிக்கும் மேற்குலகில் வளர்ந்தவள் நான். கோடிக்கணக்கான மக்களின் வறிய வாழ்க்கைத் தரத்தை நான் இந்தியாவில் பார்த்தபோது திகைத்துப் போனதற்கு அதுவும் காரணமாக இருக்கலாம். வறுமை, சமூகச் சுரண்டல், அநீதி, முரண்பாடுகள் இவை எல்லாம் அப்பட்டமாகத் தெரிந்தன. இவை மட்டில் பாராமுகமாகவோ இவற்றால் மனம் நெகிழாமலோ ஒருவர் இருப்பாரேயென்றால் அவர் பார்வை அற்றவராகத் தான் இருக்க முடியும். எதிரே தெரிந்த வறுமையும் சுரண்டலும் எனக்குள் ஏற்படுத்திய கடுப்பு, காலத்தால் தணியவே இல்லை. தொடக்கத்தில், நிலைமையை நேரே பார்க்கும் போதெல்லாம் இது நிசமல்ல, மாறிவிடும் என்று கருதுவேன். ஆனால் இது மாறவில்லை; நிரந்தர பிரசன்னமாக இருந்தது; மனச் சாட்சியை உறுத்தியது; மனதையும் குடைந்தது. விமானம் மூலம் மும்பையில் போய் இறங்குவதற்கு முன், விமான யன்னலால் வெளியே எட்டிப் பார்த்தால் எல்லாமே புரிந்து விடும். விண்முட்டும் மாடங்களின் கவர்ச்சியை, நகரின் எல்லையில் கண்ணுக்கு எட்டாத் தூரத்துக்கு விரிந்து கிடக்கும் சேரிகள் மழுங்கடித்து விடும். விமான கூடத்தை விட்டு வெளியே வந்ததும் பிச்சைக்காக நீளும் பெருந்தொகைக் கரங்களே பயணிகளை வரவேற்கும்.

என்து மனச் சாட்சியில் சுருக்கென்று தைத்த இன்னுமொரு சம்பவம், சென்னையில் ஒரு சாதாரண உணவு விடுதியில் நிகழ்ந்தது. நாம் உணவைச் சுவைத்துக் கொண்டிருந்தோம். அந்த உணவு விடுதியின் வாயிலை மூன்று நான்கு பிள்ளைகள் துணிச்சலாக அகலத் திறந்தார்கள். அவர்களுடைய வாடிய முகங்கள் நாம் உண்பதையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தன. நாம் தமக்காக உணவில் ஏதாவது மீதம் விடமாட்டோமா என்ற ஏக்கம் அந்த் முகங்களில் தெரிந்தது.

என்னைப் பாதித்த இன்னொன்று, சென்னைப் பிச்சைக்காரரின் பரிதாப் நிலை; என்றுமே மாறாத நிலை; எங்கும் வியாபித்து இருந்த சமூக ஏற்றத் தாழ்வுகளையும் சுரண்டலையும் பிரதிபலித்த நிலை; நான் ஒரு வெள்ளைக்காரி என்பதால் பிச்சைக்கார சமூதாயத்தின் இரத்துலக்கு கூடுதலாக உள்ளானேன். ஆகவே எனக்குப் பின்னால் ஒரு பிச்சைக்காரப் பட்டாளமே வந்து கொண்டிருக்கும்; அதுவும் சென்னை பிரதான வீதிகளில் நான் கடைத்தெருக்களுக்கு ஏதாவது வாங்கப் போனால் நீட்டிய கரங்களோடு "அம்மா! அம்மா!" என்று கெஞ்சியபடியே வந்து கொண்டிருக்கும். மனிதராகப் பிறந்தவர்கள் என் முன்னே நின்று பிச்சைக்காக என்னிடம் கையேந்துவது எனக்குத் தர்மசங்கடமாக இருந்தது. இதில் இருந்து மீள்வதற்கும் எனக்கு நாள் பிடித்தது; இதை எப்படித் தீர்ப்பது என்பதும் கவலையைத் தந்தது. தொடக்கத்தில் இவ்வளவு அசுத்தமான தோற்றத்தில் பிச்சைக்காரர் என்னைத் தொந்தரவு செய்வது எனக்கு ஒரு அசௌகரிய உணர்வைத் ஏற்படுத்தியது. இத்தகைய கொடிய வறுமையை நான் முகமுகமாக இதுவரை பார்த்ததில்லை. இனி, நான் 'மேற்குலகில் இருந்து வந்தவள். ஆதலால் என்னிடம் பணம் இருக்கும் என்று 'பெரும்பாலனவர்கள் நினைக்கிறார்கள்என்று நான் கருதினேன்.

இந்த நிலையில், ஒன்றிரண்டு சில்லறையைக் கொடுக்க மறுத்ததால், மற்றவர்கள் கருமியாக என்னைப் பார்ப்பார்கள். அதை நான் விரும்பவில்லை. மறுபுறம் உண்மையான நிலையை உணராது இரக்கம் காட்டும் ஒருவராக மற்றவர்களால் கருதப்படுவதையும் நான் விரும்பவில்லை. பெரும்பாலான சமூகம் அங்கீகரிக்காத தொழில் இரத்தல் தொழில் என்பதை நான் அறிவேன். நாம் உதவுவதாகக் கருதிச் சில்லறை



கொடுக்கும் அதே மக்களைச் சுரண்டி நசுக்கும் தொழில் இது என்பது எனக்குத் தெரியும்.

என்னைப் பொறுத்தவரையிலே பிச்சை எடுத்தலை ஒழித்துக் கட்டும் சமூகப் பணியில் ஈடுபடுவது எனது நோக்கம் அல்ல. நான் வீதியில் இறங்கி நடக்கும் போது, பிச்சைக்காரரால் மொய்க்கப்படாதிருக்க விரும்பினேன். அதே சமயம், எதையும் கொடுக்காது அவர்களை விரட்டவும் நான் விரும்பவில்லை. தொடக்கத்தில் நான் எல்லோருக்கும் முடிந்ததைக் கொடுப்பேன். கொடுத்தால் அவர்கள் போய்விடுவார்கள் என்று க்ருதினேன். ஆனால் விளைவு நேர்மாறாக இருந்தது. எனது இளகிய மனதைக் கண்டு பிச்சைக்கார் கூட்டம் பலமடங்கு பெருகியது. இந்த நிலையில், மாநில அரசு விரும்புவது போல, பிச்சை போடாது விடுவதே 'சிறந்தது என்று தீர்மானித்தேன். ஆனால் அதுவும் முடியாது போய்விட்டது. நான் கொடுக்கும் அவர்களும் விடாது தொடர்ந்தார்கள். இந்தக் குழப்பமான சூழ்நிலையை எப்படிச் சமாளிப்பது? பிச்சைக்காரரால் சூழப்பட்டு விடுவேன் என்பதற்காக கடைத்தெருக்கும் போகாமல் இருக்க முடியவில்லை. அதே சமயம் அலையலையாகப் பெருகிக் கொண்டிருக்கும் அத்தனை பேருக்கும் சில்லறை கொடுத்துக் கொண்டிருக்க முடியவில்லை.

இந்த வெளிப்படையான பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்று ஆழமாகச் சிந்தித்தேன். என்னை மலைக்க வைத்தது என்னைச் சூழ்ந்து கொள்ளும் பிச்சைகாரரல்ல. மாறாக அவர்களது பிரசன்னம் ஒரு உண்மையை எனக்கு எடுத்துக் காட்டியது. அதிர்ஷ்ட வசமாக சமூகசலுகையுடனும் நல்வாய்ப்புக்களுடனும் எனது வாழ்க்கை அமைந்து விட்டது. அதே சமயம், எனது முகத்திற்கு முன்னே அநீதியும் சமூக சமத்துவமின்மையும் மெய்யுண்மையாக வடிவம் எடுத்து நிற்கிறது. இந்த முரண்பாட்டை உணர்ந்து நிலை குலைந்து போனேன். ஆகவே, இந்தப் பிள்ளைகள், பெண்கள், ஊனமுற்றோர், வயது குறைந்தவர்கள், முதியோர் அடங்கிய இச்சமூகம் எனக்கு தொந்தரவு தருகிறது என எண்ணி, அவர்களை ஒதுக்கித் தள்ளாது, பிரச்சினையைத் எனக்குள்ளேயே தீர்த்துவிடத் தீர்மானித்தேன். பிச்சை எடுப்பது ஒரு தொழிலாகவே மாறி விட்டிருந்தது. இதை ஊக்கப்படுத்தக் கூடாது என்றுமாநில அரசுவிரும்பியது. ஆனால் இதில் ஈடு பட்ட மக்களுக்கு மாற்று வழி இல்லாமல் இருக்கலாம்; இழி தொழிலே தங்களுக்கும் பொருத்தமானது என்று அவர்கள் கருதியிருக்க வேண்டும். இவர்களுக்குச் சில்லறை கொடுப்பதால் நான் குறைந்து போய்விட மாட்டேன். ஆகவே எனக்குள் ஒரு முடிவுக்கு வந்தேன். சில்லறையை அவர்களுக்கு கொடுத்த பின், கொச்சைத் தமிழில் 'போயிடுங்க' என்று கூறுவேன். அவர்களும் மரியாதையாகக் பணத்தைப் பெற்றுக்கொண்டு அமைதியாகப் போய் விடுவார்கள். (பதிவுதொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— பூமுகன்

# ஏட்டிக்குப் போட்டி



ஆள்களை விஞ்சி வளர்ந்திருக்கும் ஒலிபெருக்கிகள் ஊரின் அமைதியைத் தின்ற களைப்பின் மிகுதியால் வியர்வை சிந்திக் கொண்டிருக்கின்றன. அக்கம் பக்கத்தில் உள்ளவர்களது நிம்மதி காற்றோடு பறந்துபோக களிப்பில் சிலர் மட்டும் இன்ப அலைகளில் சறுக்கிக்கொண்டிருந்தனர்.

தமிழ்க் கலாசாரம் பற்றியும், அதில் வெளியாள்கள் தலையிட்டுச் சீரழிக்கின்றனர் என்றும் வாய் ஓயாது குற்றச்சாட்டுக்களை அடுக்கிக்கொண்டே செல்கின்றோம். இருப்பவன் சரியாக இருந்தால்....சிரைப்பவன் சரியாக.........என்று.

குற்றச்சாட்டுக்களை சுமத்துவது இலகுவானது. அவை எதற்கு? எப்படி?ஏன்?உண்மை என்ன?தடுப்பது எப்படி?என்று சிந்தித்தால் அனைத்துக்கும் காரணம் நாமாகத்தான் இருக்கும்.

நாம் களவு செய்துவிட்டு மற்றவர்கள் மீது பழி சுமத்துவது அபாண்டமானதல்லவா. இது போலத்தான் எமது கலாசார சீரழிவுகளுக்கு நாமே துணை போய்கொண்டு அதற்கு இன்னொரு சாராரைக் காரணியாக்கிக்கொண்டிருக்கிறோம்.

அதற்காக அவர்களுக்கும் இதுபோன்ற நிகழ்வுகளுக்கும் தொடர்பேதும் இல்லை என்று சொல்லிவிட முடியாது.ஆனாலும் தவறு முழுவதும் எம்மீதே இருக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் தான் இதன் வகிபாகம் என்னவென்பதை உணர முடியும்.

**பாட்டுக் கச்சேரி**

முன்னர் எல்லாம் பொது மேடைகளில் விசேடமாக நடைபெற்ற பல நிகழ்வுகள் இப்போது சர்வ சாதாரணமாக வீட்டு களியாட்டங்களில் இணைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்து போட்டிக்கலாசாரமாக இது உருவெடுத்திருக்கிறது.

உண்மையில் அதிகரித்த ஒலி எழுப்புவதால் அயலில் இருப்பவருக்கு அது இடைஞ்சலாக இருப்பின் அது குறித்து சட்ட ரீதியாக முறையிடும் உரிமை குறித்த அயலவர்க்கு உண்டு என்பதை ஒவ்வொருவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

"ஒரு நாளுக்குத்தானே ஏதோ செய்து முடிக்கட்டும். இதுக்கு போய் ஏன் பகைத்துக்கொள்ளுவான்" என்று சகித்துக்கொண்டிருக்கும் பலர் மத்தியில்தான் இத்தனை நிகழ்வுகளும் நடக்கின்றன என்பதை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும்.

இன்னும் எங்கள் சமுகத்தில் ஒரு வேளை உணவுக்கு திண்டாடும் எத்தனையோ குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களின் பசியைப் போகக் இதுவரை நாம் என்ன செய்தோம்? இன்னும் எத்தனையோ குழந்தைகள் சீரான ஆடை அணிய வழியற்றிருக்கின்றன. அந்த குழந்தைகளையும் அழகுபடுத்திப் பார்க்க எத்தனைபேர் தலைப்பட்டிருக்கிறோம்? நானும் கற்று பெரியாளாகவேண்டும் என்று ஏங்கும் குழந்தைகள் ஆரம்பக் கல்வியைப் பெறக்கூட வசதியற்றிருக்கின்றனர். அவர்களது எதிர்காலத்துக்காக நாம் என்ன செய்துவிட்டிருக்கிறோம்?

இன்னும் சமூகத்தில் எத்தனை கஷ்டங்கள்? இவை ஒட்டுமொத்தமாக நீங்க நாம் தலைப்பட வேண்டும்.

களியாட்டங்களால் வரும் சிற்றின்பம் நிலைக்கப் போவதில்லை. அது அந்த மணித்தியாலயங்களுக்கு மாத்திரமே. பனிக்கட்டி போன்ற இந்தச் சிற்றின்ப பேறு பெறுவதை விடுத்து பேரின்பப் பேறுக்கான வழிகளைத் தேடுவதே மேலானது.

எமது சமூகத்தையும் கலாசார பண்பாடுகளையும் பாதுகாக்க வேண்டியது எமது கடமையே.

நெற்பயிருக்குள் களை முளைப்பது வழக்கமானது. களையை நோவதால் அது அழிந்துபோகாது. பிடுங்கி எறிவது விவசாயியின் பொறுப்பு. அந்த முறைமையையே கலாசாரத்துக்கும் பயன்படுத்துங் கள். இவற்றுக்கு இன்னமும் விஞ்ஞானம் களைநாசினி கண்டுபிடிக்க வில்லை. பிடிக்கப் போவது மில்லை.

இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே.

## ஒரு போட்டிக் கச்சேரி

முன்வீட்டு கணேசண்ணை போன மாதம் தன்ர மகளின்ர சாமத்தியவீடு கொண்டாடினவர். அண்டைக்கு இரவு பாட்டுக்கச்சேரி மட்டும்தானே பிடிச்சவர். அதில வந்த பாட்டுக்காரரும் பெருசா சரியில்ல. பாட்டு செலைக்ஸனும் வாய்க்கேல.

அடுத்த மாதம் தனது மகனுக்கு திருமணம் நிச்சயித்திருக்கும் லிங்கண்ணை போடும் பிளானுக்கு கணேசண்ணை விட்ட தவறுகள் வழிசெய்தன.

"என்ர மகன்ர கலியாணத்துக்கு பாருங்கோவன் ஒரு கலக்கு கலக்கிறன்" சவால் விடுத்தார் லிங்கண்ணை.

அவரின் பிளான் பாடலுடன் ஆடலையும் வரவழைப்பது. ஒருமாதத்தில் தனது கனவை நிறைவேற்றி கணேசண்ணையைத் தோற்கடித்தார் லிங்கண்ணை.

இதுதான் போட்டிக் கலாசாரம். முன்னர் இந்த முறைமைகள் கோயில் விழாக்களில் நடைபெற்றன. சின்ன மேளம், பெரியமேளம், நாதஸ்வரம் என்று இந்தியாவில இருந்து ஆக்கள வரவழைச்சு ஒவ்வொரு கோயில்ல ஒவ்வொரு விதமா விழா நடத்திறவை. இப்பவும் அந்தக் கலாசாரம் இருக்குது.

அதில குற்றங்குறையளை கண்டுபிடிக்க முடியாது. காரணம் சமய வரலாறுகளோட பின்னிப்பிணைஞ்சிருக்கிற விசயங்கள். ஆளாளுக்கு ஒரு அர்த்தம் வேற. ஆனா தனிப்பட்ட வீட்டுக்கொண்டாட்டங்களில பெரும் எடுப்பையும் பவரையும் காட்டமுற்படுவது, அதால மற்றவையும் அப்பிடியே தங்கட நிகழ்வுகளை நடத்த நினைப்பது மிகவும் தவறானது.

எங்களுக்கு எங்கட நிகழ்வுகளை சுதந்திரமா நடத்துறதுக்கு பூரணமான உரிமை இருக்கு. அதுக்காக மற்றவர்களது சுதந்திரத்தை கெடுப்பதாக அது இருக்கமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷ்: சிறைப்பட்ட ஜனநாயகம்



நீலன்

தெற்காசிய நாடுகளில் ஒன்றான பங்களாதேஷில் அண்மையில் மிகவும் பதற்றமான சூழலில் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. பொதுவாகத் தெற்காசிய நாடுகளில் காணப்படும் தேர்தல் பண்புகள் அனைத்தும் அத்தேர்தலில் இடம்பெறத் தவறவேயில்லை.

வன்மத்தைத் தூண்டும் பரப்புரை, எதிர்க்கட்சிகளின் புறக்கணிப்பு, வாக்கு மோசடிகள் பற்றிய வாதப் பிரதிவாதங்கள், இவை எதனையும் பொருட்படுத்தாத ஆளும் கட்சியின் வெற்றிப் பிரகடனம், இன ரீதியான வன்முறைகள், சர்வதேச சமூகத்தின் கண்டனக் கணைகள் என ஒன்று தவறவிடப்படாமல் அனைத்தும் பங்களாதேஷ் தேர்தலிலும் அரங்கேறவே செய்துள்ளன.

தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து ஆட்சியமைக்கத் தயாராகிறார் ஆளும் அவாமி லீக் கட்சியின் தலைவி ஷேய்க் ஹசீனா. சகலதையும் சட்டப்படி நடத்தி ஜனநாயகத்தைக் காப்பாற்றிவிட்டதான திருப்தி அவருக்கு. ஆனால், ஜனநாயகம் காப்பாற்றப்பட்ட விதமோ அலாதியானது. அவரின் தலைமையிலான அரசு ஆட்சியில் இருக்கும் போதே தேர்தல் அறிவிப்பு வெளியானது. இதற்கு முன்னர் பங்களாதேஷில் அரசாங்கம் கலைக்கப்பட்டு காபந்து அரசாங்கத்தின் மூலமே தேர்தல் நடத்தப்படுவதே வழக்கம். இதற்குரிய ஏற்பாடுகள் இரத்துச் செய்யப்பட்டதால் நடைமுறை அரசாங்கத்தின் தலைமையில் தேர்தல் இடம்பெற்றது.

இத்தகைய கட்டமைப்பில் தேர்தல் நியாயமாக நடக்கமாட்டாதெனக் கூறி எதிர்க்கட்சிகள் தேர்தலைப் புறக்கணித்தன. பேகம் காலிதா ஷியாவின் பங்களாதேஷ் தேசியக் கட்சி தலைமையில் 18 கட்சிகள் அணிதிரண்டு தேர்தலை நிராகரித்தன.

இதன் பின்னணியில், மொத்தமாக இருந்து 300 தொகுதிகளில் 153 தொகுதிகளில் அவாமி லீக் என்ற குதிரை மாத்திரமே தனித்து ஓடி அமோக வெற்றியை அடைந்துள்ளது. பங்களாதேஷின் சனத்தொகை 15 கோடியை விட அதிகம். அங்கு ஒன்பது கோடி வாக்காளர்கள் உள்ளனர். இவர்களில் 40 சதவீதமானவர்கள் வாக்களித்திருப்பதாக பங்களாதேஷின் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ள போதிலும் அந்த எண்ணிக்கையில் அரைவாசிப் பேராவது வாக்களித் திருந்தால் அது அதிசயம்தான் என்ற குற்றச்சாட்டுக்களும் நிலவுகின்றன.

தேர்தல் காலத்தில் பங்களாதேஷ் தேசியக் கட்சியின் தலைவி வீட்டுக்காவலிலும், பங்களாதேஷின் மூன்றாவது அணியாகக் கருதப்படும் ஜாதியோ கட்சியின் தலைவர் மொஹம்மட் ஹுசைன் எர்ஷாத் இராணுவ வைத்தியசாலையிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். நான்காவது கட்சியான ஜமாத்தே இஸ்லாமி தேர்தலில் போட்டியிட முடியாதவாறு அதன் மீது தடைவிதிக்கப்பட்டிருந்தது.

தேர்தலைப் புறக்கணித்த எதிர்க்கட்சிகளும் லேசுப்பட்டவையல்ல. அவையும் தம் பங்குக்கு ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் கைங்கரியங்களைச் சிரத்தையுடன் மேற்கொண்டன. எதிர்க்கட்சிக்குண்டர்கள் வாக்குச் சாவடிகளைத் தீயிட்டுக் கொளுத்தினார்கள். வாக்காளர்களை அச்சுறுத்தினார்கள்.

**தேர்தல் காலத்தில் பங்களாதேஷ் தேசியக் கட்சியின் தலைவி வீட்டுக்காவலிலும், பங்களாதேஷின் மூன்றாவது அணியாகக் கருதப்படும் ஜாதியோ கட்சியின் தலைவர் மொஹம்மட் ஹுசைன் எர்ஷாத் இராணுவ வைத்தியசாலையிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். நான்காவது கட்சியான ஜமாத்தே இஸ்லாமி தேர்தலில் போட்டியிட முடியாதவாறு அதன் மீது தடைவிதிக்கப் பட்டிருந்தது.**

அதன் விளைவுகள் மோசமானவையாக இருந்தன. பொலிஸாரும், இராணுவத்தினரும், வன்முறைகளைப் பிரயோகித்தனர். இதனால் எழுந்த தேர்தல் வன்முறைகளில் 30 பேர் வரை உயிரிழந்தனர்.

ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் அடுத்த கட்ட முயற்சியில் இறங்கிய எதிர்க்கட்சிகள், தேர்தலில் வாக்களித்ததன் மூலம் ஆளும் கட்சிக்குத் துணை போனதாகக் கூறி இந்துக்கள் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டன.

மறுபுறத்தில் தேர்தல் பெறுபேறுகளை ஆட்சேபித்து வீதிகளில் ஆர்ப்பாட்டம் செய்பவர்களால் ஜனநாயகத்திற்குக் குந்தகம் ஏற்படக் கூடாது என்ற நோக்கில் பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை ஒடுக்கினார்கள். தேர்தல் நல்ல முறையில் நடந்தது என்ற ஷேய்க் ஹசீனா கூறுகையில் ஆர்ப்பாட்டங்கள் அதன் நம்பகத் தன்மை பற்றிச் சந்தேகத்தை எழுப்புமல்லவா?

தமது பிரதமர் மீது விசுவாசத்தைக் காட்டுவதற்காக ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதில் பொலிஸாருக்கும், இராணுவத்திற்கும் தயக்கமேதும் இருக்கவில்லை. படைத்தரப்பு ஷேய்க் ஹஷீனாவை ஆதரிப்பதற்கும், பேகம் காலிதா ஷியாவை எதிர்ப்பதற்கும் இரு காரணங்கள் இருக்கவே இருக்கின்றன.

முதற்காரணம், ஹசீனா பெற்றுத் தரும் சலுகைககள். ஐ.நா. அமைதி காக்கும் படையணிகளில் பங்களாதேஷ் வீரர்களுக்கு கூடுதல் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்து அதிக வருமானத்தை ஈட்ட ஷேய்க் ஹஷீனா வழிவகுத்திருக்கிறார்.

இரண்டாவது காரணம், இஸ்லாமியக் கடும்போக்குவாதம் குறித்த அச்சம். ஜமாத்தே இஸ்லாமிய இயக்கம் உள்ளடங்கிய எதிர்க்கட்சிகளின் கூட்டணி பங்களாதேஷில் இஸ்லாமியக் கிளர்ச்சிக்குத் தூபமிடும் சூழலே காணப்படுகின்றது. அத்தகைய நிலை ஏற்பட்டால் தமதுபாடு திண்டாட்டம்தான் என்பதைப் படைத்தரப்பு அறிந்திருக்கிறது.

பாகிஸ்தானில் இருந்து பங்களாதேஷ் பிரிந்து சென்ற சமயம், ஷேய்க் முஜிபுர் ரஹ்மான் மதச்சார்பின்மைக்கு முக்கியத்துவம் அளிக்கக் கூடிய அரசியல் யாப்பை உருவாக்கியிருந்தார். அவர் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த ஷியா உல்ரஷ்மான் மதச்சார்பின்மை என்பதை அறவே அரசியல் யாப்பில் இருந்து நீக்கினார்.

வங்கத்தின் தேசியம் என்பதன் உயிரோட்டமே சகல இனத் தவர்களையும் அரவணைத்துச் செல்லக்கூடிய மதச்சார்பின்மை தான் என்ற கருத்தியல் அவாமி லீக்கின் தாரக மந்திரமாக அமைந்திருந்தது. ஆனால் இதற்கு மாறாக இஸ்லாமிய அடையாளத்துடன் கூடிய தேசியவாதமே பங்களாதேஷுக் குப் பொருத்தமானது என்ற கருத்தியலின் அடிப்படையி லேயே பங்களாதேஷ் தேசியக் கட்சி வழிநடத்தப்பட்டது.

முஜிபுர் ரஹ்மானின் மூத்த புதல்வி ஷேய்க் ஹசீனாவோ, ஷியாவுல் ரஹ்மானின் மனைவியான பேகம் காலிதா ஷியாவோ கருத்தியல் சார்ந்த ஆரோக்கியமான கருத்தாடல்களைத் தவிர்த்து, தமது அரசியல் இருப்புக்கான ஆயுதமாகவே மதச்சார்பின்மை, இஸ்லாமிய மயமாக்கல் என்ற விடயங்களைப் பயன் படுத்தினார்கள்.

பங்களாதேஷில் ஏற்பட்ட நெருக்கடி யைப் பயன்படுத்தி அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகளும் அரசியல் செய்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்தியாவிற்கு பங்களாதேஷ் தேசியக் கட்சியை விட அவாமி லீக்கின் ஆட்சியே சாதகமானதாகத் திகழ்கிறது. இந்திய அரசாங்கம் அவாமி லீக்கின் செயல்களை நியாயப்படுத்த முனைந்திருப்பதும் அத னால்தான். பங்களாதேஷ் பொதுத் தேர்தல் அரசியல் யாப்பின் பிரகாரம் நடத்தப் பட்டாலும் அதனை ஜனநாயகம் என்ற வரையறைக்குள் அங்கீகரிக்க முடியாது என்பதை நன்கறிந்திந்த போதிலும் இந்திய அரசாங்கம் கண்காணிப்பாளர்களை அனுப்பி வைத்தது. அதுமாத்திரமின்றி, தேர்தல் பெறுபேறுகள் வெளியான சமயம் ஷேய்க் ஹசீனா அரசியல் யாப்பு ரீதியான கடப்பாட்டை நிறைவேற்றியுள்ளார் என்று அறிக்கைவிட்டு பெறுபேறுகளையும் நியாயப்படுத்தியது.

அமெரிக்காவும் பிரிட்டனும் வழமையான தந்திரோபாயத்தைக் கையாண்டன. தேர்தல் நடத்தப்பட்ட விதம் பற்றித் தமக்கு கவலைகள் இருப்பதாகவும் ஷேய்க் ஹசீனா எதிர்க்கட்சியு டன் பேச்சுவார்த்தை நடத்தி விரைவில் புதிய தேர்தல் நடத்த வேண் டும் எனவும் அவை அறிக்கை விடுத்தன. ஆனால், ஹசீனா ஆட்சி யமைத்த விதம் தார்மீகத்திற்கு முரணானது என்றோ அவரது அரசாங்கத்திற்கு சட்டரீதியான அந்தஸ்து கிடையாது என்றோ அமெரிக்காவும் பிரிட்டனும் கண் டிக்கவே இல்லை.

(21 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்மினிகளின் கல்லறைகள்

உணர்வுகளின் மூச்சுக்காற்றை காட்சிகளில் கொண்டுவருவதென்பது எந்தளவுக்கு சாத்தியம்?

அனிமேஷன் திரைப்படங்களில் இருக்கும் பொதுவான கூறுகள் எனப் பார்த்தால் அதில் சித்தரிக்கப்படும் பாத்திரங்கள் யதார்த்த உலகின் மாந்தர்களுக்கு முரணானதாக அமைந்திருப்பதுதான். நிஜவுலகில் நாம் காணும் முயலுக்கும் , பக்ஸ் ஃபன்னி அனிமேஷனில்வரும் முயலுக்கும் பெரும் வித்தியாசம் இருக்கும். நிஜ மனிதர்கள் நடிக்கும் சினிமாவில்தான் உணர்வுகளை வடிக்க முடியும் என்கிற நியதியை உடைத்துப் போட்ட அனிமேஷன் திரைப்படங்களில் மின்மினிகளின் கல்லறை (Grave of Fireflies) மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறது என்றால் மிகையாகாது.

இரண்டாம் உலக யுத்த காலகட்டத்தில் நடக்கும் கதை. செய்ட்டா என்ற பதின்பருவ சிறுவனையும் அவன் 5 வயது தங்கை செட்ஸ்ஸுகோ பற்றியும் இது பேசுகிறது.

முதல் காட்சியிலேயே செய்ட்டா பசியுடன் தெருவில் வீழ்ந்து கிடக்கிறான். அவன் நினைவுகளில் செட்ஸ்ஸுகோவின் குரல் ஒலிக்

## – பிள்ளைகளைத் தின்னும் போர் –

கிறது. பசியின் உச்சத்தில் கிடைக்கும் ரொட்டித் துண்டைக் கூட உண்ண திரணியில்லாமல் கிடக்கிறான். செட்ஸ்ஸுகோவின் குரலைக் கேட்டுக் கொண்டே அவன் உயிர் பிரிகிறது.

செய்ட்டாவின் ஆன்மா விடுதலையடைந்து செட்ஸ்ஸுகோவுடன் இணைகிறது. இருவரும் இரயில் பயணிக்கின்றனர். அந்தப் பயணம் காலத்தால் பின்னோக்கிச் செல்கிறது.



எச்சரிக்கை சைரன் ஒலிக்க, செய்ட்டா அவசர அவசரமாக உணவுப் பொதிகளை நிலத்தில் புதைக்கிறான். ஏதும் அறியாமல் விளையாட்டுப் பிள்ளையாய் இருக்கும் செட்ஸ்ஸுகோவை தூக்கிக் கொண்டு ஓடுகிறான் செய்ட்டா. அவனுடன் அவன் அம்மா வருவதில்லை, அவள் வேறுபக்கமாக செல்கிறாள்.

செட்ஸ்ஸுகோவுடன் தனித்து விடப்படுகிறான் செய்ட்டா& போரின் குரூர கரங்களால் தாய் தீக்கிரையாகிறாள். இந்த வலியை அடக்கிக் கொண்டு செட்ஸ்ஸுகோவை பொறுப்பேற்கிறான். அம்மா எங்கே எனக் கேட்கும் தங்கைக்கு விளையாட்டுக் காட்டுகிறான். இனிப்பு மிட்டாய் கொடுக்கிறான்.


பின்னர், அத்தையின் வீட்டுக்கு இருவரும் வருகிறார்கள். முதலில் அவர்களைக் கவனிக்கும் அத்தை பின்னர் சூழ்நிலையோ மனிதப் பண்புகளில் ஒன்றோ தெரியவில்லை. இருவரையும் இதற்கு மேல் பொறுப்பேற்று பார்த்துக் கொள்ள முடியாது என்று கூறுகிறாள். செய்ட்டாவும் இதனை புரிந்துகொள்கிறான்.

அத்தையை விட்டு விலகி இருவரும் தனியே விடப்பட்டிருக்கும் ஒரு பாதுகாப்புக் குகையொன்றில் வாழத்துவங்குகிறார்கள்.

பசி!

பசி!! இதுதான் படத்தின் முக்கிய பாத்திரம். போரின் கோரப்பிடியில் அகப்பட்டுக் கொண்டவர்களின் வாழ்க்கையை, உணர்வுகளை செய்ட்டாவின் பார்வையிலும் ஒன்றுமே அறியாத சிறுமி செட்ஸ்ஸுகோவின் குழந்தைத்தனமான சோகங்களின் மூலமும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

சின்ன சின்ன விடயங்களின் மூலம், மிகவும் நுணுக்கமாக அமைக்கப்பட்ட காட்சிகள் மூலம், நீர்வர்ண பின்னணி ஓவியங்களின் மூலம், செட்ஸ்ஸுகோவின் கண்கள், சிரிப்பு, அழுகை, குறும்புத்தனம், பேச்சு. இவ்விடத்தில் கண்களில் நீர் ததும்புவதை தவிர்க்க முடியவில்லை, திரைப்படமாக்கப் பட்டிருக்கிறது இந்த மின்மினிகளின் கல்லறை.



ஒவ்வொரு காட்சியும் நிதானமான கவிதையாகவே இருக்கிறது. எந்த இடத்திலும் அவசர அவசரமாக காட்சிகள் கத்தரிக்கப்படவில்லை& ஒவ்வொரு காட்சியிலும் ஹைக்கூ இருக்கிறது.

இரவில் மின்மினிகளுடன் விளையாடும் காட்சிகள் இதற்கு சிறந்த உதாரணம். மின்மினிகளும் போர்விமானங்களின் குண்டு வீச்சுகளும் அடுத்தடுத்து காட்டப்படுகிறது.

படத்தின் துவக்கத்திலேயே செய்ட்டாவும் செட்ஸ்ஸுகோவும் உயிர் பிரிந்து விட்டார்கள் என்பது தெளிவாக காட்டப்படுகிறது. படத்தின் முடிவு தெரிந்துவிட்டதே. ஆனால் இப்படத்தில் சொல்லவரும் விடயம் மரணமல்ல.

போர்விமானங்களில் இருந்து விழும் எந்த குண்டுக்கும் செய்ட்டாவைப் பற்றியோ அவனது குறும்புக்கார தங்கை செட்ஸ்ஸுகோவைப் பற்றியோ தெரியாது. அதற்கு மனிதர்களைப் பற்றியோ அவர்களின் உணர்வுகளைப் பற்றியோ தெரியாது.

தெரியவில்லை, இதனை யாராவது ஒரு போர் விமானி படிக்க நேர்ந்தால் ஒரு நிமிடம் குண்டு போடும் விசையை அழுத்தும் முன் தங்கை, அண்ணன், அப்பா, அம்மா, பாட்டன், தம்பி போன்ற மனிதர்கள் மீதுதான் விழப் போகிறது என்று. மாறாக இத்தனை தலைகள் என்ற இராணுவ எண்ணிக்கைகள் அல்ல என்பதை உணர்ந்துகொள்ளட்டும்.

இத்திரைப்படத்தை ஒவ்வொருவரும் பார்த்து உணர்ந்து கொண்டாலே அது தரும் கனத்தை அனுபவிக்க முடியும்.

கடைசியில் செய்ட்டாவும் செட்ஸ்ஸுகோவும் போர் நினைவுகளின் மேல் கட்டியெழுப்பப்பட்ட நவீன நகரத்தை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இரவின் மின்மினிகள் ஒளியில் இருண்ட குகை ஒளிர்கிறது& அதில் அவர்கள் நிம்மதியாக உறங்குகின்றனர்.

இரவின் போர்விமானங்களின் ஒளியில் பசுமைபூமி சிதைந்து சிதிலமாகிறது& அதில் எதுவும் மிஞ்சுவதில்லை. வலிகளைத் தவிர. இரவின் மின்மினிகளே நமக்குத் தேவை

ஸ்டூடியோ கிப்லி, பற்றி அறிந்திருப்பீர்கள். ஹயோ மியஸாகியின் அற்புத அனி மேஷன் படங்களைப் படைக்கும் நிறுவனம். இதுதான் இந்தத் திரைப்படத்தையும் வழங்கியிருக்கிறது.

மின்மினிகளின் கல்லறை அனிமேஷன் படத்தின் இயக்குனர் இஷோ ரகஹடா (Isao Takahata).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி.22 – 28, 2014

sudarolijaffna@gmail.com

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 021 567 7609

# தப்புக்கணக்குகள் குப்புறப்புரட்டிவிடும்

மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனுக்கு புனர்வாழ்வு அளிப்பது குறித்து பாதுகாப்புத் தரப்பு தீவிரமாக ஆலோசித்து வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தமக்கெதிரான கருத்தியல் கொண்ட எவரையுமே இலங்கை அரசு விட்டுவைப்பதில்லை. ஊடகவியலாளர்களாக இருந்தாலும் சரி, அரசியல் வாதிகளாக இந்தாலும் சரி, சமூக சேவகர்களாக இருந்தாலும் சரி அல்லது அப்பாவிப் பொதுமக்களாக இருந்தாலும் கூட அரசின் அகராதியில் அவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட வேண்டியவர்கள்.

இந்தப் புனர்வாழ்வு ஆளாளுக்குத் தக்கபடி மாறவும் கூடியது. சிலருக்கான புனர்வாழ்வு பரலோகம் அனுப்புவது வரை நடந்திருக்கிறது. ரவிராஜ், மகேஸ்வரன், ஜோசப் பரராஜசிங்கம், சந்திரகாசன், லசந்த விக்கிரமசிங்க என்று இந்தப் பட்டியல் நீண்டுகொண்டே போகின்றது.

இன்னும் சிலருக்கான புனர்வாழ்வு காணாமல்போதல் என்ற அடைமொழியோடு வழங்கப்பட்டிருக்கிறது. இன்னமும் வீடுவந்துசேராதவர்களாகவே இவர்கள் மாறியிருக்கின்றனர். இறுதிப்போரிலும் அதற்கு முன்னரும் காணாமற்போன அப்பாவிகள் தொடக்கம் லலித், குகன் வரையிலான அரசியல் செயற்பாட்டாளர்கள் வரைக்கும் இந்தப் பட்டியலும் முடிவின்றி நீள்கின்றது.

இதற்கு அடுத்த நிலையில் உள்ள எதிர்க் கருத்தியலாளர்களுக்கான தண்டனைதான் தடுப்பு முகாம்களுக்கு கொண்டு சென்று அவர்களுடைய மனதை உளரீதியாக சித்திரவதைக்கு உள்ளாக்கும் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கை.

இறுதிப்போரில் படைகளிடம் சரணடைந்த முன்னாள் போராளிகள் இத்தகைய புனர்வாழ்வளிப்பு முடிவுறும் நிலையில் இருப்பதால் குறித்த தடுப்பு முகாம்கள் வெறுமையாகிவிட்டன. அதை நிரப்புவதற்கு ஆள்கள் வேண்டுமே. அதற்காகவே அரசுக்கு எதிரான அல்லது தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவான கருத்துக்களை மக்கள் முன் கொண்டுசெல்லும் செயற்பாட்டாளர்கள் எந்தவித கேட்டுக்கேள்விகளும் இன்றி இந்தத் தடுப்புமுகாம்களுக்கு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவால் பிடித்து இழுத்துவரப்படுகிறார்கள்.

2012 ஆம் ஆண்டு பல்கலைக் கழகத்தில் மாவீரர் நாளை அனுஷ்டித்தமைக்காக அப்போதைய பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய நிர்வாகிகள் மாணவர்கள் என்றும் பாராமல் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டார்கள். அதன் பின்னர் பல்கலைக் கழக மாணவர்கள் நடத்திய சாத்வீகப் போராட்டங்களும், சர்வதேச அழுத்தங்களும் சில மாதங்களில் அவர்களை விடுவிக்க வைத்தது.

இப்படி ருசிகண்ட அரசாங்கம் அடுத்ததாக மாகாண சபை உறுப்பினர் அனந்தியை தடுப்புக்குள் அனுப்ப முடிவெடுத்திருப்பது போல் தெரிகிறது.

வடக்கு மாகாணத் தேர்தலில் விருப்பு வாக்குகளில் இரண்டாம் இடத்தைப் பெற்ற அனந்தி, புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலனின் மனைவி. இறுதிப் போரின் போது தனது கணவரை படை அதிகாரிகளிடம் கையளித்துவிட்டு வந்ததையும் அதன் பின்னர் தன் கணவரைப் படையினர் திருப்பித் தரவேயில்லை என்பதையும் துணிச்சலோடு அவர் வெளிப்படுத்தி வருகிறார். அத்தோடு தன்போன்று உறவுகளை காணாமல் போனோர் பட்டியலுக்குள் தொலைத்துவிட்டு கண்ணீரோடு சதிராடும் ஏனையோரை ஒன்றுதிரட்டி கவனவீர்ப்புப் போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகிறார். எனவே எப்படியாவது அனந்தியின் குரல்வளையை ஒடுக்குவதன் மூலம் குறைந்த பட்சம் உள்நாட்டில் காணாமற் போனோரை விடுவிக்கக் கோரும் போராட்டங்களை தணிக்கச் செய்யலாம் என்று அரசு கணக்குப் போடுகிறது. ஆனால் எல்லாக் கணக்குகளும் சரியாவதில்லை. தப்புக்கணக்குகள் அரசையே குப்புறப்புரட்டிவிடலாம்.



பிரமன்

# எங்களையும்

## குருதிக் கும்பாபிஷேகம்

அண்டைக்கு கோயிலில நிக்கிறதெண்டு எல்லாப்பெடியளும் முடிவெடுத்தம். இல்லாட்டி கும்பாபிஷேக வேலைய செய்து முடிக்க ஏலாது. நிக்கிற ஆக்கள் எல்லாற்ற பெயரையும் ஐ.சி நம்பரையும் எழுதி கோயில் நிர்வாகக்காரரிட்ட குடுத்தம். அவையும் சைன் வைச்சு, ஜீ.எஸ்ஸிட்ட உறுதிப்படுத்தி எங்கட பகுதி ஆமி காம்பில ஒப்படைச்சினம். இப்பிடி அறிவிச்சாத்தான் இரவு ஆமிக்காரர் வந்து செக்பண்ண மாட்டாங்கள். இல்லாட்டிக்கு ஏன், எதுக்கு நிக்கிறீங்களெண்டு ஆயிரத்தெட்டு விசாரணை செய்வாங்கள். ஆக மிஞ்சினால் ஆக்களப் பிடிச்சுக்கொண்டும் போடுவாங்கள்.

கனகாலம் சண்டை நடந்ததால ஊர்க் கோயில் சரியான சேதம். இப்பதான் ஒருமாதிரி வெளிநாட்டுக் காரரிட்ட காசு வாங்கி, திருத்தி முடிச்சம். கோயில் வேலையில அரைவாசி வேலைய ஊர்ப்பெடியள்தான் சம்பளமில்லாமல் செய்து முடிச்சனாங்கள். நாளைக்கு எங்கட வேலையின்ர கடைசிநாள். எல்லாப் பெடியளுக்கும் வலு சந்தோஷம். சிறு பிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது எண்டு சொல்லுவினம். ஆனால், இப்ப ஒரு கோயிலே எங்களால தலைநிமிர்ந்திருக்கு.

நடுச்சாமம் நெருங்கிக் கொண்டிருந்திச்சு. எல்லாருக்கும் நித்திரை வந்தாலும் கொள்ள ஏலாது.. தலைக்கு மேல நிறைய வேலை. அப்பதான் அந்த வாகனம் லைற்றை பெரிசா அடிச்சுக்கொண்டு வந்திச்சு. வந்தவங்கள் ஒண்டும் விசாரிக்கேல. துவக்கால அடிக்கத் தொடங்கிட்டாங்கள். நாங்கள் ஆமிக்காம்பில பதிஞ்ச துண்டை எடுத்துக் காட்டினம். அதையும் கிழிச்சுப்போட்டு "கோயில் எண்டு சொல்லி எங்கட காம்பை அடிக்கவோ பிளான் போடுறீங்க." என்று சிங்களத்தில் கேட்டவாறு கத்திகளாலும் வெட்டத் தொடங்கினார்கள். கோயில்ல எங்கட குருதியால கும்பாபிஷேகம் நடந்திச்சு. அம்மன் என்ன செய்ய முடியும். துவக்கோட நிக்கிற ஆமிக்காரர அவா எப்படி சூலத்தால கொல்ல முடியும்? அம்மனுக்கு முன்னாலேயே எல்லாம் நடந்து முடிஞ்சுது. ஆரையும் உயிரோட விட்டா விஷயம் வெளியால தெரிஞ்சிடும் எண்டு எல்லாரையும் ஒத்தபடியே வெட்டிச் சாய்ச்சாங்கள். அப்படியே அந்த வாகனத்தில எங்கட சடலங்களப் போட்டுக்கொண்டு போனாங்கள். எந்த இடம் எண்டு தெரியேல. அப்பிடியே கொட்டித் தாட்டுப்போட்டாங்கள். பத்து வருஷத்துக்கு மேல இப்பிடியே இருக்கிறம். எப்ப எங்களை நீங்கள் கண்டுபிடிக்கப் போறீங்கள்?

( சத்தியமாக இது தென்மராட்சி வரணிப் பகுதியில் ஊரடங்கு காலத்தின் போது கோயிலில் நின்ற இளைஞர்கள் அத்தனை பேரும் காணாமல் போன சம்பவத்தோடு தொடர்புடைய எலும்புக்கூட்டின் வாக்குமூலம் அல்ல)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிச்சுப் போடாதேங்கோ

இரவுச் சாப்பாட்டுக்கு ஆயத்தம். இன்னும் ரீவியில புறோக்கிறாம் முடியேல. பிள்ளைகள் இரண்டு பேரும் நல்ல நித்திரை. மனிசி அவைய எழுப்பி சாப்பாடு தீத்தத் தொடங்கினா. எனக்கும் சிறுகுடலை பெருங்குடல் திண்டுகொண்டிருந்திச்சு. ஆனால் எழும்பவிடாமல் ரீவி இழுத்துப்பிடிச்சு வைச்சிருந்திச்சு.

அப்பதான் திடீரெண்டு ஒழுங்கையில நாயள் அமளியா குரைக்கத் தொடங்கிச்சுதுகள். அவங்கள் ரோந்து போறாங்கள் என்று விளங்கிட்டுது. வீட்டு முன்லைற்ற உடன நிப்பாட்டிப்போட்டு உள்ளறைக்குப்போட்டம். பசி போன இடம் தெரியல. துலைவாங்கள் ஒழுங்கையைக் கடக்குமட்டும் நெஞ்சிடி தான். ஆனால் அதைவிட பெரிசா ஆரோ கதவை இடிக்கிற சத்தம் கேட்டிச்சு.

வேர்த்து ஒழுக நடுங்கிற கையால கதவைத் திறந்தன். திறந்த வேகத்தில ஏழெட்டுப்பேர் உள்ளுக்குள்ள பாஞ்சுகொண்டு வந்தாங்கள்.

"எல்லாம் இங்க வந்து இருங்க. நாங்க செக் பண்ண வேணும்" அவங்கள் சொல்லுறதுக்கிடையில மனிசி எங்கள் ரண்டுபேரின்ர ஐ.சி.யையும் குடும்பக் காட்டையும் கொண்டுவந்தா. அவங்கள் ஐ.சிய பாக்கிறதவிட என்ர மனிசிய பாக்கிறதிலேயே குறியா இருந்தாங்கள்.

"வீடு முழுக்க செக் பண்ணனும். அறையெல்லாம் திறந்து காட்டுங்க" என்று சொல்லிவிட்டு மனிசியின் முதுகில் துவக்கால் வைத்து தள்ளினான் ஒருத்தன்.

"சேர்! அவா பிள்ளையளோட இங்க இருக்கட்டும். நான் வந்து காட்டுறன்." எண்டு சொல்ல முதலே ஒருத்தன் பூட்ஸ் காலால என்ர வாயில ஓங்கி ஒரு உதைவிட்டான். ரத்தம் கொப்பளிச்சுது. "நான் கொண்டு போய் காட்டுறனப்பா." என்று வெருண்ட குரலில் சொல்லிவிட்டுச் சென்ற மனிசி கொஞ்ச நேரத்தில் "ஐயோ! என்னக் காப்பாத்துங்கோ!" எண்டு கத்துற சத்தம் கேட்டுச்சு. நான் திமிறிக் கொண்டு எழும்பினன். தாய் அழுகிற சத்தம் கேட்டு பிள்ளையளும் வீரிட்டு கத்தத் தொடங்கிட்டினம். எழும்பின என்ர தலையில ஒருத்தன் துவக்குச் சோங்கால ஓங்கி அடிச்சான். எனக்கு கண்மண் தெரியல. பிள்ளையள் இன்னும் இறுக்கி அழத் தொடங்கிட்டுதுகள்.

"அப்பாவை அடிக்காதையுங்கோ" மூத்தவள் கத்த அவளுக்கும் ஒருத்தன் துவக்கால் இடித்தான். அப்படியே சரிந்தாள் அவள். எல்லா இடமும் ஒரே கத்தல். குழந்தை எண்டும் பாராமல் என்ர பிள்ளையள கண்ணுக்கு முன்னாலேயே அடிச்சுக் கொண்டாங்கள். உள்ளுக்குள்ள ஒவ்வொருத்தனா போய் வந்தாங்கள். கடைசியா வந்தவன் உதட்ட பிதுக்கினான். எனக்கு விளங்கிட்டுது. ஆனால் எழும்பேலாது. தலைவெடிச்சு ரத்தம் அறை முழுக்க ஒழுகிட்டுது. கண் மங்கிக் கொண்டு வந்திச்சு. ஆனாலும் அவங்கள் ஒரு நல்ல வேலை செய்தாங்கள். எங்கட குடும்பத்தை கடைசியில பிரிக்காமல் நாலுபேரையும் ஒண்டா கொண்டுபோய் தாட்டாங்கள். மனிசின்ர உடம்பில ஒரு உடுப்பும் இல்லை. பிள்ளையளுக்கு தீத்தின சாப்பாடு இன்னமும் அவான்ர கையில ஒட்டியிருந்திச்சு.

நாங்கள் இப்ப ஒருத்தற்ற கரைச்சலும் இல்லாமல் நிம்மதியா மண்ணுக்குள்ள ஒண்டா இருக்கிறம். ஒருத்தரும் எங்கள தோண்டி எடுத்து பிரிச்சுப் போடாதேங்கோ.



**மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் எதிர்பாராத விதமாக கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியில் இருந்து தொடர்ந்தும் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. ஆனால் இதுவரை அந்த எலும்புக்கூடுகள் எந்தக் காலத்தில் காணாமல் போனவர்களுடையவை என்று கண்டுபிடிக்கப்படவில்லை. ஏனெனில் போர் தொடங்கிய காலத்தில் இருந்து காணாமற்போதல்களும் மனிதப் புதைகுழிகளும் முடிவின்றித் தொடர்கின்றன. இதுவரை கண்டுபிடிக்கப்பட்டவற்றை விடவும் இன்னும் அதிகமான எலும்புக்கூடுகள் இனந்தெரியா இடங்களில் புதைந்தபடியே இருக்கின்றன. அப்படி புதைந்திருக்கும் எலும்புக்கூடுகள் சில மனந்திறந்து இங்கு பேசுகின்றன.**



# தோண்டுங்கள்

## பலியாடுகள்

ரவுண்ட் - அப் எண்டாலே வயித்தைக் கலக்கும். ஆரைப்பிடிப்பான் எண்டு ஒருத்தருக்கும் தெரியாது. எல்லாம் தலையாட்டிக்குத்தான் வெளிச்சம். அண்டைக்கும் ஒரு ரவுண்ட் - அப். நான் நரி முகத்தில முழிச்சிருக்க வேணும். கோயிலடியில எல்லாரையும் வரிசையாக நிக்க வைச்சு செக் பண்ணேக்க என்னைப் பாத்து தலையாட்டியா வந்தவன் சிக்னல் காட்டினான்.

செயின் புளொக்கில அள்ளிக் கட்டிக் கொண்டு போனாங்கள். நாலைஞ்சு நாளா அடியும் உதையும். உடம்பில ஒரு சொட்டு இடம் விடாமல் சிகரெட்டால சுட்டாங்கள். குறட்டால ஒவ்வொரு நகமா பிடுங்கினாங்கள். பிறகு நாள் போக அடி உதை குறைஞ் சிட்டுது. ஆனால் வீட்டுக்காரரிட்ட நான் இருக்கிற விசயத்தை அவங்கள் சொல்லவேயில்லை.

ஒருநாள் திடீரெண்டு பெரிய வெடிச்சத்தம். இயக்கம் 'கிளிப்' எறிஞ்சு இவங்களுக்கு பெரிய சேதம். அந்த இழப்ப பிடிச்சு வைச்சிருந்த ஆக்களில காட்டினாங்கள். கைகால்ல கண்டபடி சுட்டாங்கள். ஒரு சூடு கழுத்தில விழுந்துது. ரண்டு நாள் போக என்ர பொடி மணக்கத் தொடங்கிட்டுது. பிறகு எங்கையோ உப்புமூடையை போட்டுத் தாட்டாங்கள். எந்த இடமெண்டு இன்னும் பிடிபடேல. ஆராவது என்னைத் தோண்டி எடுங்கோவன்.

## சொல்லிப்போடாதேங்கோ

கடைசிச்சண்டை முடிஞ்சு எல்லாரும் சரணடையப் போனம். எப்பிடியும் எங்கள உயிரோட விடமாட்டங்கள் எண்டு தெரியும். ஆனாலும் அம்மா அப்பாவைக்கு ஒரு நப்பாசை.

"தம்பி! வலுக்கட்டாயமாத்தான் இயக்கத்தில பிடிச்சுக்கொண்டு போய் சண்டைக்கு அனுப்பினவங்கள் எண்டு உண்மையச் சொல்லு. அவங்கள் விசாரிச்சு போட்டு விட்டுடுவாங்கள்." கடைசிநேரத்திலயாவது அவையின்ர சொல்லை காப்பாத்த வேணும் எண்ட நினைப்பில நானும் சரணடைஞ்சன்.

ஆனால் என்னை விசாரிச்சவங்கள் ஒருத்தரும் எப்பிடி இயக்கத்துக்குப் போனதெண்டு கேக்கவேயில்லை. எங்கையோ ஒருவாகனத்தில கூட்டிக்கொண்ட போனாங்கள். உடுப்புகள கழட்டச் சொன்னாங்கள். பிறகு ஒரு கறுப்புத் துணியால கண்ணைக்கட்டி லைனா கூட்டிக்கொண்டு போனாங்கள்.

பிறகு அறம்புறமா துவக்குச் சூட்டுச் சத்தங்களும் அவங்கள் சிரிக்கிற சத்தமும் என்னோட வந்தவை அழுற சத்தமும் கேட்டுச்சி. என்னையும் இருக்க வைச்சாங்கள். நான் அழேல. ஒரு வெடி. அப்படியே சரிஞ்சன். குவியலா கொண்டுபோய் எங்கையோ புதைச்சாங்கள். எப்பவாவது ஆரும் என்னைக் கண்டுபிடிச்சா அம்மா அப்பாட்ட சொல்லிப்போடாதேங்கோ. அவை எப்பவும் நான் இருக்கிறன் எண்டு நம்பிக்கொண்டு இருக்கட்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்

## வானம்

தே.யோ. தவராஜா,
இணுவில் கிழக்கு.

சூரிய சந்திரர்கள்
சுற்றி வரும்
சொக்கட்டான் பந்தல்
வெள்ளி நட்சத்திரங்கள்
ஒட்டிக் கொள்ளும்
தொங்கு மாடம்



## காற்றில்... கலந்தபடி

முல்லை ரமணன்.

பிச்சை... என
இச்சையில்
அழுகிய....வேர்பிடித்து
எழுந்த மனித
பிண்டங்கள்
அசிங்கமான
அந்த காரப் பொழுதில்
அந்தரிக்கும் பெண்
ஆத்மாக்களின் உடல்
எங்கும் ஆணவ
சம்மட்டிகளால்
ஓங்கி அறைந்த போது
எங்கும் ஈனக்குரல்கள்
காற்றில் கலந்தபடி

## அறிந்தும் அறியாமலும்

வே.வே. அகிலேஸ்வரன்.
மருதங்கேணியூர்.

வெண்ணிலவில்
முகம் பார்த்து
எண்ணம் போல
பாட்டிசைத்தேன்

கனவுகளை மொழி
பெயர்த்து
கவிதைகளை
எழுதிக் கொண்டேன்

அனுபவ வயதினிலே
அறிய மறந்து
துயரம் கொண்டேன்

ஆசை மூண்ட
பொழுதுகளில்
அவளின் நினைவை
நிறுத்தி
வருந்திக் கொண்டேன்

பொட்டு வச்ச
ராசிக்காறி
பித்தம் கொள்ள
வைத்துவிட்டாள்

சத்தம் போட்டு
என்னை
சட்டம் காண
வைத்துவிட்டாள்

திட்டம் போட்டு
நீயும் தந்த
வினைகள் பலவுண்டு

வெட்டவெளி
பரப்புக்களில்
சுடுகாட்டின்
சுவடுகளோ!

## நிலா

வாகீசன்,
இணுவில்.

அழகு நிலா நீ
மழலை மொழிபேசி
விழி சிரித்துச் செல்கின்றாய்
விழிகளில் அழகு செய்து
என் மன வீதிகளில்
பயணம் செய்கிறது-உன்
கருவிழிகள் பொன்னகை
நீ புன்னகை செய்கிறாய்
என் நகை கண்டு
விண்மகள் நீயென
கண்விழி தேடுது
உன் மொழி கேட்டு
உன் பருவ மழையில்
நனைந்தபாலைவனம்
நான் பருவக் காற்று
பார்வைகளால் எனை
அள்ளி சென்றவளே
என் மன சுவரில் தொங்குது
உன் பருவ ஓவியங்கள்

## காதல் பரிசு

வசந்தமது,
கொற்றயூர்.

என் அன்பே
கனவுகளைப்
பொய்யாக்கி
உன்நிஜமான
வாழ்க்கையை
நினைத்து
மெழுகுவர்த்தி போல்
உருகி உருகி
வாழும் எனக்கு -நீ
தந்த காதல் பரிசு
இந்த ஏமாற்றம் தானா?

## உயிர் போக்கக்கூடியவை

சேனையூரான்,
மூதூர் கிழக்கு.

விலை மாதர் சுகம் தரும்
விளையாட்டில் . உயிர்
உலைபோக்கும்நோய்
எயிட்ஸ்!

புகைப்பதும் புகையிலை
சுண்ணாம்பு
போடவாய் விளைவது
சுக வாழ்வுக்கு கேடு தரும்
புற்றுநோய்!

## ஜனநாயகவாதி

மு.கா முகம்மது அஸ்வர்,
திருகோணமலை.

துப்பாக்கி முனைகளுக்குப்
பயந்து தன் சுதந்திரமான
கருத்துக்களைச் கைது செய்து
சிறையிடுகின்றோம்

எங்களுடைய சமூகம்
அடக்கி ஒடுக்கப்படுகின்ற போது
விரட்டப்படுகின்ற போது
உரிமைகள் மறுக்கப்படுகின்ற போது
பார்த்துக் கொண்டிருக்காமல்
ஆத்திரப்படுகின்றோம்
ஆவேசப்படுகிறோம்

விரட்டப்பட்ட சமூகத்திற்கு
தொண்டு செய்வதும்
துரோகமாம்!

மக்கள் தந்த
ஆணையில்லாத எங்களுக்கும்
துப்பாக்கித் தோட்டாக்கள்
காத்திருக்கின்றனவாம்

## அழகு

கல்லொளுவை பாரீஸ்,
மள்வானை.

நிலவும் கதிரும் அழகு
நீலக் கடலும் அழகு
உலவும் காற்றில் செடிகள்
உதிர்க்கும் சருகும் அழகு!

மலரும் மலர்கள் அழகு
மாரி பொழிந்தால் அழகு
உயர்ந்த மண்ணில் உயிர்கள்
ஒளிர்ந்தால் உலகே அழகு!

அலறும் ஆந்தை அழகு
அந்திப் பொழுதும் அழகு
புலரும் வேளை தெருவில்
பூக்கும் கோலம் அழகு!

இலகு நீக்கல் அழகு
ஏழைச் சிரிப்பும் அழகு
உலகம் எங்கும் தமிழின்
ஓசை கேட்டால் அழகு!

## கடவுளே கண் திற




வே. முல்லைத்தீபன்,
ஒட்டிசுட்டான்.

சத்தத்திற்கும் சம்பவத்திற்கும்
சத்தியமாய் சற்றும்
தொடர்பில்லை
சிந்திப்பீராக....

பாழ்பட்ட வாழ்க்கையிது
வெளவாலாய் தொங்குகிறது

இருபத்தோராம்
நூற்றாண்டாகியும்
சிலுவையின்னுமே
யேசுவை சுமந்து
தானிருக்கிறது

கடன்பட்டு கட்டிய
கட்டுமரமெல்லாம்
காகிதக்கப்பலாய்
கரை தட்டுகிறது

சுற்றுலாக்கள்
சுடலைகளையும்
சுகமான நகரமாக
சுற்றிப் பார்க்கிறது

கட்டிய தாலியும்
கும்மிருட்டில் கணனுடன்
காணாமல் போகிறது

காவோலைகளை
காசோலைகளாக்கிட
குருத்தோலைகளும்
காலம் பார்க்கிறது

வறுத்த வயதுகளின்
விறைத்த உடல்களில்
விரதங்கள் மட்டும்
விலகவேயில்லை

இத்தனைக்கும்
அப்பாலும்...
கண்கண்ட
கடவுளர் கூட
குருடாயிருப்பதன்
கோட்பாடுதானென்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்தவர் குடும்பங்களை கெடுப்போம்

## நெடுந்தொடர்களின் பிடாப்பிடி

எப்போதுமே மற்றவர்களின் குடும்பங்களைக் குலைப்பதென்பது எம்மவர்களுக்கு இனிப்பான விடயம். இதனை நாடி பிடித் தறிந்து கொண்ட தமிழ் தொலைக் காட்சி அலைவரிசைகள் அதற்கேற் றாற் போன்ற கதைக்களங்களுடன் களமிறங்கி நெடுந்தொடர்களை வருடக்கணக்காக நீட்டி முழக்கி, காசு பார்ப்பதில் குறியாக இருக் கின்றன.

தமிழ் தொலைக்காட்சிகளில் கடந்த 10 ஆண்டுகளாக நெடுந் தொடர்களின் ஆதிக்கம்தான் அதிகரித்துள்ளது. முன்பெல்லாம் மாலை நேரங்களில் மட்டுமே ஒளிபரப்பான இந்தத் தொடர்கள் இப்போது காலை 10 மணி தொடங்கி இரவு 11 மணி வரை ஒளிபரப்பாகின்றன. 2013ஆம் ஆண்டில் பல புதிய தொடர்கள் புதியஅலைவரிசைகளிலும், ஏற்கனவே பிரபலமாகியிருந்த அலைவரிசைகளிலும் ஒளிபரப்பா கின. இதிலும் பெரும்பாலானவற் றின் கதை இருதார மணம், கள்ளத் தொடர்பு, குடும்பத்தைக் கெடுப் பது, குழந்தையை விஷம் வைத்துக் கொல்வது என்பவற்றையே உள்ள டக்கமாகக் கொண்டுள்ளன. ஏன் இப்படி என்று கேட்டால் மக்கள் அதைத்தான் விரும்புகின்றனர். அதிக நேயர்களை ஈர்ப்பதற்காகவே நாங்கள் இவ்வாறான கதையம்சம் கொண்ட தொடர்களை ஒளிபரப்புகிறோம் என்று பதில் சொல்கின்றனர் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள். 2013இல் ஒளிபரப்பான புதிய தொடர்களில் ஒருசில மட்டுமே விதிவிலக்காக சுவாரஸ்யமாக அமைந்துவிடுகின்றன. அடுத்தவர்களின் குடும்பங்களை எப்படி கெடுப்பது என்று பாடம் நடத்தும் சில தொடர்கள் பற்றிய பதிவுகள் சுடர் ஒளி வாசர்களுக் காக இங்கு தரப்படுகின்றன.

### வாணி ராணி

நடிகை ராதிகாவின் ராடான் ரீவி நிறுவனம் தயாரித்துள்ள தொடர் வாணி ராணி. அக்கா, தங்கை என இரட்டை வேடத்தில் ராதிகா நடித்துள்ள இந்தத் தொடரில் முதலில் குடும்ப ஒற்றுமை வலி யுறுத்தப்பட்டது. இப்போதோ, சொத் துக்காக குடும்பத்தை எப்படி பிரிப்பது என்று திட்டமிடும் கதையாக மாறி விட்டது (நேயர்களும் இதேவழியில் மற்ற வர்களின் குடும்பங்களைப் பிரித்து இன் புறலாம்)

### ஒபிஸ்

அலுவலகத்தில் நடக்கும் காதல், நட்பு, அரசியல், பகிடி என நகர் கிறது ஒபிஸ் நெடுந்தொடர். விஜய் ரீவியில் இரவு பத்துமணிக்கு ஆறு தலாக இருந்து பார்ப்பவர்களுக்கு பிடித்தமான தொடராக மாறிவிட் டது.

### வம்சம்

சொந்தங்களைத் தேடி ஒரு பயணம் என்றுதான் சொன்னார் ரம்யா கிருஷ்ணன். விஜயகுமார், வடிவுக்கரசி, ரம்யா கிருஷ்ணன் என மிகப்பெரிய நடிகர்கள் நடித்துள்ள இந்த தொடரின் கதையும் சொத்துக்காக சொந்த உடன்பிறப்பையே கொல்லும் கதையாக நகர்கிறது. சொந்தங்களை எப்படி நம்பவைத்துக் கழுத்தறுப்பது என்று யோசித்துக் கொண்டிருப்பவர்களுக்கு இந்த தொடர் ஒரு வரப்பிரசாதம்.



### வைதேகி

ஜெயா தொலைக் காட்சியில் திங்கள் முதல் வெள்ளி வரை தினமும் இரவு 8.30 மணிக்கு ஒளிபரப் பாகும் வைதேகி தொடர், குழந்தை களின் மெல்லிய உணர்வுகளையும், குழந்தை இல்லாத தம்பதிகளின் வலிய உணர்வுகளையும் கதைக் களமாக கொண்டது. நடிகர் அப்பாஸ் நாயகனாக நடிக்கும் இந்தத் தொட ரில், மீனு கார்த்திகா என்ற புது முகம் அவருக்கு இணையாக நடிக் கிறார்.

வைதேகி என்னும் கதா பாத்திரத்துக்கு உயிர் கொடுத் திருப்பது குழந்தை நட்சத்திரம் ஜெனோ. இதுவும் நாயகன் குடும் பத்தை தவிர மற்ற மனிதர்கள் எல்லோருமே வஞ்சகர்கள் என்ற ‘உயரிய’ தத்துவத்தை சொல்கிறது.

### வள்ளி

சன் ரீவியில் மதிய நேரத்தில் இல்லத்தரசிகளின் குட்டித் தூக்கத்தை கெடுக்கும் நெடுந்தொடர். மூன்று வில்லிகள், ஒரு நாயகி என அமைக் கப்பட்டுள்ள இதன் கதை, பெண்ணே பெண் ணுக்கு எதிரி என்ற கருவோடு, பார்ப்போருக்கு சக பெண்கள் மீது எப்போதும் சந்தேகத்தை உண்டு பண்ணும் வித்தையைக் கற்றுக் கொடுக்கிறது.



### மாமியார் தேவை

பொதுவாக மாமியார் கள் எல்லோரும் வீட்டுக்கு நல்ல மருமகள் தேவை என்று தேடு வார்கள். ஆனால் ஸீ ரீவியில் ஒளிபரப்பாகும் மாமியார் தேவை தொட ரில் குடும்ப ஒற்றுமை யைக் காக்க நல்ல மாம னாருக்கு ஏற்ற நல்ல மாமியாரைத் தேடுகி றாள் ஒரு மருமகள். அதாவது தன்னுடைய வயதான மாமானாருக்கு புறோக்கர் வேலை பார்க்கும் நாயகியின் கதை. ஐம்பதிலும் பலருக்கு ஆசையை வலிந்து ஏற் படுத்துகிறது இந்தத் தொடர்.

### புதுக்கவிதை

விஜய் ரீவியில் மாலை 6.30 மணிக்கு புத்தம் புதிதாக தொடங் கியிருக்கும் தொடர், புதுக்கவிதை.’ இது ஒரு மாறுபட்ட கதைக்களத் தில் பயணிக்கும் காதல் தொடர். புதுக்கவிதையான பெண்ணுக்கும், மரபுக்கவிதையான ஆணுக்கும் இடையே மலரும் காதல்தான் கதை.

### பொன்னூஞ்சல்

மதிய உணவு நேரத்தில் சன் ரீவியில் ஒளிபரப்பாகிறது இந்த தொடர் திருமணமான ஹீரோவிடம் இருந்து மனைவியை விரட்டியடித்து விட்டு மறுமணம் செய்து கொள்ள நினைக்கும் வில்லியின் அதரப்பழசானகதைதான் இந்தத் தொடரையும் ஆக்கிரமித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஹரீஸ்

இலங்கை அரசின் பல செயற்பாடுகள் வடிவேலுவின் நகைச்சுவைகளோடு ஒத்துப் போகும் தன்மையை அண்மைக் காலமாக அவதானிக்க முடிகின்றது. திரைப்படமொன்றில் வடிவேலு ஓட்டோ சாரதியாக வருவார். காலை எழுந்து தாய் தந்தையின் பாதத்திற்கு பூக்களால் பாத பூசை நடத்திவிட்டு பாதங்களில் முத்தமிட்டு தொழிலுக்கு கிளம்புவார். தொழிலுக்குப் போகும் போதே தாயின் முகத்தில் முழித்து விட்டுப் போவது வடிவேலுவின் வாடிக்கை. அவரின் ஓட்டோவில் பிரசவத்திற்கு இலவசம் என்று எழுதப்பட்டிருக்கும்.

அவ்வளவு மனிதாபிமானம் உள்ள ஜீவனாக நெற்றியில் திருநீறு, பொட்டு என மங்களகரமான வடிவேலு, மாலை ஆறு மணியானவுடன் தலை கீழாக மாறிவிடுவார். மப்பும் சாராய நொடியும் அவரின் முகத்தில் தெறிக்கும். பிறகு சொல்லவா வேண்டும். இரவில் வடிவேலுவின் ஓட்டோ சத்தம் கேட்டவுடனேயே அவரின் தாய்க்கும் பயம் தொற்றிவிடும். வந்தவுடன் தந்தையை காலால் எட்டி உதைத்து தாயைக் கண்டபடி பேசுவார். அப்போது தாய் கேட்பார் "ஏன்ரா காலமை அப்பிடி கும்பிட்டு புகழ்ந்திட்டு போனாய். இப்ப இப்பிடி கண்டபடி பேசுறாய் அடிக்கிறாய்?" என்று கேட்க, வடிவேலு சொல்லுவார்

"அது வேற வாய். இது நாற வாய்"

"இதே வேற வாய்: நாற வாய்" ஸ்ரைலை நடைமுறைப்படுத்துவதில் ஒற்றை இரட்டை பிடித்து வெளுத்து வாங்குகிறார்கள் ஆட்சியாளர்கள். இதற்கு மிக அண்மைய உதாரணம் புலமைப்பரிசில் பற்றிய அரசின் முரண்பட்ட கருத்துக்கள்

மாணவர்களின் சிறு வயதுப் புலமைகளைப் பரீசிலிக்கவும் தேசிய பாடசாலைகளுக்கு தரம் 6க்கு புதிய மாணவர்களை உள்ளெடுப்பதையும் நோக்காகக் கொண்டுவரப்பட்டதே இந்தப் புலமைப்பரிசில் பரீட்சை. ஆயினும் புலமைப்பரிசில் பரீட்சையின் பரிணாமம் இன்று மாணவர்களை பந்தயக்குதிரைகளாக மாற்றுவதில் வந்து நிற்கிறது. பிஞ்சுகளின் குழந்தைப்பராய ஆசைகளை முற்றாகப் புறந்தள்ளிவிட்டு, பெற்றோரின் கௌரவப் போராட்டத்துக்கு மாணவர்களின் கனவுகளை ஈடு வைக்கும் சூழ்நிலையை புலமைப்பரிசின் பரீட்சை உருவாக்கியிருக்கிறது. இதனாலேயே புலமைப்பரிசில் பரீட்சை தேவையற்றது என்ற கருத்து பரவலாக முன்வைக்கப்படுகின்றது. இப்போதைய காலத்தில் எல்லாப் பாடசாலைகளும் ஏதோவொரு அபிவிருத்தித் திட்டத்தில் இணைக்கப்பட்டு வசதிகள் கொண்டவையாக மாற்றம் பெற்று வருவதால் தேசிய பாடசாலையில் அனுமதி பெறுதல் என்ற தன்மை அருகி வருகின்றது.

ஆனால் புலமைப்பரிசில் பரீட்சை பற்றிய வாதப்பிரதி வாதங்கள் சூடு பிடித்துள்ள நிலையில், இது குறித்து முதலில் அறிக்கையிட்ட கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன புலமைப்பரிசில் பரீட்சையை ஒரு போதும் நிறுத்த முடியாது என ஆணித்தரமாகத் தெரிவித்தார். ஆனால் சிறிது காலத்தில் வேறொரு அமைச்சர் இல்லையில்லை. புலமைப்பரிசில் 2015 ஆம் ஆண்டுக்கு பின்னர் நடத்தப்படாது என்றொரு அறிவிப்பை வெளியிட்டார். அப்பாடா! இனி எங்கள் கனவுகளுக்கு எந்தத் தடையுமில்லை என்று சிறுவர்கள் மகிழ்ந்திருந்த போது, குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார் ஜனாதிபதி.

புலமைப்பரிசிலை நிறுத்துவது பற்றி அரசு ஒருபோதும் யோசிக்கவில்லை. அதை நிறுத்துவது பற்றி கருத்து வெளியிட்டது ஒரு அமைச்சரின் தனிப்பட்ட கருத்தே தவிர அரசின் கருத்தல்ல. புலமைப்பரிசில் பரீட்சை வழமை போலவே நடத்தப்படும் என்று அவர் அறிவித்துள்ளார். ஒரு பொறுப்பு வாய்ந்த அமைச்சின் கருத்தையே அரசின் கருத்தல்ல எனக் கூறும் மறுதலிக்கும் ஜனாதிபதியின் கருத்து உலகின் மிகச் சிறந்த நகைச்சுவை என்பதுதான் மக்கள் கருத்து. ஒருவேளை ஜனாதிபதியின் இந்தக் கருத்திலும் குழப்பம் ஏற்பட்டால் இது என் தனிப்பட்ட கருத்து அரசின் கருத்தல்ல என ஜனாதிபதியே தன் கூற்றை நிராகரித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. சிலவேளை அதற்கும் மேலே போய் அடுத்த ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கல்வியமைச்சர் அது ஜனாதிபதியின் கருத்தே தவிர அரசின் கருத்தல்ல எனப் பகிடிவிடவும் கூடும். எல்லாவற்றையும் சகிப்பதற்கு மக்களுக்குத்தான் பொறுமையை ஆண்டவன் தந்தருள வேண்டும்.

நாட்டின் எதிர்காலத்தூண்களான சிறுவர்களின் வாழ்வோடு விளையாடும் புலமைப்பரிசில் பரீட்சை பற்றியே ஒருமித்த கருத்தைக் கொண்டிராத இந்த அரசுதான், இனப்பிரச்சினைக்கு எல்லோரும் ஏற்க போகும் தீர்வைக் காணப்போகிறதாம். முதலில் கூரையேறிக் கோழி பிடியுங்கள், வைகுண்டம் போவது பற்றி பிறகு யோசிக்கலாம்.







**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

உங்கள் ராசிக்கு செவ்வாய், சுக்கிரன், சூரியன், புதனின் அமர்வு, அனுகூலமாக உள்ளது. புதிய வாய்ப்பு உருவாகி, பொருளாதார வளம்மேம்பட உதவும். உடன் பிறந்தவர்களிடம் கூடுதல் அன்பு, பாசம் நிலைத்துஇருக்கும். புத்திரரின் படிப்பு, பணிகளில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ஆரோக்கிய உடல்நலம் அமைந்து, மனதில் புதிய தெம்பைத் தரும். இல்லறத்துணை கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழிலில் வளர்ச்சி, உபரி பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் ஒருவருக்கொருவர் நட்பு பாராட்டுவீர்கள். மாணவர்கள், படிப்பில் சிறந்து, கூடுதல் தேர்ச்சி பெறுவர்.




**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

உங்கள் ராசிக்கு குரு, சனி, ராகு, சுக்கிரனின் அமர்வு நல்ல விதமாக உள்ளது. எவரிடமும் இனிய வார்த்தை பேசி, நற்பெயரும், செயல்களில் கூடுதல் நன்மைகளையும் பெறுவீர்கள். இல்லறத் துணையின் கருத்துக்கு, உரிய மதிப்பு தருவது நல்லது. தொழில், வியாபாரத்தில் புதிய ஒப்பந்தம் கிடைக்க முக்கியஸ்தர் உதவுவார். பணியாளர்கள், அதிக பொறுப்புணர்வுடன் நடந்து நற்பெயர், சலுகைப்பயன் பெறுவர். பெண்கள், குடும்பத்தின் அத்தியாவசியத் தேவைகளை சீராக நிறைவேற்றுவதில் கவனம் கொள்வர்.




**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

உங்கள் ராசிக்கு பதினொன்றாம் இடத்தில் உள்ள கேது, எட்டாம் இடத்தில் உள்ள புதன், தினகதி சுழற்சி கிரகம் சந்திரன் அனுகூல பலன்களை தருகின்றனர். மனதில் இனம் புரியாத சஞ்சலம் தீர, நண்பரின் ஆறுதல் வார்த்தை, உதவி துணையாக இருக்கும். இல்லறத்துணை கருத்துக்களை, விமர்சனம் செய்ய வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அரசின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப செயல்படுவது, சிரமம் தவிர்க்க உதவும். பணியாளர்கள், கூடுதல் வேலை வாய்ப்பு பயன்படுத்தி, பணவரவில் முன்னேற்றம் காண்பர்.




**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

உங்கள் ராசிக்கு மூன்றாம் இடத்தில் உள்ள செவ்வாய் மற்றும் தினகதி சுழற்சி கிரகம், சந்திரன் மட்டுமே நற்பலன் தருகின்றனர். மற்ற கிரகங்கள் எதிர்மறையாக செயல்படுகின்றனர். புதிய திட்டங்களை உங்கள் நலம் விரும்புபவரின் ஆலோசனை, உதவியுடன் மேற்கொள்ளலாம். தொழில், வியாபாரத்தில் அனுகூலத் தன்மையை அக்கறையுடன் பாதுகாக்க வேண்டும். பணியாளர்களில் சிலர் ஒழுங்கு நடவடிக்கையை, எதிர்கொள்ள நேரிடலாம். பெண்கள், குடும்ப செலவுகளில் சிக்கனம் பின்பற்றுவது அவசியமாகும்.




**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

உங்கள் ராசிக்கு கேது, செவ்வாய் தவிர, மற்ற கிரகங்கள் அனுகூல பலன் தரும் இடங்களில் உள்ளனர். உங்களின் தனித் திறமைகளை பயன்படுத்தி, செயல்களால் அதிக நன்மை பெறுவீர்கள். இல்லறத்துணை உங்களின் நல்ல குணம், செயல்களை மனமுவந்து பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி இனிதாக நிறைவேற்றுவீர்கள். பணியாளர்கள், தொழில்நுட்ப அறிவை வளர்த்துக் கொள்ள புதிய சந்தர்ப்பம் உருவாகும். பெண்கள், குடும்ப உறுப்பினர்களின் எண்ணங்களை மதித்து செயல்படுவர்.




**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

உங்கள் ராசிக்கு சுக்கிரன் மற்றும் தினகதி சுழற்சி கிரகம், சந்திரன் தவிர மற்ற கிரகங்கள், எதிர்மறை பலன் தரும் வகையில் உள்ளனர். இதனால், எந்த செயலிலும், நிதானமும், தகுந்த பரிசீலனையும் பின்பற்ற வேண்டும். இல்லறத்துணை ஆறுதல் தரும் வார்த்தைகளை பேசுவார். தொழில், வியாபாரத்தில் வருகிற இடையூறு தாமதமின்றி சரி செய்ய வேண்டும். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்டதிட்டம் மதித்து நடப்பது, சிரமம் வராமல் தவிர்க்கும். பெண்கள், தாய்வீட்டு உதவி பெற அனுகூலம் உள்ளது. மாணவர்கள் மிக சிறப்பாக படித்து, உயர்ந்த மதிப்பெண் பெறுவர்.




**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

உங்கள் ராசிக்கு சுக்கிரன், புதன், குருவின் அமர்வு, நற்பலன் தரும் வகையில் உள்ளது. கடந்த நாட்களில் தாமதமான செயல் நிறைவேற, புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். பகைமை குணம் உள்ளவரிடம் விலகுவதால், மனம், செயலில் பரிமளிப்பு திறன் அதிகரிக்கும். இல்லறத்துணை குடும்பத்தில் மங்கலத்தன்மை நிறைந்திருக்க, தேவையான பணி மேற்கொள்வார். தொழிலில் இருக்கிற அனுகூலம் மற்றும் குறைகளை அறிவதில் ஆர்வம் கொள்வீர்கள். அரசியல்வாதிகள், சமரச பேச்சு வார்த்தையில், இருதரப்பு நியாயம் கவனத்தில் கொள்ள வேண்டும்.




**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

உங்கள் ராசிக்கு சுக்கிரன், சூரியன், கேது, செவ்வாயின் அமர்வு அனுகூலமாக உள்ளது. வசீகரமாக பேசி, நண்பர்களிடம் கூடுதல் அன்பு, மரியாதை பெறுவீர்கள். வெளியூர் பயணம் நல்ல விதமாக அமைந்து, இனிய அனுபவம் தரும். புத்திரர், சில விஷயங்களில் பிடிவாதத்துடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் இலக்கை அடைய மாற்றுத் திட்டம் செயல்படுத்துவீர்கள். பணியாளர்கள், உடல் நலனில், உரிய கவனம் கொள்வதால் மட்டுமே, பணிகளில் ஈடுபாடு வளரும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்க, தாராள பணவசதி இருக்கும். மாணவர்கள், அதிக விலையுள்ள பொருள், கவனமுடன் பயன்படுத்தவும்.




**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

உங்கள் ராசிக்கு சுக்கிரன், குரு, சனி, ராகு நற்பலன் வழங்குகின்றனர். தாராள பணச்செலவில் குடும்பத்தின் தேவை பூர்த்தி செய்வீர்கள். நற்குணம் உள்ளவர்களின் அறிமுகம், உதவி கிடைக்கும். தாமதமான சில பணிகளை உத்வேகமுடன் செயல்படுத்துவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழிக்க, மாற்று உபாயம் பின்பற்றுவீர்கள். பணியாளர் சலுகை பெற, எளிமை குணத்துடன் அணுகுவர். பெண்கள், குடும்ப நலனில் உறுதுணையாக கணவருக்கு உதவுவர்.




**உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

உங்கள் ராசிக்கு பன்னிரெண்டாம் இடத்தில் உள்ள, சுக்கிரன் மற்றும் தினகதி சுழற்சி கிரகம் சந்திரன் மட்டுமே நற்பலன் தருகின்றனர். மற்ற கிரகங்கள் எதிர்மறையாக உள்ளனர். சிலர், உங்களின் தகுதிக்கு மீறிய நடைமுறைகளை பின்பற்ற வற்புறுத்துகிற நிலை உள்ளது. தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். பணியாளர் பணி இலக்கு நிறைவேற்ற கூடுதல் கால அவகாசம் தேவைப்படும். பெண்கள், சேமிப்பு பணத்தை, சிறு செலவுகளுக்கு பயன்படுத்துவர். மாணவர்கள், அறிவுத்திறனை வளர்க்க புதிய பயிற்சி மேற்கொள்வர்.




**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

உங்கள் ராசிக்கு கேது, குரு, சுக்கிரன் நற்பலன் தருகின்றனர். மனதில் ஆன்மிக நம்பிக்கை வளர்ந்து, இறைவனின் அருளை பெற்றுத் தரும். அக்கம் பக்கத்தவர் கூடுதல் அன்பு பாராட்டுவர். வீடு, வாகனத்தில் அபிவிருத்தி பணி நிறைவேற்றலாம். தொழில், வியாபாரத்தில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். பணியாளர்கள், நிர்வாகத்திடம் நற்பெயர் பெறும் வகையில் பணி புரிவீர்கள். குடும்ப பெண்கள், கணவரின் கருத்துக்கு ஆதரவாக, பொது இடங்களில் பேசுகிற நிலை உண்டு. மாணவர்கள், நன்றாக படித்து பெற்றோரிடம், பரிசுப் பொருள் வாங்குவர்.




**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

உங்கள் ராசிக்கு புதன், சூரியனின் அமர்வு அனுகூலமாக உள்ளது. இதனால், உங்களின் தகுதி, செயல்திறனை அதிகரிக்க, தேவையான பயிற்சி மேற்கொள்வீர்கள். புதிய சொந்தம் அறிமுகமாக, மனதில் கூடுதல் நம்பிக்கை பெறுவீர்கள். இல்லறத் துணையிடம் குடும்பத்தின் பழைய விவகாரம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சிறு அளவிலான குறுக்கீடு வந்து முயற்சிகளினால் சரியாகும். பணியாளர், எவருக்கும் தகுதிக்கு மீறிய அளவிலான, பணப் பொறுப்பு ஏற்கக் கூடாது. குடும்ப பெண்கள், கணவரின் கஷ்ட சூழ்நிலை விலக, உறுதுணையாக செயல்படுவது ஒற்றுமை வளர உதவும். மாணவர்கள், சாகச விளையாட்டுகளில் ஈடுபடக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வைத் தேடி.....

சிறுகதை

ரீ. ஆர். சக்தி,
கொழும்பு

வானச் சூரியன் மறைந்து விட்ட பொழுது, மீன் பிடிக்கும் வலையை எடுத்துக் கொண்டு கடலுக்குச் செல்ல ஆயத்தமான செல்லத்துரையை நோக்கி நல்லம்மா. இரவு கடலுக்குப் போனால் நாளை காலை தான் கரைக்குத் திரும்ப முடியும் என்பதால் இரவுச் சாப்பாட்டையும், குடிநீரையும் கையோடு எடுத்துப் போவது வழக்கமாகையால் அவற்றைக் கணவனிடம் கொடுத்தபடி "இன்னிக்கு கடலுக்குப் போய் தான் ஆகனுமா?" என்று கேட்டாள் நல்லம்மா.

அவளிடமிருந்து சாப்பாட்டையும், தண்ணீரையும் வாங்கிக் கொண்டு விட்டு "எல்லாம் தெரிஞ்ச நீயே இப்படிக் கேட்கலாமா நல்லம்மா? ரெண்டு நாளா ஒரே மழையும் காத்துமா இருந்ததால கடலுக்குப் போக முடியல. அதனால இப்ப கையில காசில்ல. நேத்து ராத்திரி முழுக்க அம்மா இருமிக்கிட்டே இருத்திச்சு. அதுக்கு மருந்து வாங்கவேணும். போர்வைக்குள் சுருண்டு படுத்திருந்த தன் தாயைப் பார்த் தான். பிறகு ஒரு பெருமூச்செறிந்து விட்டு "அதுவுமில்லாமல் நீ வேற நிறைமாசமாக இருக்கிறாய். நாளைக்கு உனக்குப் பிரசவம் ஆயிருச்சின்னா அதுக்கும் கையில காசு வேணாமா?" என்று கேட்டான் அவள் கணவன்.

"நீங்க சொல்கிறதெல்லாம் சரி தாங்க. ஆனா ரெண்டு நாளா அடிச்ச காத்து இப்பத்தான் ஓய்ச்சிருக்கு. அதுக்குள்ள கடலுக்குப் போறதினாலே எனக்குப் பயமாய்க் கிடக்குது".

"இதப்பாரு நல்லம்மா! இதையெல்லாம் பார்த்தா இப்ப முடியுமா? சந்தோசமாக வாழுறதுக்கு சம்பாதிக்க வேண்டாம் என்றால் இன்னிக்கு வேணாம் நாளைக்கு வேலைக்கு போகலாமென்னு தள்ளிப் போடலாம். ஆனா நம்மள மாதிரி இன்னிக்கு வேணாம். நாளைக்குப் போகலாமென்னு எதையும் தள்ளிப் போட நம்மால முடியாது" என்றான் செல்லத்துரை.

கணவன் சொல்வதிலிருந்து நியாயம் நல்லம்மாவிற்குப் புரிந்ததினால் தொழிலுக்குப் போகிற கணவனை கஷ்டப்படுத்தக் கூடாது என்று நினைத் தவள் "நடுக்கடலுக்குப் போறீங்க பத்திரமாய் போயிட்டு வாங்க. நீங்க திரும்பி வரும் வரைக்கும் உங்களுக்காக ரெண்டு பேரு தங்கட உசுரைக் கையில பிடிச்சுக் கிட்டு காத்திருக்கிறத மறந்துவிடாதீங்க" என்றாள். " அதை நான் மறப்பனா? முன்னெல்லாம் நீயும் அம்மாவும் மட்டும் தான். இப்ப இன்னொரு ஆளும் காத்திருக்கிறார். நீங்கள் எல்லோரும் எனக்காக இருக்கிறியள் என்ற நினைப்புத் தானே நடுக்கடலில் எனக்குத் துணையாயிருக்குது" என்று கூறிச் சிரித்தான் செல்லத் துரை.

அவனுக்காக காத்திருக்கும் அந்த இன்னொரு ஆள் யாரென்ற உண்மை தெரிந்தபடியால் வெட்கத்தால் தலை குனிந்த நல்லம்மாவிடம் விடை பெற்றுக் கொண்டு தன் நண்பர்கள் இருக்குமிடத்தை நாடிப் போனான் செல்லத் துரை. கடற்கரையோரத்தில் இரண்டு, மூன்று கட்டு மரங்களோடு செல்லத்துரைக்காக காத்துக் கொண்டிருந்தமீனவ நண்பர்கள் அவனை இன்னும் காணவில்லைஎன்று புலம்பிக் கொண்டிருக்கும் போதே அங்கு போய் சேர்ந் தான் செல்லத்துரை. ''என்னடா இப்படி ஆடி அசைந்து நேரங்கழிச்சு வராய்?" என்று எரிச்சலுடன் கேட்டான் ஒருவன்.

"சரி! சரி! எற்கனவே நேரம் போகுது தரைக் காத்து அடிக்கையில போனாத் தான் கடலுக்குள் போறதுக்கு வசதி யாய் இருக்கும் என்று செல்லத்துரை கூறவும் வேறு பேச்சின்றி கட்டுமரங்களை கடலுக்குள் தள்ளி விட்டு தாங்களும் ஏறி அமர்ந்து கொண்டு துடுப்புப் போட ஆரம்பித்தார்கள் அவர்கள்.

கட்டுமரமொன்றில் ஆளுக்கு இரண்டு பேராக இருந்து கொண்டு மூன்று கட்டுமரங்களில்வானத்து நிலவே விளக்காய் எரிய, தங்கள் குடும்பம் ஒரு வேளை உணவாவது வயிறார உண்பதற்கு, தங்கள் உயிரைப் பணயம் வைத்து ஆழ்கடல் தேடிப் புறப்பட்டார்கள் அந்த மீனவர்கள். கடலைப் பார்க்கும் போதெல்லாம் தான் சிறுவனாக இருந்த போது தாயிடம் கேட்ட கேள்விகளும் அதற்கு அவள் சொன்ன பதில்களும் தான் செல்லத்துரைக்கு ஞாபகம் வரும்.

"ஏம்மா கடலுக்குள் போறவங்க எல்லாம் துடுப்புப் போடுறாங்களே. கடலம்மாவிற்கு வலிக்காதா?" என்று கேட்பான் செல்லத்துரை.

அதற்கு அவன் தாய் சிரித்துக் கொண்டே "என்ன தான் பிள்ளைங்க தாய்க்கு வேதனை கொடுத்தாலும் பெற்ற தாய் அதை பொறுத்துக் கொள்வாள். அப்படித்தான் கடலம்மாவும் தன்னுடைய பிள்ளைகளான மீனவர்கள் என்ன வலியைக் கொடுத்தாலும் அதைப் பொறுத்திக்கிட்டு அவர்கள் வாழ்வதற்கு மீன்களைத் தருகிறாள்" என்று கூறுவாள்.

மறுபடியும் செல்லத்துரை"நாங்க எல்லாம் கடலண்ணையின் பிள்ளைங்கன்னா அவளின் வயித்துக்குள்ள வாழுற மீன்களும் அவளோட பிள்ளைங்கதானே. அந்தப் பிள்ளைகளை நாங்க எடுத்திட்டு வர கடலம்மா எப்படியம்மா சம்மதிக்கிறாள்?" என்று கேட்பான்.

அவனுடைய தாய் அவனை ஆச்சரியமாய்ப் பார்த்து விட்டு "நல்ல கேள்வி தான் கேட்கிற, கடல் தாய் எல்லோருக்கும் பொதுவானவள். யாரிடத்திலும் பாரபட்சமில்லாதவள். எங்களை உனக்குள் வாழவிடு என்று மீன்கள் கேட்டால் ஆகா என்று சந்தோசமாய் அனுமதிப்பாள். அதைப் போல நாங்களும் போய் மீன் பிடிக்காவிட்டால் எங்களுக்கு வேறு வேலை தெரியாது. இது தான் எங்கள் வாழ்வின் ஆதாரம். அதனால எங்களை மீன்பிடிக்க விடு என்று கேட்டால் அதையும் மறுப்பு சொல்லாம ஏற்றுக் கொள்வாள். செல்லத்துரை தனது பழைய நினைவுகளில் மூழ்கி இருந்த பொழுது அவர் கள் நடுக்கடலை அடைந்திருந்தனர்.

மறுநாட் காலை கடற்காற்று தரையை நோக்கி வீசும் நேரம் இரவு முழுவதும் மீன் பிடித்துவிட்டு கரையை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தனர்.


ராத்திரியில் எந்தவிதப் பிரச்சினையுமில்லாமல் அமைதியாயிருந்த படியாலும் எதிர்பார்த்ததை விட ஏராளமான மீன்கள் கிடைத்த படியாலும் எல்லோருமே மிகுந்த சந்தோஷத்திலிருந்தனர். "அம்மாவிற்கு மருந்து வேண்டலாம்.

"நீங்க சொல்கிறதெல்லாம் சரி தாங்க. ஆனா ரெண்டு நாளா அடிச்ச காத்து இப்பத்தான் ஓய்ச்சிருக்கு. அதுக்குள்ள கடலுக்கு போறதினாலே எனக்குப் பயமாய் கிடக்குது"

நல்லம்மாவிற்கு நல்லபடியாக பிரசவம் பார்க்கலாம் என்று நினைத்து மகிழ்ந்தான் செல்லத்துரை.

மனது நிறைந்த மகிழ்ச்சியோடு கரையை நோக்கிச் சென்றவர்கள் கரை கண்ணுக்குப் புலனானதும் அதிர்ச்சியுற்றனர். ஏனென்றால் கடற் கரை முழுவதும் அலங்கோலமாயிருந்தது. எப்போதும் கரையில் நின்று கொண்டிருக்கும் ஏனைய கட்டு மரங்களை யும், படகுகளையும் காணவில்லை. கடற் கரையோரத்திலிருந்த அவர்களின் வீடுகளையும் காணவில்லை. அதற்கு மாறாகத் தண்ணீரில் மிதக்கும் வீட்டுக் கூரைகளையும் மனித உடல்களையும் தான் அவர்கள் கண்டனர். என்ன நடந்தது? அவர் களுக்கு எதுவுமே புரியவில்லை. கரையை நெருங்க நெருங்க மரண ஓலங்களும், கண்ணீர்க் கதறல் களும் தான் கேட்டன. கரையை அடைந்தவர்கள் தத் தமது வீடிருந்த திசை நோக்கி ஓடினர்.

செல்லத்துரையும் தனது வீட்டைத் தேடி ஓடினான். அவனது வீட்டையும் காண வில்லை. "அப்பா! அம்மா!! நல்லம்மா!!! என்று கத்திக் கதறிய வண்ணம் அங்குமிங்கும் ஓடினான் செல்லத்துரை. "என்ன நடந்தது? என்று அங்கே சூழ்ந்திருந்தவர்களிடம்கேட்டான். தண்ணீருக்கிடையில் கண்ணீரோடு தங்களின் உறவுகளைத் தேடியவர் பொங்கியெழுந்து , வீட்டோடு சேர்த்து மனிதர்களையும் இழுத்துச் சென்ற கொடுமையை அவர்கள் கூறினார்கள்."நீங்க வர்றவரைக்கும் என் உயிரைக் கையில பிடிச்சபடி இருப்பேன்னு சொன்னியே. இப்ப நான் வந்திட்டேன். பிடிச்சுக் கிட்டு போயிட்ட நல்லம்மா?" என்று கோவிக் கோவி அழுதான் செல்லத்துரை."அம்மா! நாம தப்புப் பண்ணினா கடலம்மாவிற்கு கோபம் வந்து பொங்கி யெழுந்துடுவான்னு சொன் னியே. இப்ப நாம என்னம்மா தப்பு செஞ்சோம்? இப்படி எங்களிடம் இருந்து எல்லாத்தையும் பறிச்சுக் கிட்டு போயிட்டாவே என்று கதறியழுதபடி கேட்டவனின் கேள்விகள் இனி வரும் காலத்திலும் பதில் சொல்லவும் முடியாது. பதில் சொல்ல அவன் தாயும் அங்கில்லை. இனிவரும் காலத்தில் எத்தனையோ மாலைப் பொழுது வரலாம். எத்தனையோ முறை தரைக் காற்று கடல் நோக்கி வீசலாம். செல்லத்துரையின் வாழ்வில் இனி ஒளி வீசுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வீரம் திரைவிமர்சனம்

பொங்கல் திருவிழா, பொய்க்கால் குதிரைகள், பறையடி முழக்கம், பரவை முனியம்மாவின் பாட்டு, என அசல் தமிழ்க் கிராம வாசனை. வெள்ளை வேட்டி, வீச்சருவாள், ஆட்டம்பாட்டம், அடிதடி என வீரமுள்ள இளைஞனாக அஜித். அழகு தேவதையாக தமன்னா.

சிரிக்க வைக்க சந்தானம். ஒரு மசாலாத் தமிழ்த் திரைப்படம் வெற்றிபெற வேறென்ன வேண்டும்? அஜித்துக்கு நான்கு தம்பிகள். சந்தானம் உடன் பிறவாத தம்பி. ஒற்றுமை பாதிக்கப்படும் என சகோதரர்கள் திருமணம் முடிக்காமல் இருக்கிறார்கள். கல்யாணம் என்று பேச்செடுப்பவர்களை வெளுத்துக் கட்டுகிறார் அஜித். ஆனால் தம்பிகளுக்குக் காதல் வருகிறது.

தம்பிகளுடன் சேர்த்து அஜித்துக்கும் கல்யாணம் செய்துவைக்க சந்தானம் திட்டம் போடுகிறார். அதற்கேற்ப கோப்பெருந்தேவியாக வந்து சேர்கிறார் தமன்னா. குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்... பாடல் பின்னணியில் இசைக்க குத்துவிளக்கைக் கையில் ஏந்தி வருகிறார்.

தமன்னா அமைதிப் புறா. ஆனால் அஜித்தோ அடிதடி மன்னன். இவர்களை இணைத்து வைக்க சந்தானம் தம்பிகளுடன் திட்டங்கள் வகுக்கிறார்.

அஜித்தை அமைதியானவராகவும் பிராணிகளுடன் சிநேகம் உடையவராகவும் காட்டுகிறார்கள். முதல் பாதியில் சந்தானத்தின் கொடி பறக்கிறது. வில்லன் போல் அறிமுகமாகும் ப்ரதீப் ராவத் பிற்பாதியில் வேடிக்கைப் பொருளாக ஆகிறார்.முதல் பாதி காதலும் நகைச்சுவையுமாக முடிய, பிற்பாதி அதிரடியான சண்டையுடன் தொடங்குகிறது. தமன்னாவின் அப்பா நாசருக்கு அடிதடி சண்டை பிடிக்காது. தன் மகளையும் அடிதடிக்குப் போகாத ஒருவனுக்கு கட்டிவைக்கவே விரும்புகிறார். அஜித் அடிதடிகளையெல்லாம் விட்டு விட்டு தமன்னா வீட்டுக்குத் தம்பிகளுடன் வருகிறார். ஆனால் சண்டை அவரை விடுவதாக இல்லை. கடைசியில் என்ன நடக்கிறது?

அடிதடி, சண்டை, காதல், இரட்டை அர்த்த வசனங்கள், உணர்ச்சி எல்லாம் வழக்கம்போல் இருக்கின்றன. ஆனால் எல்லாவற்றையும் சரியாகக் கலந்து வைத்திருக்கிறார் இயக்குநர் சிவா. அஜித்தை, இயக்குநர் சிறப்பாகக் கையாண்டுள்ளார். அஜித் அளவாகவே பேசுகிறார். அஜித்திடம், தம்பிகள் தங்களுடைய காதலை சொல்லும் இடம் ரசனை.பல காட்சிகள் யதார்த்தத்தை மீறுகின்றன. சண்டைக் காட்சிகளும் பாடல் காட்சிகளும் சாதுவானவர்களின் நரம்பையும் புடைக்கச் செய்கின்றன. இசை தேவி ஸ்ரீ பிரசாத். கிராமியச் சாயல் கொண்ட பாடல்கள் தாளம் போட வைக்கின்றன . வெற்றியின் ஒளிப்பதிவு உறுத்தாத வகையில் இணைந்து வருகிறது. பரதனின் வசனங்களுக்கு அரங்கில் நல்ல வரவேற்பு.

பழைய அஜித்தை இரண்டாம் பாதியில் பார்க்கலாம். தலை நரைத்தாலும் தல ஜொலிக்கிறார். சண்டைக் காட்சிகளில் பட்டையைக் கிளப்புகிறார். தமன்னா எப்போதும் கோயில் சிலைகளைத் துடைத்துக் கொண்டே இருக்கிறார். தொல்பொருள் ஆய்வாளராம்.

ஆங்காங்கே சில அபத்தங்கள் இருந்தாலும் படம் வேகமாக ஓடுகிறது. மசாலா படப்பிரியர்களைக் குறிவைத்திருக்கும் இப்படத்தில் கலவை சரியாக உள்ளதால் பார்வையாளர்களைக் கவர்கிறது. இறுதிக்காட்சியையாவது முன்னர் வந்த படங்களில் இல்லாத மாதிரி புதிதாக - வேறு மாதிரி- இயக்குநர் சிவா யோசித்திருக்கலாம்.



# வருத்தப்படும் சங்கம்?

'வருத்தப்படாத வாலிபர் சங்கம் நாயகி ஸ்ரீதிவ்யாவை முதன்முதலில் 'காட்டுமல்லி படத்தில் நான்கு லட்சம் சம்பளம் பேசி நடிக்கவைத்தார்கள். படம் பாதியில் நிற்க, ஸ்ரீதிவ்யாவோ, 'வருத்தப்படாத வாலிபர் சங்கம், 'பென்சில் என மின்னத் தொடங்கிவிட்டார். இப்போது 'காட்டுமல்லியில் நடிக்க அழைத்தால், அவர்40 லட்சம் கேட்கிறாராம். இதனால் தயாரிப்பாளர் தரப்பு வருத்தப்படும் சங்கமாகக் கவலையில் மூழ்கியுள்ளது.

# வந்தது ஆசை

'மான் கராத்தே படத்துக்குப் பிறகு, ரசிகர் மன்றங்களை ஆரம்பித்து விரிவுபடுத்தும் வேலையில் இறங்கப்போகிறாராம் சிவகார்த்திகேயன்.ஆரம்பத்தில் எனக்கு இந்த ரசிகர் மன்றங்கள் எல்லாம் தேவையில்லை. அதில் எனக்கு உடன்பாடும் கிடையாது என்றெல்லாம் அறிக்கை விட்டவர்தான் சிவகார்த்திகேயன். ஆனால் அவருக்கும் இப்போது மற்ற நடிகர்கள் போல ரசிகர் மன்ற ஆசை வந்துவிடது.



# கொடுத்து வைத்த விதார்த்

இப்போது தமிழ் சினிமாவில் முத்தக் காட்சிகள் மிகவும் மலிந்துவிட்டன. 'பட்டயைக் கிளப்பு பாண்டியா படத்துக்காக விதார்த்தும் - மனிஷாவும் மழையில் நனைந்தபடி சாலக்குடி அருகே முத்தக் காட்சியில் நடித்தார்கள். ஆனால் எதிர்பார்த்தபடி காட்சி யமையவில்லை என்பதால் 8 எட்டுத்தரத்துக்கும் மேலாக இந்தக் காட்சியில் நனைந்தப்டி விதார்த்தும், மனிஷாவும் நடிக்க வேண்டியதாயிற்று. என்றாலும் கொடுத்து வைத்தவர்தான் விதார்த்.

# தேவதைகளின் ஆதங்கம்



நயன்தாரா தெலுங்கில் 'அனாமிகா மாதிரியான நாயகிக்கு முக்கியத்துவம் உள்ள கதைகளையே தேர்வுசெய்து நடிக்கிறார். அதேபோன்று அனுஷ்கா 'ருத்ரம்மா தேவி, ப்ரியாமணி, 'சண்டி, ஸ்ரேயா 'பவித்ரா என்று நாயகிக்கான முக்கியத்துவம் வரும் படங்களில்தான் அதிகம் நடிக்கிறார்கள். ஆனால் தமிழில் மட்டும் இவர்களுக்கு அப்படியான வாய்ப்புகள் கிடைப்பது இல்லை. அப்படி தமக்கு முக்கியமுள்ள கதையுள்ள படங்கள் கிடைத்தால் தானே தம்மிடமுள்ள நடிப்புத்திறன் வெளிப்படும் என்று இந்த நடிகைகள் ஆதங்கப்படுகிறார்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஜில்லா படத்தை இயக்கிய ஆர்.டி. நேசன், அடுத்து தெலுங்கில் மகேஷ் பாபுவை வைத்து படமெடுக்க இருந்தார். ஆனால், ஏ.ஆர்.முருகதாஸ் படத் தை முடித்துவிட்டு வந்ததும் நாமே இன்னொரு படம் பண்ணலாம் என்றாராம் விஜய். இதனால் மகேஷ் பாபுவை விட்டுவிட்டு மீண்டும் விஜய்க்காக கதை ஒன்றை தேடும் பணியில் இறங்கிவிட்டார் நேசன்.

## மீண்டும் விஜயோடு



## மம்முட்டியின் பாராட்டு

மம்முட்டி மகன் துல்கர் சல்மான் நடித்துள்ள 'சலாலா மொபைல்ஸ் படத்தில் நஸ்ரியாவின் நடிப்பைக் கண்டு மம்முட்டி நேரில் பாராட்டியுள்ளார். இதனால் துள்ளிக்கு திக்காத குறையாக மகிழ்ச்சியில் மிதக்கிறார் நஸ்ரியா. இந்தப் படத்தில் நகைச்சுவை நடிகர் சந்தானமும் வெளுத்து வாங்கியுள்ளாராம்.விரைவில் அவருக்கும் மம்முட்டியின் பாராட்டுக் கிடைக்கலாம்.



## புதிய கூட்டணி

விஷால் - ஹரி கூட்டணியில் புதிய படம் மார்ச் மாதம் ஆரம்பமாகவிருக்கிறது. இந்தப்படத்தின் கதையில்தான் கார்த்திதான் நடிப்பதாக இருந்தது. ஆனால் அடுத்தடுத்து ஏற்பட்ட சரிவுகளால் கொஞ்ச நாளைக்கு இப்படியான அரிவாள் தூக்கும் கதைகளை விட்டு நல்ல கதைகளில் மட்டுமே கவனம் செலுத்தப் போவதாக கார்த்தி முடிவெடுத்ததால் விஷாலோடு சேர்ந்துள்ளார் ஹரி.

விஜய் - மோகன்லால் என இரண்டு பெரிய நட்சத்திரங்களை வைத்து சரியான காட்சிகளை அமைத்த வித்தில் ஜில்லா வந்திருக்கு நல்லா!மதுரையின் பெரும் தாதா சிவன் (மோகன்லால்). அவரது கார்ச் சாரதி பொலிஸ் அதிகாரியால் கொல்லப்பட, அவரது மகன் சக்தி(விஜய்)யை எடுத்து வளர்க்கிறார். சக்திக்கு பொலிஸ் என்றாலே ஆகாது. எனினும் சந்தர்ப்ப வசத்தால் பொலிஸில் செல்வாக்குள்ள தங்களுடைய ஆள் வேண்டும் என்பதற்காக சக்தியை பொலிஸ் ஆக்குகிறார் சிவன். அதற்குபிறகு ஏற்பட்ட வெடிவிபத்தில் சிவன் - சக்தி இருவருக்கும் இடையே மோதல் ஏற்படுகிறது. இறுதியில் என்ன ஆனது? ஜெயித்தது யார்?என்பதுதான் ஜில்லா படத்தின் பரபர திரைக்கதை.விஜய், மோகன்லால் என இரண்டு பெரிய நட்சத்திரங்களை வைத்துக் கொண்டு, இருவரது ரசிகர்களையும் திருப்திப்படுத்தும் விதத்தில் காட்சி அமைப்பில் கவனத்தை ஈர்க்கிறார் இயக்குநர் நேசன். மதுரை தாதா வாக நரை தாடியுடன் மோகன்லால், நடிப்பில் பின்னியிருக்கிறார். மோகன்லாலை பின்பற்றுவது, அவரின் எதிரிகளை பந்தாடுவது, பொலிஸாக வந்தவுடன் மோகன்லாலை திருத்த நினைப்பது என நடிப்பில் வித்தியாசம் காட்டுகிறார் விஜய். இடைவேளையில் விஜய் - மோகன்லால் பேசும் வசனக் காட்சிகள், படத்தை தூக்கி நிறுத்துகின்றன.

விஜய்யுடன் நடனமாட ஒரு பெண் வேண்டுமே என நாயகியாக காஜல் அகர் வாலை சேர்த்திருக்கிறார்கள். பாடலுக்கு மட்டும் இருந்தால் பத்தாது என்று சில காட்சிகளில் வந்து தலைகாட்டிச் செல்கிறார். விஜய், மோகன்லால் இருவரையும் தொடர்ந்து அடுத்த இடத்தில் சூரி. பொலிஸ் கான்ஸ்டபிளாக இவர் பேசும் வசனக் காட்சிகள் சிரிப்புச் சரவெடி. இந்தப்படத்தின் மூலம் இனி முக்கிய நாயகர்களின் படங்களில் சூரியைக் கட்டாயம் எதிர்பார்க்கலாம்.

பாடல்கள் மட்டுமல்லாது படத்தின் பின்னணி இசையிலும் ஈர்க்கிறார் இசையமைப்பாளர் இமான். ' பொலிஸ் உடை போட்டுக் கொண்டு விஜய் நடந்து வரும் காட்சிகளில் இவரின் பின்னணி இசை ஓஹோ. கணேஷ் ராஜவேலுவின் ஒளிப்பதிவில் நிறைய இடத்தில் வரும் காட்சிக்கோணங்கள் பிரமிக்க வைக்கின்றன.

படத்தின் குறை என்றால் படத்தின் நீளம் தான். 3 மணி நேரம் ஓடக்கூடிய படமாக இருக்கிறது 'ஜில்லா'. மிகவும் நீளமான படம் என்பதால் எப்போது முடியும் என்ற கேள்வி எழுகிறது. அதுமட்டுமன்றி இடைவேளைக்கு முன்பு இருந்த சுவாரசியம், பின்பு இல்லை. வில்லன் இவன் தான் என்று தெரிந்த பின்னரும் நீளும் காட்சிகள் பொறுமையைச் சோதிக்கின்றன. இடைவேளைக்குப் பின் பரபரப்பாக போய்க் கொண்டிருக்கும் திரைக்கதையில் பாடல்கள் ரசனைக்குத் தடைகளாக இருக்கின்றன.

விஜய், மோகன்லாலுக்கு சரியான விதத்தில் காட்சிகளை அமைத்த சுவாரசியத்தை படத்தின் நீளத்திலும் காட்டியிருந்தால் இன்னும் ஜொலித்திருக்கும் 'ஜில்லா'

## ஜில்லா



## திரைவிமர்சனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சுடர் ஒளி / ஜனவரி -15 - 21, 2014

● ஔண்யன்




# இருளின் கதவைத் திறந்தவன்

அமெரிக்கா வெளியில் தான் ஜென்ரில்மன். ஆனால் அது களத்தில் இறங்கிவிட்டால் தொழில்முறைப் பாதாளக் குழுக்களே பிச்சை வாங்குமளவுக்கு எவ்வளவு கீழ்த் தரமான வேலைகளையும் செய்யத்தயங்காது. யூலியனை வீழ்த்துவதற்கான வலையை ஒருமுனையில் மாத்திரமே பின்னாமல் எல்லாத் திசைகளிலிருந்தும் விரிக்க ஆரம்பித்தது.

எப்போதும் சக நாடுகளிடம் அதிகாரத்துடனேயே பேசிக் கொண்டிருந்த அமெரிக்காவை அவற்றிடம் பணிந்து, தாழ்வான குரலில் பேச வேண்டிய நிலையை கேபிள் ஆவணங்களின் வெளியீடு ஏற்படுத்தியிருந்தது .எனவே சுவீடனுக்கு அது நெருக்குதலை இடைவிடாது கொடுத்த படியே இருந்தது. அமெரிக்காவின் ஆய்க்கினை காரணமாக யூலியனைப் பிடித்து, அன்னா சோபியா ஆகியோர் தொடுத்த வழக்குக்காக கொண்டு வர வேண்டும் என இன்ரபோலிடம் சுவீடன் கோரிக்கை விடுத்தது.

இதை இதைத்தான் எதிர்பார்த்திருந்தேன்! என்று கூவிக்கொண்டே, சர்வதேசக் கைது உத்தரவை இன்ரபோல் பிறப்பித்தது. உலகிலேயே முதன் முறையாக ஆணுறை பயன்படுத்தாமல் உறவு கொண்டமைக்காக இன்ரபோலின் தேடப்படுவோர் பட்டியலில் இடம்பிடித்த. பெருமையும் யூலியனை வந்தடைந்தது. அந்தளவுக்கு அமெரிக்காவின் பொம்மையாக இன்ரபோல் மாறியிருந்தது. யூலியனை ஒப்படைக்குமாறு இன்ரபோல் பிரிட்டனிடம் சமர்ப்பித்த கோரிக்கை ஆவணத்தில் இருந்த பெயர் தவறாக இருந்ததால் அதனைச் சுட்டிக் காட்டி யூலியனை கைது செய்ய முதலில் பிரிட்டன் மறுத்து விட்டது. இதனால் பிரிட்டனுக்கு பட்டர் பூசும் வேலையில் அமெ ரிக்கா இறங்கியது.

அதேநேரம் விக்கிலீக்ஸின் மீதான நேரடியாகத் தாக்குதலும் அமெரிக்காவால் தொடுக்கப் பட்டது. பொதுவாக ஒரு இணையதளத்தின் பெயர் என்பது தனிப்பட்ட விஷயம் (domain name), அந்த இணையத் தளத்திற்கானக் கோப்புகளை அல்லது தகவல்களை வைத்திருக்கும்கணிணிவழங்கிஎன்பதும் இன்னொரு தனி விஷயம் (hosting server). இந்த இரண்டையும் கோர்த்து விடும் போது தான் நீங்கள் உங்கள் உலாவியில் (browser) இணையதளத்தின் பெயரை உள்ளிட்டதும் அத்தளத்தின் தகவல்களைப் பார்க்க முடிகிறது. உலகில் உள்ள ஒவ்வொரு இணையதளத் தின் பெயரும் அதன் கோப்புகளைக் கொண்ட வழங்கி பற்றிய தகவலும் சேமிக்கப்பட்டிருக்கும் இடம் தான் இணையதளப் பெயர் வழங்கி டி.என்.எஸ். (DNS d Domain Name Servers).

விக்கிலீக்ஸ் தளத்திற்கென்று உலகெங்கும் பல நிறுவனங்களிடமும் கோப்புகளை சேமித்து வைத்து தங்கள் இணையதளத்திற்கு வழங்குவதற்கு ஏதுவாக வழங்கி சேவைகளை (hosting servers) யூலியன் பெற்றிருந்தான். அதன் மூலம் ஒவ்வொரு நாட்டு மக்களும் தங்கள் நாட்டிலுள்ள வழங்கிகள் மூலமே விக்கிலீக்ஸ் தளத்தினை எளிதாக, விரைவாக பார்வையிட முடியும்.

விக்கிலீக்ஸ் தளத்தில் முக்கிய ஆவணங்களை வெளியிடும் ஒவ்வொரு முறையும் இது போன்ற சில ஏற்பாடுகளை யூலியன் செய்து வைப்பது வழமை. இதற்கு முதல்காரணம், ஒரு இடத்தில் தளம் முடக்கப்பட்டால் மறு இடத்தில் வேலை செய்யும். இரண்டாவது, பார்ப்போர் தொகை எகிறும் போது, இணையப் போக்குவரத்து அதிகமாகி தளம் செயல்பட முடியாமல் போக வாய்ப்பிருப்பதால் இணையப் போக்குவரத்தினை பல்வேறு கோப்பு வழங்கிகளுக்கும் பிரித்தனுப்பிச் சமாளிக்க முடியும்.

அமெரிக்க அரசாங்கத்தின் நெருக்கடியால் விக்கிலீக்ஸ் தளத்துக்கான அனைத்து டி.என்.எஸ் ( DNS) சேவைகளும் முடக்கப் பட்டன, உலகப் புகழ்பெற்ற அமேசான் (Amazon.com) நிறுவனம் விக்கிலீக்ஸ் தளத்துக்காக தாங்கள் வழங்கி வந்த கோப்பு வழங்கிகளுக்கான(hosting server) சேவையினை நிறுத்தியது. இதனால் இனி யாரும் விக்கிலீக்ஸ் தளத்தினைப்பார்க்கவே முடி யாது என்று நினைத்து, பட்டாசு கொளுத்தி மகிழ்ந்தது அமெரிக்கா. ஆனால் விக்கிலீக்ஸ் முடக்கப் பட்ட மறுநொடியே தங்கள் தளத்தினை 30க்கும் மேற்பட்ட வெவ்வெறு புதிய இணையத்தள முகவரிகள் மூலம் பார்க்கலாம் என்று விக்கிலீக்ஸ் சார்பில் தெரிவிக்கப் பட்டது. இவ்வாறு ஒரு மூல இணையத்துக்கு மாற்றீடாக இயங்கும் இணைய சேவைக்கு மிரர் (கண்ணாடி) இணையம் என்று பெயர். இணையத்தில் வலையேற்றப்பட்டிருக்கும் ஒரு இணையத் தளத்தை பெயருக்கேற்றாற் போல் அப்படியே கண்ணாடியாக பிரதிபலிப்பது தான் இதன் வேலை. மூல இணையத்தளத்தில் என்னென்ன மாற்றங்கள் ஏற்படுகிறதோ அடுத்த நிமிடமே அப்படியே நகலிலும்-மிரர் இணையத்தளத்திலும் - பிரதிபலிக்கப்படும். இந்த நடவடிக்கையால் 30 முகவரிகள், நூறாகி, நானூறாகி, தற்போது ஐநூறுக்கும் மேலான இணையத்தள முகவரிகளின் மூலம் விக்கிலீக்ஸ் தளத்தினைப் பார்வையிடும் வண்ணம் ஏற்பாடுகள் களை கட்டின.

யூலியனின் இந்த அசுர வேகத்திலான முறியடிப்புச் சமரைப் பார்த்து அமெரிக்கா வாயடைத்துப் போனது.

ஊடக சுதந்திரம் தொடர்பாக ஊரெல்லாம் உபதேசம் செய்யும் அமெரிக்காவில் உள்ள ஒரு ஊடக நிறுவனமான அமேசான் எவ்வா றெல்லாம் அரசால் கட்டுப் படுத்தப்படுகின்றது என்பதை உலகுக்கு உணர்த்தவே அந் நிறுவனத்திடம் வழங்கிச் சேவையினைப் பெற்று, இத்திருவிளையாடலை நிகழ்த்தினோம் என்று -சினிமாப்படங்களில் வருகின்ற தெய்வங்களின் திருவிளையாடல் விளக்கக் காரணம் போல -யூலியன் அலட்சியமாக சொல்லி வைக்க, அமெரிக்காவின் பிரஷர் மேலும் எகிறியது. யூலியனுக்குகைவிலங்கைப்பூட்டி சிறைப் பறவையாக்குமாறு அமெரிக்கா பிரிட்டனுக்கு இரகசியமாக ஆணை யிட்டது.

(திரைகள் இன்னும் திறக்கும்)

எழுதுவது.....

## ஹாய்! செல்லப்பா!!



ஒருவர் ஒரு நாளைக்கு பலதடவை பயன்படுத்தும் சொல் என்னவென்று எனக்குள் ஒரு ஆராய்ச்சி..இதற்காக பல தடவைகள் தெருவால் போகும் போதும் வேலை செய்யும் இடங்களிலும் காதைக் கொடுத்துக் கேட்டேன்.அநேகரால் ,அநேக தடவை பயன்படுத்தப்படுவதில் முதலிடம்பெறும் சொல், "ஹலோ ஹலோ" அந்த வகையில் முதலாமிடம் பெறும் சொல் "ஹலோ"



இரண்டாம் இடம்பெறும் சொல், விளங்கவில்லை. இரண்டாம்இடம் பெறும் சொல், விளங்கவில்லை என்பது. பாடசாலைகளிலும் அநேக பிள்ளைகள் வெளியில் சொன்னாலும் சொல்லா விட்டாலும் பயன்படுத்த விளையும் சொல் விளங்கவில்லை ஊன்றி ஆராய்ந்தால் வேறு சொற்களும் அகப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணிற்கு பெருமை சேர்ப்பது வீடா...? அலுவலகமா...?

வெளியில் சென்று சாதிக்க வேண்டும் என்று நினைக்கும் பெண்கள் திருமணத்தை ஒரு தடையாக நினைக்கிறார்கள். அலுவலக வேலையும், வீட்டு வேலையையும் சேர்த்துச் செய்ய நேரிடும் போது, அதை ஒருவித கசப்பு உணர்வுடனேயே செய்கிறார்கள். அலுவலகத்தில் ஏதேனும் குறை ஏற்பட்டால் அதற்கு தங்கள் திருமண வாழ்க்கை தான் காரணம் என்று நினைக்கிறார்கள்.

வீட்டில் சின்னச் சின்ன பிரச்சினை என்றால் கூட அதற்கு அலுவலகம் தான் காரணம் என்று நினைக்கிறார்கள். பிரச்சினைகள், குறைகள் எப்போதும் வரக்கூடிய ஒன்று தான். அதை யாராலும் தவிர்க்க முடியாது. திருமணம், அதைத்தொடர்ந்து புதிய வாழ்க்கை சூழல், புதிய சொந்தங்கள் என்று அவள் அல்லாடும்போது தெரிந்தோ தெரியாமலோ அலுவலக நேரத்தில் கூட கொஞ்சம் குடும்பத்துக்காக அவள் பங்கு வைக்க நேர்ந்து விடுகிறது.

பெண்ணின் வாழ்க்கையில் திருமணம் என்பது முக்கியமான அம்சம். வீடு-அலுவலகம் இரண்டுக்கும் தனித்தனி இடம் இருக்கிறது.

அலுவலகத்தில் என்ன நடந்தாலும் அதை வீட்டிற்குக் கொண்டு வரக் கூடாது. அதற்கான மன நிலையை உருவாக்கிக் கொள்வதில் தான் வெற்றி இருக்கிறது. உத்தியோகமும், திருமணமும் நாணயத்தின் இரண்டு பக்கங்கள். அதை யாராலும் தவிர்க்க முடியாதது.



படித்து முடித்ததும் வேலை தேடுவது எவ்வளவு முக்கியமோ, அதே அளவு முக்கியத்துவம் வாய்ந்தது திருமணம். வயதில் மூத்த பெண்களிடம் ஆலோசனை கேட்கலாம். அடுத்தவரின் அனுபவத்தை கேட்டறிந்து கொண்டு இரண்டையும் சமன்படுத்திக் கொள்ளலாம்.

குடும்பத்துக்காக வேலை வேலை என்று முழுக்க அதிலேயே மூழ்கி பல புரமோஷன் பார்த்த பெண்கள் கூட ஒருகட்டத்தில் தங்கள் மணவாழ்வுக்கான சிந்தனைக்குள் வரும் போது, அதற்குள் 40 வயது கடந்து விடுகிறது. அதன்பிறகு இந்த வயதில் திருமணமா என்ற ஒரு கேலிப்புன்னகைக்கு பயந்து தங்கள் திருமணக் கனவை அத்தோடு புதைத்து விட்டுப் போகும் பெண்களும் உண்டு.

முதுமை நாட்களில் தங்கள் வயதையொத்த தோழிகளை மகள், மகன், பேரன் பேத்திகளுடன் பார்க்கும் போது தொலைந்த (தொலைத்த) காலம் நினைவில் மோதி ரகசியமாய் கண்களை நனைக்கும். இதுவே உரிய வயதில் திருமணம் செய்து கொண்டு கணவன் மனைவி இருவரும் வேலைக்குப் போகும் பட்சத்தில் இருவருமே வீட்டு வேலைகளையும் சரிசமமாய் பகிர்ந்து கொள்ளலாம்.

திட்டமிட்டு செய்தால் எல்லாமே எளிமையாகி விடும். அலுவலகத்தில் வெற்றி பெற திருமணமோ, கணவரோ தடையாக இருக்க முடியாது. எப்போதும் வீட்டில் இருந்தபடி வீட்டை நிர்வகிப்பதா பெருமை? அலுவலகம் சென்று பணம் சம்பாதிக்கும் பெண், திறமையாக குடும்பத்தையும் நிர்வகிப்பதில் தான் பெருமையே இருக்கிறது. அதுதான் எல்லோருக்கும் மகிழ்ச்சியளிக்கும்.

உத்தியோகம் என்பது ஒரு பெண்ணுக்கு கூடுதல் அந்தஸ்தை கொடுக்கும். அதேநேரம் அதுவே வாழ்க்கையாகி விடாது. பல விஷயங்களில் சாதிக்க நினைக்கும் பெண்கள், வாழ்க்கையிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டால் குடும்பம் வளம் பெறும். குடும்பம் - வாழ்க்கை - குழந்தைகள் இவை மூன்றும் ஒரு பெண்ணின் வாழ்க்கையில் மகிழ்ச்சியான அத்தியாயம். மகிழ்ச்சியை கொண்டாட ஒரு குடும்பம் தேவை. பொருளாதாரமே தேவைகளின் அஸ்திவாரமாகி விட்ட இந்த காலகட்டத்தில், வீடு, அலுவலகப் பணி இரண்டிலும் ஒருசேர சாதிக்கும் பெண்கள் தான் சிக்கல் இல்லாத எதிர்காலத்தை தங்களுடையதாக்கிக் கொள்ள முடியும்

## புதுயுகத்தைத் தேடி......

**மகளிர் பக்கம்**

தொகுப்பு: ஸ்ருதி



# காளானிற்கு மார்பக புற்று நோயைத் தடுக்கும் சக்தி..?

பெண்களின் மார்பக புற்று நோயை தடுக்கும் ஆற்றல் காளானுக்கு இருக்கிறது. உடலில் அதிகம் தேவையில்லாமல் சேரும் கொழுப்பு கட்டுப்படுகிறது. இரத்தம் சுத்தமடைவதுடன் இதயம் பலப்பட்டு நன்கு சீராக செயல்படுகிறது.

காளான் மூட்டு வாதம் உடையவர்களுக்கு சிறந்த நிவாரணியாகும். மலட்டுத்தன்மை, பெண்களுக்கு உண்டாகும் கருப்பை நோய்கள் போன்றவற்றைக் குணப்படுத்துகிறது.

குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கு சிறந்த ஊட்டசத்தாக அமைகிறது எளிதில் சீரணமாகும் தன்மை கொண்டது. காளான் தாய்ப்பால் வற்றவைக்கும் தன்மை கொண்டதால் பாலூட்டும் பெண்கள் காளான் உண்பதை தவிர்ப்பது நல்லது.

# கோபம்! கோபம்!! கோபம்!!!

சில பெண்களுக்கு பதற்றம் வந்தால் தான் என்ன செய்கிறோம் என்றே அவர்களுக்கு தெரியாது. கோபத்தில் என்ன பேசினார்கள் என்று கூட தெரியாது. அவர்கள் கோபம் முழுவதும் பிள்ளைகள் மேல தான் போய் விழும். கணவர் மேல்கோபமா?



பக்கத்து வீட்டு அம்மா மேல கோபமா? வீட்டில் உள்ள பெரியவர்கள் மேல உள்ள கோபமா? யார் மீது கோபம் வந்தாலும் பிள்ளைகளுக்கு தான் அடி விழும். பிள்ளைகளுக்கும் எதுக்கு அடி வாங்குகிறோம் என்று அவர்களுக்கு தெரியாது.

ரொம்பக் கோபப்படுபவரிடம் ரொம்ப கோபப்பட்டா தோல் சுருங்கி சீக்கிரம் வயதான தோற்றம் வந்து கிழவி போல் ஆகி விடுவீர்கள் என்று சொல்லிப் பாருங்கள், அடுத்த தடவை கோபப்படும் போது கொஞ்சம் யோசிப்பார்கள். சில பேர் நகத்தை நறுநறுவென கடித்துக் கொண்டு இருப்பார்கள்.

நகம் தீர்ந்து இரத்தம் வருவது கூட தெரியாமல் இருப்பார்கள். இப்படி கோபப்படுவதால் உங்களுக்கு சிறு வயதிலேயே இரத்த அழுத்தம் எகிறும் நிலைக்கு கொண்டு போய் விடும்.

இல்லை எனில் அடிக்கடி மயக்கம் வரும். வீட்டில் மயக்கம் போட்டு விழுந்தால் பரவாயில்லை தனியாக எங்கும் வெளியில் செல்லும் போது மயக்கம் போட்டு விழுந்தால் உங்கள் நிலையை கொஞ்சம் நினைத்து பாருங்கள். 'ஹார்ட் அட்டாக்'கே வரலாம்.

கோபப்பட்டு எதையும் சாதிக்கப் போவதில்லை வீண் மனஸ்தாபத்தை தான் விலைக்கு வாங்கி கொள்ளனும்.. பொறுமையை கையாளுங்கள். கோபத்தைத் தவிருங்கள். இப்படிப்பட்ட கோபத்தை தவிர்க்க எவ்வளோ நல்ல விஷயங்கள் இருக்கு. அதில் நம்மை திசை திருப்பலாம்.

துணி தைப்பது, விதவிதமாக சித்திரம் வரைவது, வித விதமாக சமைப்பது, பிடித்த இசை கேட்பது, இது போல் நம்மை நாமே பார்த்துகொண்டால் கோபப்பட நேரம் கூட இருக்காது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைச்சம்பவம் ■ ஜெகன்

# கொலைகள் புதைவதில்லை



## 23 வருடமாக உறங்கிய மர்மம் உடைந்தது எப்படி?

எப்போதும் போல மாத்தளை மாவட்டத்தில் உள்ள மஹேவெல பொலிஸ் நிலையம் தூங்கி வழிந்து கொண்டிருந்தது. ஆயினும் அந்த தூங்குநிலையைக் குலைப்பது போல சிணுங்கியது தொலைபேசி. மறுமுனையில் சொல்லப்பட்ட தகவலைக் கேட்டதும் பொலிஸ் நிலையத்தில் இருந்தவர்கள் அனைவரும் பரபரப்படைந்தனர்.

"23 வருடங்களுக்கு முன்னர் காணாமல் போன திலகரட்ண, உண்மையில் அவ்வாறு காணாமல் போகவில்லை" என்பதே அந்த தொலைபேசி அழைப்பில் சொல்லப்பட்ட விவகாரம்.

மேலதிக தகவல்களைக் கேட்டறிவதற்கிடையில் தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டது.

உடனடியாகவே செயலில் இறங்கிய பொலிஸார் பழைய ஆவணங்களையெல்லாம் புரட்டியெடுத்து ஒருவாறு யாரந்தத் திலகரட்ண என்று கண்டுபிடித்தனர்.

இரண்டு குழந்தைகளுக்கு தந்தையான திலகரட்ண 1990 ஆம் ஆண்டு காணாமல் போயிருந்தார். அப்போது ஜே.வி.பியினரால் பலர் கடத்தப்பட்டிருந்ததாலும், ஜே.வி.பி அமைப்போடு தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் பொலிஸாரால் சிங்கள இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டிருந்ததாலும் திலகரட்ண காணாமல் போன விடயம் அப்போது பெரிதாகப் பேசப்படவில்லை. அவர் ஜே.வி.பி யால் கடத்தப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் ஆராய்ந்த பொலிஸார் நாளடைவில் திலகரட்ண காணாமல் போய்விட்டதாக அவரது மனைவி நிமலா கொடுத்திருந்த முறைப்பாட்டை மறந்து போயினர்.

கிட்டத்தட்ட 23 வருடங்களாக மறந்து போன ஒரு விடயத்தை சில நிமிடங்களுக்கு முன்னர் வந்த தொலைபேசி அழைப்பு மீண்டும் கிளறவைத்தது.

தொலைபேசியில் சொல்லப்பட்டது உண்மையாயின், திலகரட்ண கடத்தப்படவில்லையாயின் அவர் தலைமறைவாக எங்கேனும் இன்னும் வசிக்கிறாரா? எதற்காக அவர் கடத் தப்பட்டார் அல்லது காணாமல் போய்விட்டார் என்ற நாடகம் அரங்கேற்றப்பட்டிருக்க வேண்டும்? என்று பலவாறாகப் பொலிஸார் மண்டையைப் பிய்த்துக் கொண்டனர்.

முதலில் காணாமற் போனதாகக் கூறப்படும் திலகரட்ணவின் மனைவி யான நிமலாவை விசாரித்தால் ஏதேனும் துப்புக் கிடைக்கக் கூடும் என்ற எண்ணத்தில் அவளது வீட்டைத் தேடிக் கண்டு பிடித்து அங்கு சென்றனர் பொலிஸார்.

"டொக்.டொக்.டொக்"

மூன்று முறை தட்டியதும் திறந்தது வீட்டின் கதவு. அங்கு நடுத்தர வயதுப் பெண்மணி ஒருவர், நெற்றி யைச் சுருக்கிய வாறு "எதற்காக எங்கள் வீட்டுக்கு பொலிஸ் வந்திருக்கிறது?" என்று யோசிக்கும் பாவனையில் நோக்கினார்.

"இந்த வீட்டில் நிமலா என்பது யார்?" பொலிஸார் இப்படிக் கேட்ட தும், அந்தப் பெண்ணின் உதடுகளில் சிறுபுன்னகை பிறந்தது.

"நான் தான் நிமலா. உங்களுக்கு என்னால் ஏதும் உதவிகள் ஆக வேண்டுமா?" என்று அந்தபெண் விசாரித்தார்.

"பெரிதாக ஒன்றுமில்லை. காணாமல் போன உங்கள் கணவர் திலகரட்ண பற்றி சில விவரங்கள் தேவைப்படுகின்றன. அதுதான் உங்களிடம் ஏதாவது தகவல் கிடைக்குமா என்று விசாரிக்க வந்தோம்" என்று பொலிஸார் சொன்னதும் தயக்கமின்றி அவர்களை உள்ளே அழைத்துச் சென்று இருத்தினாள் நிமலா.

"சொல்லுங்கள் என் கணவரைப் பற்றி உங்களுக்கு என்ன தகவல் தேவைப்படுகின்றது?" என்று நிமலா கேட்க,

"உங்கள் கணவர் உண்மையிலேயே காணாமல் தான் போய்விட்டாரா ? அல்லது....?" என்று பதிலுக்கு பொலிஸார் தற்செயலாகக் கேட்ட கேள்வியால் அவளது முகம் அஷ்டகோணலாகி விட்டது.

"அவர் காணாமல்தான் போய் விட்டார். அதில் என்ன சந்தேகம்? ஏன் இவ்வளவு காலம் கழித்து உங்களுக்கு இந்தச் சந்தேகம்?" இந்த வார்த்தைகளை அவள் சொல்வதற்கிடையில் திக்கித் திணறிவிட்டாள். முகமெங்கும் வியர்த்துக் கொட்டத் தொடங்கியது. அவளின் இந்தத் தடுமாற்றமும், பதற்றமும் பொலிஸா ருக்கு அவள் மீது சந்தேகத்தை உண்டு பண்ணவே, அவளிடம் துருவித் துருவி கேள்விகளைக் கேட்கத் தொடங்கினர். அப்போது வீட்டின் முன்புறத்தில் தொங்கிக் கொண்டிருந்த நிமலாவின் திருமணப்புகைப்படம் ஒன்றின் மீது பொலிஸாரின் பார்வை படர்ந்தது.

அதில் நிமலாவிடன் இருந்தது திலகரட்ணா இல்லை. அப்படியானால் அது யார்? என்ற கேள்வி பொலிஸாடம் எழுந்தது.

"இது உங்கள் கணவர் திலகரட்ணா இல்லையே. அப்படியானால் இவர் யார்?"

பொலிஸாரின் இந்தக் கேள்வி நிமலாவை இன்னும் நிலைகுலையச் செய்தது.

"அவர்... அவர்... என்னுடைய இரண்டாவது கணவர். பெயர் சுவேன். ஆனால் இவர் என்னை விட்டு வேறொரு திருமணம் செய்துவிட்டார். என்னுடைய கணவருக்கு நான் செய்த துரோகத் துக்கு நல்ல தண்டனை கிடைத்து விட்டது"

தன்னிலை மறந்தவளாக நிமலா உதிர்த்த இந்தச் சொற்களே அவளைக் காட்டிக் கொடுத்தன.

"துரோகமா? என்ன துரோகம்? அப்படியானால் திலகரட்ணா உயிரோடு இருக்கும் போதே சுவேனுக்கும் உங்களுக்கும் தொடர்பு இருந்திருக்கிறது. அது தெரியவந்ததால் திலகரட்ணவைக் கொன்றுவிட்டீர்கள். அப்படித் தானே?" -பொலிஸார் அதட்டலுடன் கேட்க உண்மையை முழுதுமாகக் கக்கினாள் நிமலா.

அவள் சொன்ன கதை இதுதான்.

நிமலா அந்த ஊரிலேயே பேரழகி. பார்ப்போர் எல்லாம் அவளுக்கு காதல் தூது விட்டுக் கொண்டே இருந்தனர். அதில் திலகரட்ண மட்டுமே வாகைசூடி, அவளை மணம் முடித் தான். இருவரும் இன்ப வானில் சிறகடித்துப் பறந்தனர். அதன் பயனாக இரு பிள்ளைகளும் அவர்களுக்குப் பிறந்தன. இந்த நிலையில் தான் திலகரட்ண மதுப் பழக்கத்துக்கு அடிமையானான். இதுவே அவர்களின் இல்லற வாழ்வைத் திசை திருப்பியது.

தினமும் குடித்து விட்டு வரும் திலகரட்ண நிமலாவை கண்டபடி ஏசுவதும், அடித்து உதைப்பதும் தொடர் கதையானது. காதல் கசக்கத் தொடங்கியது. திலகரட்ண மீது நிமலாவுக்கு வெறுப்பு ஏற்படத் தொடங்கியது. நிமலாவின் வீட்டுக்கு சற்றுத் தொலைவில் இருந்தவன் தான் சுவேன். நிமலாவின் உறவுக்காரன். அவனும் நிமலாவுக்கு முன்னர் காதல் தூது விட்டு தோற்றுப் போனவன் தான். தன் முன்னாள் காதலி அவளின் கணவனால் இவ்வாறு துன்பப்படுவதை கண்டு கவலைப்பட்டான். திலகரட்ணா இல்லாத சமயங்களில் நிமலாவின் வீட்டுக்கு சென்று அவளுக்கு ஆறுதல் கூறத் தொடங்கினான். அவ னது ஆறுதல் மொழிகள் நிமலாவுக்கு இதமாக இருந்தன. நாளடைவில் இருவரும் உடல்ரீதியாகவும் ஒன்றிணையத் தொடங்கினர்.

(21ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் பரிசு:

## உங்களுக்கும் பரிசு

உங்கள் வாழ்வில் அல்லது உங் களுக்குத் தெரிந்தவர்களின் வாழ்வில் காதல் பரிசுகள் பற்றிய சுவாரசியமான சம்பவங்கள் நடந்திருக்கலாம். அவற்றை 100 சொற்களுக்கு மேற்படாமல் எமக்கு எழுதி அனுப்புங்கள்.

தரமானவை வாரந் தோறும் இந்தப் பகுதியில் பிரசுரமாவதோடு. உங்களுக்கு ஆச்சரியமளிக்கும் பரிசுகளும் காத்திருக்கின்றன.



✍ அனுப்ப வேண்டிய முகவரி:
காதல் பரிசு: உங்களுக்கும் பரிசு
சுடர் ஒளி
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பரிசு பெற்றவர்கள் வாரநாள்களில் 021 567 7609 என்ற எமது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு துரிதமாக பரிசினைப் பெற்றுக்கொள்ளலாம்.


# முத்தமிட முத்தான பத்துக் கட்டளைகள்...



**முத்தக் கட்டளை-3:**

எனக்கும் முத்தம் கொடுக்கத் தெரியும் என்று கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்து, வெறும் உதடுகளை மட்டும் பிணைத்துக் கொண்டு உணர்ச்சியற்ற சிலை போல இருந்தால், வெறும் சத்தம் தான் வருமே தவிர முத்தமாக இருக்காது!

உங்கள் காதலர் எப்படிக் கொடுத்தால் ரசிக்கிறார், எந்த அணுகு முறையை ருசிக்கிறார், என்ன செய்தால் பிடிக்கிறது என்பதை உணர்ந்து கொடுக்க வேண்டும். அவர்களைத் திருப்திப்படுத்தும் போது தான், நீங் கள் இன்னும் அதிகமாக மகிழ்ச்சி அடைய முடியும். எனவே, முத்தத்தில் ஒருவித தாளகதி வேண்டும். இருவரும் ரசிக்கும் வகையில் இருக்க வேண்டும்.

**முத்தக் கட்டளை-4:**

சொல்லித் தருவதில்லை மன்மதக் கலை என்பதெல்லாம் உண்மை தான். அதற்காக, முத்தம் கொடுப்பதெல்லாம் கூடவே பிறந்த கலையாகி விடுமா என்ன? கற்றுக்கொள்ளுங்கள். அதில் தவறில்லை.

யாருக்கும் எடுத்த உடனேயே உணர்வுபூர்வமாக முத்தம் கொடுக்க வந்துவிடாது. அதற்காக முத்தம் கொடுப்பது எப்படி? என்று ரியூசனுக்கு போய் படிக்கவா முடியும். அப்படியானால் எப்படி முத்தம் கொடுக்கும் வித்தையைக் கற்பது? அதற்கும் ஒரு இலகுவான வழியுண்டு. முத்தம் கொடுக்கும் போது கொஞ்சம் நேரம் செலவிடுங்கள். உங்கள் காதலர் முத்தமிடுகையில் என்னவெல்லாம் செய்கிறார் என்பதை கவனியுங்கள். அதையே நீங்களும் திருப்பிச் செய்தால் போதும். கொஞ்ச நாளிலேயே முத்தம் அடிப்பதில் உங்களை அடிக்க ஆளே கிடையாது என்னுமளவுக்கு முன்னேறிவிடுவீர்கள்.

**முத்தக் கட்டளை-5 :**

முத்தம் கொடுக்கையில், கைகள் என்ன செய்கின்றன என்பதுதான் முக்கியமான அம்சம்.

ஏதோ முத்தம் கொடுத்துக் கொண்டு இருக்கும் போதே உங்கள் காதலர் தப்பி ஓடிவிடப் போகிறார் என்பதைப் போல தலை முடியையோ, இடுப்பையோ அழுத்தமாகப் பிடித்துக் கொள்ளக்கூடாது. முத்தம் என்பது அன்பைத் தரும் களம். வலி ஏற்படக்கூடாது. கைகளை கண்ட இடத்தில் வைக்கவும் கூடாது. அதிலும் ஒரு அழகுணர்ச்சி தேவை.

உங்கள் காதலரின் கைகள், முதுகு, பின்புறம், கழுத்து, இடுப்பு போன்றவற்றின் மீது மெல்ல ஊர்ந்து செல்லலாம்.

கவனம்& அதையும் மீறி உணர்ச்சி வசப்பட்டு காயம் ஏற்படும் அளவுக்கு கிள்ளி வைத்தால் அவ்வளவு தான். பிறகு ஆஸ்பத்திரிக்குத்தான் ஒவ்வொரு முறையும் மருந்துகட்டப்போக வேண்டியிருக்கும்.

**முத்தக் கட்டளை-6 :**

முத்தத்தில் நாக்கின் பங்கு மிக முக்கியமானது. அது மெல்ல ஊடுருவி, உணர்வுகளைத் தட்டி எழுப்ப வேண்டும். ஒரு ஓவியனின் தூரிகை போல நளினமாக நடமாட வேண்டும். ஆனால், அதற்கும் அளவு உண்டு. உள் நாக்கை கவ்விப் பிடிப்பது போலவோ, பல்துலக்கும் போது வாயின் நாலாபுறத்திலும் சுழன்றடிப்பது போலவோ செய்யக்கூடாது.

நாக்கின் நுனி மட்டுமே மாய வித்தைகளைச் செய்ய வேண்டும். நினைவில் கொள்ள வேண்டிய இன்னொரு விஷயம், எவ்வளவு பொறுமையாக, மென்மையாக நடந்து கொள்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாகும் உற்சாகம்.

(அடுத்த வாரம் கட்டளைகள் தொடரும்)


இளையோருக்கான புதிய பகுதி!
சுபிதி
காதலர் மட்டும்...



# காதலும் திருமணமும்

**ஒரு** ஞானியை அணுகிய சீடன், காதலுக்கும் திருமணத்துக்கும் உள்ள வித்தியாசம் என்னவெனக் கேட்டான்.

அதற்கு அந்த ஞானி, அது இருக்கட்டும். முதலில் நீ ரோஜாத் தோட்டத்துக்குப் போ. அங்கே உனக்கு எது உயரமான ரோஜாச் செடி என்று தோன்றுகிறதோ, அதை எடுத்துக் கொண்டு வா. ஆனால் ஒரு நிபந்தனை. நீ எக்காரணம் கொண்டும் போன வழியே திரும்பி வரக் கூடாது. என்றார்.

கிளம்பிய சீடன் சிறிது நேரம் கழித்து வெறும் கையுடன் வந்தான். ஞானி, எங்கே உன்னைக் கவர்ந்த உயரமான செடி? என்று கேட்டார்.

சீடன் சொன்னான், குருவே, ரோஜாத்தோட்டத்தில் இறங்கி நடந்த போது முதலில் உயரமான ஒரு செடி என்னைக் கவர்ந்தது. அதை விட உயரமான செடி இருக்கக் கூடும் என்று தொடர்ந்து நடந்தேன். இன்னும் உயரமான ரோஜாச் செடிகள் தென்பட்டன. அவற்றை விட உயரமான செடிகள் இருக்கக் கூடுமென மேலும் நடந்தேன். அதன் பிறகு தென்பட்டதெல்லாம் குட்டையான ரோஜாச் செடிகளே. வந்த



வழியே திரும்ப வரக்கூடாது என்பதால் முன்னர் பார்த்த உயரமான செடியையும் கொண்டு வர முடியாமல் போய் விட்டது.

புன்முறுவலோடு ஞானி சொன்னார், இது தான் காதல்...!.

பின்னர் ஞானி, சரி போகட்டும், அதோ அந்தத் தோட்டத்தில் உன் கண்ணுக்கு அழகாகத் தெரிகின்ற ஒரு சூரிய காந்திச் செடியைப் பிடுங்கி வா. ஆனால் இப்போது கூடுதலாக ஒரு நிபந்தனை. ஒரு செடியைப் பிடுங்கிய பின் வேறு ஒரு செடியைப் பிடுங்கக் கூடாது. என்றார்.

சிறிது நேரத்தில் சீடன் ஒரு சூரிய காந்திச் செடியுடன் வந்தான். ஞானி கேட்டார், இது தான் அந்தத் தோட்டத்திலேயே அழகான சூரிய காந்திச் செடியா..?

சீடன் சொன்னான், இல்லை குருவே, இதை விட அழகான செடிகள் இருக்கின்றன. ஆனால் முதல் முறை கோட்டை விட்டது போல் இந்த முறையும் விட்டு விடக் கூடாது என்ற அச்சத்தில் முகப்பிலேயே எனக்கு அழகாகத் தோன்றிய இந்த செடியைப் பிடுங்கி வந்து விட்டேன். நிபந்தனைப்படி, ஒரு செடியைப் பிடுங்கியபின் வேறு செடியைப் பிடுங்கக் கூடாது என்பதால் அதன் பிறகு இதை விட அழகான செடிகளை நான் பார்த்தபோதும் பறிக்கவில்லை.

இப்போது ஞானி சொன்னார், இது தான் திருமணம்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டு

தொகுப்பு: வரு

## மெஸ்சியைப் பின்தள்ளிய ரொனால்டோ



கடந்த 2013 ஆம் ஆண்டின் சிறந்த கால் பந்தாட்ட வீரருக்கான விருதைதட்டிச் சென்றார் போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டியானோரொனால்டோ. கடந்த நான்கு ஆண்டுகளாக அசத்திய ஆர்ஜென்டீனாவின் மெஸ்சிக்கு, இம்முறை இரண்டாவது இடம் தான் கிடைத்தது. பிஃபா சார்பில், ஒவ்வொருஆண்டும் சிறந்த கால் பந்து வீரருக்கான விருது கடந்த 1991 தொடக்கம் வழங்கப்படுகிறது. வீரர்கள் திறமை அடிப்படையில் 209 சர்வதேச அணிகளின் தலைவர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் உலகம் முழுவதிலும் இருக்கும் ஊடகவியலாளர்கள் அளிக்கும் வாக்கின் அடிப்படையில், சிறந்தவீரர் தேர்வு செய்யப்படுவார்.

கடந்த 2009 முதல் 2012 வரை என, தொடர்ச்சியாக நான்கு ஆண்டுகள் மெஸ்சி இவ்விருதை வென்றிருந்தார். இந்த ஆண்டுக்கான விருதுக்கு மெஸ்சி (பாரசிலோனா), கிறிஸ்டியானோ ரொனால்டோ (ரியல் மாட்ரிட்), பிரான்சின் பிராங்க் ரைபரி (பேயர்ன் முனிக்) என, மூன்று வீரர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இதில் ரொனால்டோ இந்த ஆண்டு பங்கேற்ற 59 போட்டி களில் 69 கோல்கள் அடித்திருந்தார். இவர்களில் யார் சிறந்தவீரர் என்பதற்காக, உலகின் பலபகுதிகளில் இருந்து வாக்கெடுப்பு நடந்தது.

இறுதியில் 1,365 புள்ளிகள் பெற்று முதலிடம் பெற்ற ரொனால்டோ, 2013ம் ஆண்டின் சிறந்த வீரருக்கான தங்கப்பந்து விருதை தட்டிச் சென்றார். நான்கு ஆண்டுக்குப் பின் இவ்விருதைவென்றதால் கண்ணீருடன் காணப்பட்டார். தவிர, 2008க்குப் பின் இரண்டாவது முறையாக இவ்விருதைவென்றுள்ளார். 160 புள்ளிகள் குறைவாக பெற்ற மெஸ்சிக்கு (1,127) இரண்டாவது இடமே கிடைத்தது.

## அவமதித்ததால் நேர்ந்ததா?

அவுஸ்திரேலிய மண்ணிலும் ஆஷஸ் தொடரை இங்கிலாந்து அணியே வெற்றிகொள்ளும் என்றே குளிர்கால ஆஷஸ் தொடர் தொடங்க முன்பு கணிக்கப்பட்டது. ஆனாலும், ஆருடங்களை எல்லாம் தவிடுபொடியாக்கி இங்கிலாந்தை மண் கவ்வவைத்து இங்கிலாந்தில் இழந்த தொடருக்கான பழியைத் தீர்த்துக் கொண்டது அவுஸ்திரேலிய அணி. டெஸ்ட் தொடரில் அடைந்த தோல்வியை ஒருநாள் தொடரை வென்றாவது சரி செய்வார்களா இங்கிலாந்து அணியினர்? என ரசிகர்கள் ஏங்கிக் கொண்டிருக்கும் போதுஅடிமேல் அடி வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் இங்கிலாந்து அணியினர்.

மெல்போனில் இடம்பெற்ற முதலாவது ஒருநாள் தொடரை ஆறு விக்கெட்டுக்களால் வெற்றி கொண்ட அவுஸ்திரேலிய அணியினர் பிறிஸ்பேனில் இடம்பெற்ற இரண்டாவது போட்டியை மூன்று பந்துகள் மீதமிருக்கையில் ஒருவிக் கெட்டால் வெற்றிபெற்று இங் கிலாந்துக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தனர். இவ்விரண்டு போட்டி களிலும், இங்கிலாந்து துடுப்பாட்டத்தில் பிரகாசித்திருந்தாலும், அவர்களின் பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பு மோசமாக இருந்ததால் வெற்றியை அவுஸ்திரேலியாவிடம் தாரை வார்த்துக் கொடுத்தது. தொடா தோல்விகளால் வருத்தமுற்றிருக்கும் இங்கிலாந்து அணியினர் தங்கள் வீரர்கள் சிலரின் செய்கைக் காக சிலவேளைகளில் வருத்தப்படக் கூடும்.

கடந்த ஜூலை மாதம் ஓவலில் இடம்பெற்ற ஆஷஸ் தொடரின் ஐந்தாவதுபோட்டியில் வெற்றியீட்டிய இங்கிலாந்து அணியினர், வெற்றிமமதையும் போதையும் தலைக்கேறியதால் தலைகால் புரியாமல் ஆடியிருந்தனர். இதில், கெவின் பீட்டாசன், ஸ்ருவாட் பிரெளட், ஜேம்ஸ் ஆண்டாஸன் ஆகியோர் மைதானத்தில் சிறுநீர் கழித்திருந்தனர். கிரிக்கெட்டின் தாயகமான இங்கிலாந்திலேயே கிரிக்கெட்டுக்கு வழங்கப்பட்ட அவமானம் இதுவாகும். அதன் பலனைத் தான் இங்கிலாந்துவீரர்கள் தற்போது அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள் போலும்!

இந்த நிலையில், பங்களாதேஷில் இடம்பெறவுள்ள உலக 20-20 தொடருக்கான இங்கிலாந்தின் 30 பேர் கொண்டதற்காலிக குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. மார்ச் 16ஆம் திகதி ஆரம்பிக்க வுள்ள இந்ததொடருக்கான இங் கிலாந்தின் 15 பேர் கொண்ட குழாம், இந்த 30 பேர் கொண்ட குழாமிலிருந்து தெரிவு செய்யப்படும். அறிவிக்கப்பட்டுள்ள குழாமில் அழுத்தத்திற்குள்ளாகியுள்ள இங்கிலாந்தின் அதிரடிவீரர் கெவின் பீற்றரசனும் சேர்க்கப்பட்டுள்ளார். அவரது கிரிக்கெட் எதிர்காலம் கேள்விக்குள்ளாகியுள்ளதாகக் கருதப்பட்ட நிலையிலேயே அவர் இக்குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## உலகக் கிண்ண ஒத்திகை



இந்திய மற்றும் நியுசிலாந்து அணிகள் பங்குபெறும் 5 ஒருநாள் மற்றும் 3 டெஸ்ட் கொண்ட போட்டித் தொடர் தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இம்முறை சுற்றுலா சென்ற இந்திய அணியில் பல புதிய வீரர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அத்துடன், எதிர்வரும் 2015ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள உலகக் கிண்ணத் தொடரில் சில போட்டிகள் நியுசிலாந்து ஆடுகளங்களில் இடம்பெறவுள்ளதால், அதற்கான முன்னோட்ட தொடராகவும் நியுசிலாந்துடனான இந்தத் தொடரைக் கருதமுடியும்.

இவற்றுக்கெல்லாம் மேலாக, இந்திய அணியின் நான்காவது இலக்கத் துடுப்பாட்டத்துக்கு பொருத்தமான ஆட்டக்காரர் யார் என்பதைக் கண்டறியும் தொடராகவும் இத்தொடர் விளங்குகின்றது. காரணம், நீண்டகாலமாக இந்தியஅணியின் நான்காம் இலக்கத் துடுப்பாட்ட வீரர்கள் களமிறங்கிப் பல சாதனைகளைப் புரிந்தவர் ராகுல் ட்ராவிட். அவருக்கு பின்னராக, யுவராஜ் சிங் ஓரளவு அந்த இடத்தை நிரப்பினார். ஆனால், புற்றுநோய் மற்றும் மோசமான ஃபோம் காரணமாக அவராலும் அந்த இடத்தில் நீடிக்க முடியவில்லை. ரெய்னாவும் சீரான பெறுபேறுகளை வெளிப்படுத்தவில்லை. இதனால், ரஹானேவா? அம்பாதிராயுடுவா? அந்த இடத்தை நிரப்புவார்கள் எனக் கிரிக்கெட் ஆர்வலர்கள் எதிர்பார்க்கின்றனர்.

கடந்த ஒக்டோபர் இந்தியாவில் இடம்பெற்ற அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் ரெய்னா மற்றும் யுவராஜை நான்காவது இடத்தில் பரீட்சித்தார்கள். ஆனாலும், அதற்குப் பின்னர் வந்த மேற்கிந்தியதீவுக்ள் மற்றும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் யுவராஜ் அணியில் இருந்துநீக்கப்பட்டார். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட ரஹானே, தென்னாபிரிக்க மண்ணில் இந்திய வீரர்கள் சொதப்பியபோதும், தனியாளாக நின்று தனது திறமையை வெளிப்படுத்தியிருந்தார். தற்போது, நியுசிலாந்துக்கு எதிரான தொடரிலும் யுவராஜ் நீக்கப்பட்டுவிட்டார். இதனால்,நான்காம் இலக்க போட்டியில் ரஹானேமற்றும் ராயுடுக்கு இடையேகடும் போட்டிநிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வருடத்தைப் பொறுத்த வரை, தென்னாபிரிக்க தொடரைத் தவிர இந்திய அணி பங்கு பற்றிய தொடர்கள் அனைத்

(23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உலகம்





## மாயத் தீவில் மந்திரக் கிழவி 37

திடீரென சிலை உயிர்பெறத் தொடங்கியதும் மணிமொழி கொஞ்சம் துணுக்குறவே செய்தாள். எனினும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு என்ன நடக்கின்றது என்பதை உற்றுநோக்கத் தொடங்கினாள். உயிர்பெற்ற சிலை இடிபோன்ற குரலில் பேசவும் தொடங்கியது. "அழகான இளவரசியே! என் கேள்விக்கு நீ சரியான பதிலைக் கூறாது விட்டால் இவர்களைப் போல நீயும் சிலையாக மாறிவிட வேண்டியது தான்" என்று சிலை கூறியது. "அதைப் பற்றி எல்லாம் எனக்குக் கவலை இல்லை. உண்மையில் ஒரு அரச குல வாரிசு எதற்குமே பயம் கொள்வதில்லை. நீ உன்னுடைய கேள்வியைத் தாராளமாகக் கேட்கலாம்" என்று அவள் திடமான குரலில் கூறினாள்.

"சரி அப்புறம் உன் இஷ்டம். நான் கேள்வியைக் கூறுகிறேன். கவனமாகக் கேள்" என்று அந்தச் சிலை கூறியது. மணிமொழி சிலை சொல்லப் போகும் கேள்விக்காகத் தன்னுடைய புலன்களையெல்லாம் ஒருங்கு சேர்த்தாள். "மணிமொழியே என்னுடைய கேள்வி இதுதான். கண்கள் இல்லாமல் காணும் காட்சி எது?" என்றது சிலை. "கண்கள் இல்லாமல் காட்சியா? பார்ப்பதற்கு கண்கள் மிக முக்கியம். கண் இல்லாவிட்டால் எவ்வித காட்சியையும் காண முடியாது. நீ ஏதோ அபத்தமாகவல்லவா கேட்கிறாய்" என்றாள் மணிமொழி. "அப்படி அல்ல. நன்றாக யோசித்து உனது பதிலை இன்னும் ஐம்பது நொடிக்குள் சொல்லிவிடு. அல்லாவிட்டால் ஐம்பத்தோராவது நொடி நீ சிலையாக மாறத் தொடங்கிவிடுவாய்" என்றது அந்த மாயச் சிலை. மணிமொழி விடை காண யோசிக்கத் தொடங்கினாள்.

*(மந்திரக் கிழவி வருவாள்...)*

## வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமா?

**வெற்றி பெற வேண்டும் என்று இலட்சியம் கொண்ட பலரும் தனக்கு வழிகாட்ட யாரும் இல்லை என்று வேதனைப்படுவார்கள். அப்படி தனக்கு வழிகாட்ட யாரும் இல்லை என்று அவர்கள் நினைப்பது தான் முதல் தவறு. காந்தியடிகளும், திருவள்ளுவரும், விவேகானந்தரும், புத்தரும் என பலரும் தங்களது ஆலோசனைகளை நமக்கு அள்ளித் தந்துள்ளனர். அவரவர்க்கு ஏற்ற வழிகளையும், தலைவர்களையும் நாம்தான் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். வெற்றி வேண்டுமா உங்களுக்கு? அப்படியானால் இப்படி செய்யுங்கள் என்று விவேகானந்தர் இங்கு நமக்கு க்கூறியுள்ள ஆலோசனைகளைப் பார்ப்போமா...**

*01.* அளவுக்கு அதிகமாக உண்ணாதீர்கள். அதற்காக பட்டினியும் கிடக்க வேண்டாம்.

*02.* அதிக நேரம் தூங்காதீர்கள். அதற்காக மிகக் குறைவாகவும் தூங்க வேண்டாம்.

*03.* பொறாமை குணம் இருந்தால் விரட்டி விடுங்கள்.

*04.* சந்தேகமும், சஞ்சலமும், சபலமும்தான் உங்கள் முதல் எதிரிகள். அவற்றை துரத்தியடியுங்கள்.

*05.* சோம்பல் உங்களிடம் இருந்தால் முதலில் அதை ஒழித்துக் கட்டுங்கள்.

*06.* எந்த சூழ்நிலையிலும் பேராசை கொள்ளாதீர்கள்.

*07.* உடல் தூய்மை முக்கியமானது. அதனால் தினமும் குளியுங்கள்.

*08.* எப்போதும் நல்லதை மட்டுமே மனதால் நினையுங்கள். அப்போது நல்லவை மாத்திரமே நடக்கும். நினைக்கும் பொருளாகவே ஆகும் தன்மை நம்மிடமே இருக்கிறது.

*09.* எப்போதும் மகிழ்ச்சியாக இருங் கள். தைரியமாகவும் இருக்கப் பழகிடுங்கள்.

*10.* பொறுமையும், விடா முயற்சியும் நமது நல்ல நண்பர்கள். எப்போதும் இவற்றுடனேயே இணைந்திருக்கப் பழகுங்கள்.


*11.* இவற்றை நீங்கள் செய்தால் உங்கள் வெற்றி உறுதி என்கிறார் சுவாமி விவேகானந்தர்.



## சிலந்தியிடம் பாடம் கற்ற அரசன்

### குட்டிக்கதை

போரில் தோல்வி அடைந்த அரசன் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடி ஒளிந்தான். அரசன் மிகவும் வீரத்துடன் போரிட்டாலும் அவனின் படை மிகவும் சிறியதாக இருந்ததினால் அவனால் வெல்ல முடியவில்லை. எதிரியிடம் மாபெரும் படை இருந்ததினால் வெற்றிபெற்றன். தோல்வியுற்ற அரசனை கொலை செய்யுமாறு அவனை வென்ற அரசன் கட்டளை பிறப் பித்தான். அதனால் அவன் காட்டிற்கு ஓடிச் சென்றுஅங்கு இருந்த ஒரு குகையில் ஒளிந்து கொண்டான்.



தோல்வி கண்ட அரசன் மிகவும் மன வருத்தம் கொண்டான். மனச் சோர்வினால் துணிவு இழந்தான். ஒருநாள் சோம்பலுடன் அரசன் குகையில் படுத்திருந்தான். அந்தக் குகையினுள் ஒரு சிலந்தி வாழ்ந்து வந்தது. அந்தச் சிறிய சிலந்தியின் செயல் அவன் கவனத்தைக் கவர்ந்தது. குகையின் ஒரு பகுதியினுள் ஒரு வலையைப் பின்னக் கடுமையாக முயற்சி செய்து கொண்டிருந்தது. சுவரின் மீது ஊர்ந்து செல்லும் போது வலையினில் பின்னிய நூல் அறுந்து சிலந்தி கீழே விழுந்து விட்டது.

இவ்வாறு பலமுறை நடந்தது. ஆனாலும், அது தன் முயற்சியைக் கைவிடாமல் மறுபடியும் மறுபடியும் முயன்றது. கடைசியில் வெற்றிகரமாக வலையைப் பின்னி முடித்தது. அரசன் இச் சிறு சிலந்தியே பல முறை தோல்வியடைந்தும் தன் முயற்சியைக் கைவிட வில்லை. நான் ஏன் விடவேண்டும்?

நானோ அரசன். நான் மறுபடியும் முயற்சி செய்ய வேண்டும் என்று எண்ணினான் மறுபடியும் தன் எதிரியுடன் போர் புரிய தீர்மானித்தான். அரசன் தான் வசித்த காட்டிற்கு வெளியே சென்று தன் நம்பிக்கையான ஆட்களைச் சந்தித்தான்.

தன் நாட்டில் உள்ள வீரர்களை ஒன்று சேர்த்து பலம் மிகுந்த ஒரு படையை உருவாக்கினான். தன் எதிரிகளுடன் தீவிரமாகப் போர் புரிந்தான். கடைசியில் போரில் வெற்றியும் பெற்றான். அதனால் தன் அரசைத் திரும்பப் பெற்றான். தனக்கு அறிவுரை போதித்த அந்தச் சிலந்தியை அவன் என்றுமே மறக்கவில்லை.

## உண்மைத் தகவல்கள்

### தண்ணீர

♦ பூமியில் உள்ள 97 சதவீதம் உப்பு தண்ணீரால் ஆனது, மீதமுள்ள 3 சதவீதம் தூய்மையான நீர் என குறிப்பிடப்படுகிறது. அவற்றில் 2 சதவீதம் பனிக்கட்டிகளாகவும் பனிப்பாறைகளாகவும் காணப்படுகிறது. இதன் மூலம் 3 இல் 1 சதவீதம் தூய்மையான தண்ணீர் தான் ஆறுகள், ஏரிகள் மற்றும் பூமிக்கு அடியிலும் காணப்படுகிறது.

### ஸ்பெர்ம் வேல்

ஸ்பெர்ம் வேல் என்ற திமிங்கலத்தின் மூளை தான் மிகவும் அதிக எடை உள்ளதாக குறிப்பிடப்படுகிறது. இதன் எடை 9 கிலோ கிராம் ஆகும், மேலும் இது மனித மூளையை விட ஆறு மடங்கு அதிக எடை உள்ளதாம். இந்த திமிங்கிலத்துக்கு பெரிய தலை இருப்பதால் (அதாவது தன் உடலின் மூன்றின் ஒரு பங்கு) மூளைக்கு அதிகமான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த.இந்தன்

# பெருந்தலைகளுக்கு விழுந்த பேரிடி

## 2013 இன் மகத்தான தமிழ் சினிமா சறுக்கல்கள்

தமிழ் சினிமாவின் முக்கிய இயக்குநர்கள் சிலரும், குறிப்பிடத்தக்க முயற்சிகள் மூலம் கவனம் பெற்று தமிழ் சினிமாவில் கால் பதித்தவர்களும் ரசிகர்களையும் திரைப்பட ஆர்வலர்களையும் கடந்த வருடம் மிகப் பெரிய ஏமாற்றத்துக்கு உள்ளாக்கினார்கள்.

நூற்றுக்கணக்கான தொழில்நுட்பக் கலைஞர்கள், நடிகர்கள் என்று பலரின் பங்குள்ள சினிமாவில், வெற்றிக்குப் பல பங்காளிகள் சேர்ந்துகொண்டாலும் தோல்வியின் முழுப் பொறுப்பும் பல சமயம் இயக்குநர் மீதே விழுகிறது.

பெரிய நட்சத்திரங்களால் வெற்றிக்கு உத்தரவாதம் அளித்துவிட முடியும் என்றால் தமிழில் ஆண் டுக்கு 15 படங்களாவது பெரும் வெற்றி அடைய வேண்டும். ஆனால் யதார்த்தம் வேறாக இருக்கிறது.

காரணம், பெரிய நட்சத்திரங்கள் உள்ளிட்ட அனைத்து அம்சங்களையும் வைத்து ஒரு படைப்பை உருவாக்க வேண்டிய இயக்குநரின் பங்களிப்பே வெற்றி, தோல்வியைப் பெரிதும் தீர்மானிக்கிறது.

கடந்த ஆண்டில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி ஏமாற்றிய சில இயக்குநர்களின் தோல்விகளை அலசுவோம்.

### கொடியில் சிக்கிய பாரதிராஜா



தமிழ்ச் சினிமாவின் போக்கையே தீர்மானித்தவரும், தனது சீடர்கள் வழியே ஒரு திரைப்படப் பாரம்பரியத்தைக் கட்டமைத்தவருமான பாரதிராஜா, சில வருட இடைவெளிக்குப் பின்னர் அன்னக்கொடியுடன் முகம் காட்டினார். தொடக்கம் முதல் படத்தின் நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் பல முறை மாற்றப்பட்டனர். முதலில் இசை இளையராஜா என்று சொல்லப்பட்டது. இரண்டு ராஜாக்களும் பாடல் உருவாக்கத்தில் ஈடுபடும் வீடியோகூட இணையத்தளத்தில் வெளியானது. ஆனால் பல மாற்றங்களுக்குப் பின்னர் வெளியான படம், போதிய வரவேற்பைப் பெறவில்லை. தெளிவற்ற திரைக்கதை மற்றும் திறமையற்ற நடிகர்களால் படம் ரசிகர்களின் கவனத்தை ஈர்க்கத் தவறிவிட்டது.

ஆண்மையற்ற வில்லனுக்கு மனைவியாகும் நாயகி, அவள் மீதான மாமனாரின் காமம் போன்ற அசாதாரணமான விஷயங்களை படத்தில் அவர் கையாண்டிருந்தார். எதை வேண்டுமானாலும் கையாளலாம். ஆனால் குறைந்தபட்ச நம்பகத்தன்மையும் நேர்த்தியும் இருக்க வேண்டும்; அல்லது சுவாரஸ்யமாகவாவது இருக்க வேண்டும். எதுவுமே இல்லையென்றால், யாருக்குமே பிடிக்காது. இதுதான் அன்னக்கொடிக்கு நேர்ந்தது. நாயகனின் விரலை நாயகி சுவைக்கும் காட்சியை குளோஸ் அப்பில் காட்டினால், அது ரசனையான காட்சியாகக் கொண்டாடப்படும் என்று இயக்குநர் நினைத்திருக்கலாம். நாயகியின் உதடுகளை மட்டும் திரையில் காட்டுவது, அவரது திறந்த முதுகைக் காட்டுவது போன்ற காட்சிகளும் யாரையும் கவரவில்லை. ஒரு காட்சிகூட அழகியல் ரீதியாகவோ பொழுதுபோக்கு சார்ந்தோ தேறவில்லை. அன்னக்கொடியில் ரசனை, புதுமை, புதிய அம்சங்கள், சுவாரஸ்யம் என எதுவும் இல்லை.

இணையத்தில் ஒரு விமர்சகர் எழுதினார் ஒரு காவியத்துக்குண்டான அனைத்து தகுதிகளும் அன்னக்கொடி படத்துக்கு உள்ளது. காவியம் படைத்தவுடன் கலைஞன் ஓய்வெடுக்க வேண்டும். பாரதிராஜாவுக்குத் தேவை அதுதான்!.

### மணிரத்தினத்தை மூழ்கடித்த கடல்



முன்னணி இயக்குநர்களில் ஒருவராகக் கொண்டாடப்படும் மணி ரத்னம் இயக்கிய கடல் ரசிகர்களைப் பெரும் சலிப்புக்குள்ளாக்கியது. தமிழ் சினிமாவின் ஒளிப்பதிவு, படத்தொகுப்பு போன்றவற்றில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்திய மணி, அவற்றை மட்டும் வைத்துக்கொண்டு வெற்றி பெறலாம் என்று நினைத்துவிட்டார் போலும். மேம்போக்கான கதை, திரைக்கதையில் நேர்த்தியின்மை, கதையின் தன்மைக்குத் தொடர்பில்லாத நடிகர்கள் தேர்வு, பொருத்தமற்ற பாடல்கள், குறுக்கும் நெடுக்கும் துணை நடிகர்கள் நடந்து செல்ல தாவித்தாவி ஆடும் குழு நடனம் போன்றவை கடல் படத்தின் தோல்விக்கு மிக முக்கியக் காரணங்கள். கோட்ஃபாதர் படத்தின் தழுவல் என்றாலும் தமிழின் மைல் கல் படைப்பான நாயகன் படத்தைத் தந்த மணிரத்னம் அடுத்த இருபது வருடங்களில் அடைந்திருக்க வேண்டிய உயரம் வேறு. ஆனால், தனது பலம் என்ன என்பதை அறியாத காரணத்தால் அவரது தேக்க நிலை தவிர்க்க முடியாததானது. அலைபாயுதே படம் வரை அவர் தக்கவைத்திருந்த கதை சொல்லும் திறன் வற்றிவிட்டதோ என்ற எண்ணம் ரசிகர்களுக்கு வந்து பல காலம் ஆகிவிட்டது. அதை கடல் உறுதியாக நிரூபித்தது.

கடல் படத்தின் கதை ஜெயமோகனுடையது. ஒரு நாவலாகப் படிக்கும்போது ஆழமான அதிர்வுகளை ஏற்படுத்தக்கூடிய கதை இது. உளவியல் நுட்பங்கள் கூடிய இந்தக் கதையை வெகுஜன ரசனைக்கேற்ற படமாக மாற்றுவது பெரிய சவால். அந்தச் சவாலில் மணி வெற்றிபெறவில்லை.

### அமீருக்கு விழுந்த அடி



கிராமிய அழகியலை அதன் வன்முறையுடன் சேர்த்து யதார்த்தமாகக் கையாண்ட படமான பருத்தி வீரன் தந்த மாபெரும் வெற்றியின் நிழலில் நீண்ட காலம் ஓய்வெடுத்ததன் விளைவாகவோ என்னவோ, அமீரின் படைப்புத்திறனில் தொய்வு ஏற்பட்டிருப்பதை உணர முடிகிறது. இது ஆதி பகவன் படத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது. போதைப் பழக்கம், அதனால் விளையும் கொலையின் பின்னணியில் ராம் படத்தை சிறப்பாக இயக்கியிருந்த அமீர், இரட்டை வேடம், ஆக்ரோஷமான சண்டைகள் என்ற கதைப் பின்னணியில் இயக்கியிருந்த ஆதிபகவன் பெரும் தோல்வியைச் சந்தித்தது. படம் வெளியாவதில் இருந்த சிக்கலைவிட கதையில் இருந்த சிக்கல்தான் படத்தை பாதித்தது. திரைக்கதையும் பலவீனமானதாக இருந்தது. அமீரின் முந்தைய படங்களில் கை கொடுத்த யுவன் ஷங்கர் ராஜாவும் இந்தப்படத்தில் ஏமாற்றினார். ஜெயம் ரவியின் உழைப்பும் நீத்து சந்திராவின் நடிப்பும் வீணாயின.

### மரியானின் மரிப்பு



மரியான் படத்தை இயக்கிய பரத்பாலா பாரதிராஜா, மணிரத்னம் போன்ற புகழ்பெற்ற, அனுபவம் மிகுந்த இயக்குநர் அல்ல. ஆனால் ஏ.ஆர். ரஹ்மானின் வந்தே மாதரம் பாடலை அவர் படமாக்கிய விதமும் விளம்பரத் துறையில் அவர் செய்த சாதனைகளும் மரியான் படத்துக்கு எதிர்பார்ப்பை ஏற்படுத்தின.

இசை ரஹ்மான், நாயகன் தனுஷ் ஆகிய அம்சங்கள் அந்த எதிர்பார்ப்பைக் கூட்டின. ஆனால் புதுமை அற்ற கதை, தெளிவற்ற திரைக்கதை ஆகியவற்றால் படம் தோல்வியடைந்தது. அரசியல் பிரச்சினைகள் காரணமாக நாயகன் கடத்தப்படும் ரோஜா பாணிக் கதையை, எப்படிக் கையாள்வது என்று தெரியாமல் ரசிகர்களைச் சோர்வடைய வைத்தார் பரத்பாலா. மிகச் சிறந்த ஒளிப்பதிவு, தனுஷ், பார்வதியின் நடிப்பு ஆகியவை படத்தின் பலம் என்றாலும் வழக்கமான நாயக ஆராதனை, வழக்கமான வில்லன் போன்றவை படத்தின் மிகப் பெரிய பலவீனங்கள். ரஹ்மானின் இசையில் பாடல்கள் நன்றாக இருந்தாலும் இசை மீனவ கிராமத்தின் வாசனையைப் பிரதிபலிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தோல்வியின் உலகம்



காதல், சுய இரக்கம், இளம் பிராயத்தில் சந்தித்த வன்முறைகளால் வாழ்வு அடையும் கோர முகம், விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கை என்று அதிகம் பயணிக்காத பாதையில் தமிழ் சினிமாவை அழைத்துச் சென்ற செல்வராகவனும் இரண்டாம் உலகம் மூலம் இந்த ஆண்டு பெரிய ஏமாற்றம் தந்தார். ஒரே நேரத்தில் இயங்கும் வெவ்வேறு உலகங்களைக் கதைக் களமாகத் தேர்வு செய்ததில் நம்பிக்கை தந்த செல்வராகவன், அதைப் படமாக்கிய விதத்தில் தந்தது சோர்வைத்தான். இந்திய சினிமா தொடங்கிய காலத்திலிருந்தே இருந்துவரும் ஐதீகம் என்ற அம்சத்தைக் கையாள்வதில், தொழில் நுட்பத்தின் மேன்மை சாத்தியப்பட்டுள்ள இக்காலத்திலும் நம்மவர்கள் தடுமாறுகின்றனர் என்பதற்கு உதாரணம் இப்படம். சாகசப் பயணமா, ஒரு இனத்தின் உயிர்ப் போராட்டமா என்ற தடுமாற்றம் நிறைந்த படமாக இருந்தாலும் ஆயிரத்தில் ஒருவன் படம் பல்வேறு நுட்பங்களைக் கொண்டிருந்தது. ஆனால் இரண்டாம் உலகம் தட்டையாக அமைந்து சலிப்பூட்டியது.

**பாரதிராஜாவும் மணிரத்னமும் தங்கள் திரை வாழ்வில் சாதித்தவை ஏராளம் என்பதால் புதிய உடைப்புகளை அவர்களிடம் ரசிகர்கள் இப்போது எதிர்பார்க்கவில்லை. கதை சொல்லலில் முதிர்ச்சியும் நேர்த்தியும் கொண்ட நிறைவான படங்களையே எதிர்பார்க்கிறார்கள். ஆனால் இளைஞர்களான அமீரிடமும் செல்வராகவனிடமும் புதிது புதிதான களங்களையும் அணுகுமுறைகளையும் எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் தங்கள் படைப்பூக்கம் குறையாமல் பார்த்துக்கொள்வதுடன், அசலான வாழ்விலிருந்து தங்கள் கதைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்போதுதான் அவர்களால் மீண்டும் கம்பீரமாக எழுந்து நிற்க முடியும். தமிழ்த்திரைக்குப் புதியவரான பரத்பாலா நல்ல திரைக்கதையாசிரியர் துணையுடன் மீண்டும் முயன்றால் சிறப்பான படைப்பைத் தர முடியும்.**

# கொலைகள் புதைவதில்லை......

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருநாள் நிமலாவும் சுவேனும் கட்டிலில் உல்லாசமாக இருந்த சமயத்தில் எதிர்பாராத விதமாகக் வந்து சேர்ந்தான் திலகரட்ண. அவ்வளவு தான். அவன் கோபம் தலைக்கேற நிமலாவை உதைக்கத் தொடங் கினான். சத்தம் பெரிதாகத் தொடங்கியது. ஆனாலும் வழமையாகவே திலகரட்ண குடித்து விட்டுச் சண்டை போடுவதால் அயலவர்கள் அதைப்பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. இருப்பினும் இன்னும் சண்டை பெருத்தால் எப்படியும் தங்களின் கள்ள உறவு வெளிப்பட்டு விடும் என்பதை சுவேன் உணர்ந்து கொண்டான். அப்போது தான் அவன் கண்ணில் பட்டது உலக்கை ஒன்று. அதை எடுத்த சுவேன் , திலகரட்ணவின் பின் பக்கமாக வந்து, அவனது தலையில் ஓங்கி அடித்தான்.

அடுத்த கணம் ரத்த வெள்ளத்தில் சுருண்டு விழுந்தான் திலகரட்ண. சில நிமிடங்களில் அவனது உயிர் பிரிந்தது. இருட்டும் வரை காத்திருந்த சுவேன், இரவோடிரவாக திலகரட்ணவின் சடலத்தை காட்டுக்குள் கொண்டு சென்று போட்டுவிட்டு வந்தான்.


"திலகரட்ணவைக் காண வில்லை என்று பொலிஸில் முறைப்பாடு செய் அப்போதுதான் எங்கள் மீது யாருக்கும் சந்தேகம் வராது" என்று அவன் சொன்னதன்படி நிமலாவும் பொலிஸில் முறையிட்டாள். ஆனால் அவளது கணவரை ஜே.வி.பி தான் கடத்தியிருக்கலாம் என்ற கோணத்தில் ஆராய்ந்த பொலிஸார் அதை அப்படியே கிடப்பில் போட்டது சுவேனுக்கும் நிமலாவுக்கும் வசதியாகப் போய்விட்டது. சில வருடங்களில் நிமலாவை சுவேன் திருமணச் செய்தான். ஆனாலும் அதன் பின்னர் அவனுக் கும் வேறொரு பெண்ணுக்கும் உறவு ஏற்படவே, நிமலாவை உதறி விட்டு அவளுடன் சென்றுவிட்டான்.

-இதுதான் நிமலா சொன்ன கதை. இப்போது சுவேனும் நிமலாவும் 23 வருடங்களுக்கு முன்னர் செய்த கொலைக்காக சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். என்றாலும் ஒரு கேள்விக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை.

'தொலைபேசியில் தகவல் சொன்ன நபருக்கு எப்படி இந்தக் கொலை குறித்து தெரிந்தது? அதனை உடனே சொல்லாமல் இப்போது ஏன் சொல்ல வேண்டும் ?' என்பதுதான் அது.

ஆயினும் தன்னைக் கைவிட்ட சுவேனைப் பழிவாங்கவே நிமலா இப்படி தொலைபேசி மூலம் உண்மையைத் தெரியப்படுத்தியிருக்க கூடும் என்றுபொலிஸார் எண்ணுகின்றனர். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் வாசகர்களே?

## சொற்சிலம்பம் போட்டி இல. 604



**மேலிருந்து கீழ்**

1. எச்சரிக்கை நிறம்.
2. ஒரு பறவை.
3. இந்து சமயத்தின் உட்பிரிவு .
4. கெஞ்சுதல்.
5. நான்கு கூப்பிடு தூரம்.
6. தூர அலகு.
9. இளைஞன்.
10. ஒரு நோய்.
12. தங்கடையது.
14. பெற்றோரும் பிள்ளைகளும் சேர்ந்த அலகு .
16. சேவைக்கு முக்கியம் .
17. நடக்கும் படியான ஏவல்.
18. இடபம்.
19. இது சிறிதானாலும் காரமானது.
20. ஒரு ஏவுகணை வகை.

**இடமிருந்து வலம்**

1. வைத்திய சேவை வழுங்குதல்.
4. நிர்வாகம்.
7. காற்று.
8. வகைப்படுத்தல்.
10. இணக்கம்.
11. ஒரு கிழமை.
13. மேல் நாட்டு குடிபானம்.
15. ஆறறிவு படைத்தவன்.
17. மத்தி.
18. கேள்விச் சொல்.
19. ஒரு தோல் வைத்தியம்.
20. உண்பது இதனை.
21. சீட்டாட்டத்தில் முக்கிய சீட்டு.
22. தொழில் ரீதியான பிரிவு

அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 604

சொற்சிலம்பம் போட்டி 604 ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி 05 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரங்கள் முறையே 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி12ஆம் மற்றும் பெப்ரவரி 19ம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### சொற்சிலம்பம் போட்டி இல. 602 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.பாயாசம் , 2.தசம்,3.கம்பளம், 4.அகன்ற, 5.வட, 6.திம்பு, 8. சதகம், 11.வைகாசி, 12.சிறியது, 13.மதி, 15.வியாழன், 16. முகதா, 17.ஆலம்,19.கட,

**இடமிருந்து வலம்**

1.பாதகம், 4.அவதி, 7.யாசம், 8.சகடம், 10.கறவை, 12.சிம்மம், 14. காவி, 16.முறி, 17.ஆசியா, 18.கயல், 19.கல, 20.தாது, 21.அடம்பன்.

### போட்டி இல. 601இல் பரிசு பெற்றோர்

**1ஆம் பரிசு** — வே.நயனீசன், புளியம்பொக்கணை, பரந்தன்.

**2ஆம் பரிசு** — நா.ஜெயரூபி, சிவரியோடை, கரணவாய் மேற்கு.கரணவாய்.

**3ஆம் பரிசு** — எப். இப்தியா ஷீநாத், பகூர் வீதி, ஹம்பாந்தோட்டை.

### பாராட்டுப் பெறுவோர்

(1) க. குணபாலன் (ரெயிலர்),
அளவெட்டி கிழக்கு, அளவெட்டி.
(2) எஸ். பாலசுப்பிரமணியம்,
இல; 06, ஸ்பெல்வின் றோட், உவர்மலை,
திருகோணமலை.
(3) அ.கலிஸ்ரா,
இல;15 நாவலர் வீதி, நாவாந்துறை.
(4) வ.ஆ.ஆதிரூபசிங்கம்,
அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை.
(5) ஆர்.புவிராசன்,
குமாரபுரம், முள்ளியவளை, முல்லைத்தீவு.
(6) எஸ். செல்வராஜா,
இல;04, பெயிலிறோட், அரசடிச் சந்தி,
மட்டக்களப்பு.
(7) எஸ்.திருஞானலோஜினி,
இல; 15/4,கல்லூரி ஒழுங்கை,
திருகோணமலை.
(8) வை. முகமட்றமீஸ்,
பாலச்சோலை வீதி, அட்டாளச்சேனை.
(9) ச.யாழினி,
"சரஸ்வதி மகால்", மஞ்சத்தடி தெற்கு,
இணுவில்.
(10) கோபாலசிங்கம் சர்சிகா,
கரப்புக்குத்தி, கனகராயன்குளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை வென்றவன்




**ராஜேந்த்:** "எக்ஸ் றே" என்ன சொல்லுது? உன்ரை சளியையும் சோதிச்சன் அது என்ன சொல்லுது? எல்லாம் சொல்லுவன் பயப்பட மாட்டியே?

**பூபாலு:** பயமோ? எனக்கோ? நீ எனக்கருகில் இருக்க எனக்கென்ன பயம் சொல்லு ராஜேந்த்..

**ராஜேந்:** குட் அந்த "எக்ஸ் றே" உனக்குக் கசம் என்று சொல்கின்றது. உன்னைக் காச நோய் பீடித்திருக்கென்று கூறுகின்றது.

**பூபாலு:** என்ன கசமோ?... (பயந்தவனாக ஒப்பாரி வைத்து அழுதல்) ஐயோ! என்ரை அப்பு ஆசை அப்பு அருமை அப்பு இப்ப நான் என்ன செய்ய?. எனக்குக் கசமணை ஐயோ! ஐயோ!!

**முத்து:** டேய் தள்ளி நில்லடா தள்ளி நில்(தலையிலடித்து ஒப்பாரி வைத்து அழுதல்)

டேய்..பூபாலுபூபாலு..இனி உன்னை ஒருத் தரும் சமூகத்திலை சேர்க்காங்கள்.. நீ அழுது அழுது இருமி இருமி ஐயோ! நான் அதை என்ரை வாயாலை எப்பிடிச் சொல்லுவன்?

**பூபாலு:** அப்பு கசம் வந்த ஆக்கள் தப்ப மாட்டினமே?

**முத்து:** எட கயம்! தள்ளி நிண்டு கதை.கிட்ட வரதே உன்ரை கொம்மாவின்ரை கொப்பற்றை மாமனுக்குக் கசம் வந்தது அவர் அவுட். அவற்றை மகனுக்குக் கசம் வந்துது..அவரும் பொசுக்கெண்டு போயிற்றார். இனி உனக்கு, என்ரை தவப் புதல்வனுக்குக் கசம் வந்திருக்கு அவ ரும்.

**பூபாலு:** குளோஸ் (இருவரும் சேர்ந்து ஒப்பாரி வைத்தழுதல்)

**ராஜேந்:** இப்ப என்ன நடந்து விட்டது? ஏன் இரு வரும் தேவையற்றவற்றை எண்ணி வீணாக மனதை அலட்டிக் கொள்கின்றீர்கள்?

**முத்து:** ஐயோ தம்பி விசயம் தெரியாதோ. ஒரு பேய்ப் பிள்ளையாய்க் கிடக்குது(அங்குமிங்கும் பார்த்துவிட்டு, ராஜேந்திரனின் காதினுள் இரகசிய மாக)..தம்பி அவனுக்குக் கசம்.

**பூபாலு:** கசத்தைக் குணப்படுத்தவே முடியாது.

**ராஜேந்:** யார் சொன்னது கசத்தைக் குணப் படுத்த முடியாதென்று? இது இலக்ரோனிக் யுகம் விஞ்ஞானம் அதி உச்ச வளர்ச்சி கண்ட காலம் நினைத்ததைச் சாதிக்கும் காலம்

**முத்து:** அப்ப தம்பி காசத்தைக் குணப்படுத்த ஏலுமே?

**ராஜேந்:** நிட்சயமாகக் குணப்படுத்த இயலும்.

**முத்து:** ஆ!...மெய்யே?

**பூபாலு:** ஆ...!ஆமோ?

**ராஜேந்:** ஏன் இருவரும் வாயைப் பிளக்கின் றீர்கள். தற்போது புதிய சிகிச்சை முறைகள் உள்ளன. பலர் பூரண சுகம் பெற்று மக்களுடன் மக்களாக மகிழ்வுடன் வாழ்ந்து வருகின்றனர்.

**முத்து:** உண்மையாகவே தம்பி?

**ராஜேந்:** பொய் கூறக் காலம் அல்லவே இது எத்தனையோ நவீன வசதியுடன் நோயை வருமுன் காக்க வழி உண்டு. வந்த பின் கண்டறிய மார்க்க முண்டு.கண்டபின் மாற்ற அதிசய மருந்துகளுண்டு

**பூபாலு:** அப்படியா?

**ராஜேந்:** ஆமாம் பூபால் எக்ஸ் றே படம் பிடித்து நோய் எவ்வளவு தூரம் பரவி இருக்கின்றது என்று கண்டறியலாம். இந்த நோய்க் கிருமிகள் நுரையீரலைத்தான் தாக்குகின்றன. அதனைக் கண்டறிய "எக்ஸ் றே" உள்ளது. அத்துடன் சளியைச் சோதித்தும், இந் நோய் உள்ளதா எனவும், இது ஏனையோருக்கும் பரவும் அபாயமுள்ளதா எனவும் கண்டு கொள்ளலாம்

**முத்து:** தம்பி சொல்லுறது எல்லாம் புதிசாய்க் கிடக்குது

**ராஜேந்:** புதுமை பூத்த புத்தம் புது உலகு. இது ஆனாலும் பலர் பழமையில் ஊறி, அறியாமை யினாலும் ஆட்டிப் படைக்கப்படுகின்றனர்.இது கவலைக்குரிய ஒரு விடயம் ஆகும்.

**முத்து:** தம்பி சொல்லுறது புரியுது.நான் போய்ப் படலையைக் கட்டுறன்.இனி பூசாரிமார் இஞ்சை வர மாட்டீனம்.. வேப்பமிலைக்கு இனி இங்கு வேலையில்லை.

இனி இன்ஜெக்ஷன், - ஊசி மருந்துக்கும், மாத்திரைகளுக்கும்தான் வேலை.

**முத்து:** சரி தம்பி..இனி என்ரை மோன்



உம்முடைய பொறுப்பிலைதான்.சுகப்படுத்தி அவனை ஆளாக்கி விட வேணும் பழையமாதிரி கொழு, கொழு மொழு மொழுவாக்கித்தர வேணும். உது உவனுக்குப் பரம்பரை பரம்பரை




யாக வந்திருக்கவேணும்.நாங்கள்தான் கவனிக்கா மல் விட்டுட்டம்.

**ராஜேந்:** இது பரம்பரை நோயல்ல. ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு இந் நோய் இருந்தால், அவருடன் நெருங்கிப் பழகுகின்றவர்களுக்கு இந் நோய் வர வாய்ப்பு உள்ளது.

**முத்து:** அப்ப தம்பி இது பரம்பரை நோயல்ல.. பரவுகிற நோய் எண்டு சொல்லுறீர்? இது சரி தம்பி இந்த நோய் ஒருவருக்கு இருக்குது எண்டதை எப்பிடிக் கண்டுபிடிக்கிறது?

**ராஜேந்:** நல்லது..நீங்களும் அறிவுக் கண் களைத் திறந்திருக்கிறீர்கள்.அதன் வெளிப் பாடுதான் இந்தச் சந்தேகங்கள் இரண்டு வாரத்திற்கு மேல் தொடர்ச்சியான இருமல், மாலையில் இலேசான காய்ச்சல், பசியின்மை போன்றன இந்நோய்க்கான அறிகுறிகளாக இருக்கலாம். இந்த அறிகுறிகள் உள்ளவர்கள் எக்ஸ் கதிர் படம்பிடித்துப் பார்த்தும் சளிப் பரிசோதனை செய்து பார்த்தும் இந் நோய் உள்ளதா என உறுதிப்படுத்தி சிகிச்சை தொடங்கலாம்.

**முத்து:** அது சரிதம்பி இஞ்சை சின்னஞ் சிறிசுகள் வாறது போறதுகள் அதுகள் உவ னோடை சேர்ந்துதானை விளையாட்டு அது களுக்குமேதாவது?

**ராஜேந்:** நல்லது நீங்களும் நன்றாகச் சிந்திக்கத் தொடங்கியிருக்கின்றீர்களே! .காச நோயிலிருந்து ஒவ்வொரு வரும் தப்பினாலன்றி, ஒருவரும் தப்பினாரல்லர். அதனாலே

**முத்து:** என்னெண்டு தம்பி என்ன மாதிரி..இன்னொருக்கால் சொல்லுங்கோ

**பூபாலு:** ஒருக்காலென்ன பத்துத்தரம் சொன்னாலும் உந்த ஆளுக்கு விளங்காது.

**ராஜேந்:** காச நோயிலிருந்து ஒவ் வொரு வரும் தப்பினாலன்றி ஒரு வரும் தப்பினாரல்லர். அந்தச் சின்னப் பிள்ளை களையும், அவர்களை நோயாளியுடன் சேர்வதைக் குறைக்கச் செய்யுறது நல்லது. நோயாளியைத் தற்காலிகமாகத் தனி மைப்படுத்தி, அவருக்கென தனியறை.. தனிப் பாத்திரம்

**பூபாலு:** ஐயையோ! தனிய பேய் வேண்டா மடா.

**ராஜேந்:** டேய் பூபாலு கவலைப்பட வேண்டாம். எல்லாம் தற்காலிகமா கத்தான். நோய்பூரண குணமடைந் ததும், நீயும் மற்றவர் களுடன் சேரலாம்.

**பூபாலு:** ஓகே நீ சொன்னால் சரி.

**ராஜேந்:** (முத்துசாமியைப் பார்த்து) எதற்கும் நீங்களும் ஒருமுறை எக்ஸ் கதிர் படம்பிடித்துப் பார்ப்பது நல்லது

**முத்து:** (ஏளனமாக) என்ன தம்பி நானோ?.... என்ன விளையாடுகிறீரே? என்ரை பரம்பரை யென்ன? குலம் கோத்திரமென்ன? போக்குவரத் தென்ன? என்னட்டைக் கிடந்த காசு பண மென்ன? நகை நட்டென்ன? காணி பூமியென்ன? எனக்கு - இந்த முத்துச் சம்பா முத்துச்சாமிக்கு கசம் வரவோ?... உதுகும் ஒரு பகிடிதான்.

**ராஜேந்:** இதோ பாருங்கள்.இந்தக் கசக் கிருமிகள் இருக்கின்றனவே அவைக்குப் பெயர் "ரியூபக்கிள் பசிலசு". அவை சாதி சமயம் பாராது. ஏழை பணக்காரர் வித்தியாசம் பார்க்காது. எல்லோ ரிடமும் வரும்போகும். தாக்கக் கூடிய வரர் களைத் தாக்கும். உயிர் போக்கக் கூடியவர்களைப் போக் கும்.அத்தோடு நீங்கள் ஒரு நோயாளியுடன் நெருங்கிப் பழகி யதனால் நீங்களும் ஒருமுறை எக்ஸ் றே படம் எடுத்துப் பார்ப்பது நல்லது..

**முத்து:** சரிதம்பி நீர் சொன்னால் அப்பீல் இல்லை.இவனுக்கு வைத்தியம் என்ன மாதிரி.. ராஜேந் ஆஸ்ப்பத்திரியென்றால் போதிய வைத் திய வசதிகளுண்டு.இங்கு சிகிச்சை பெறுவதே நல்லது.எதற்கும் ஒரு சின்ன இன்ஜெக்ஷன். பூபாலு எங்கே கையைக் காட்டு(பூபாலு சாத்தி ரம் பார்ப்பவர்களிடம் கையைக் காட்டுவது போல கையைக் காட்ட ராஜேந் சரிப்படுத்தி உரிய முறையில் ஊசி போடுதல்.) (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகக்கிண்ண...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

திலும் வெற்றிவாகை சூடியிருந்தது. அதனால் பலமிக்க அணியாகவே நியுசிலாந்தை அவர்களின் சொந்தமண்ணில் இந்தியா எதிர்கொள்கின்றது. இந்தியாவின் இளைய அணிதற்போது திடமான நிலையில் உள்ளதாக இந்தியஅணியின் தலைவர் மகேந்திர சிங் டோனி தெரிவித்துள்ளார். இந்தியஅணியில் அதிகமாற்றங்கள் காணப்பட்டபோதிலும் இளையவீரர்கள் அனைவரும் இந்தியாவில் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றியிருந்ததன் காரணமாக அவர்களால் சிறப்பானபெறுபேற்றை வெளிப்படுத்தமுடியும் எனவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இதேவேளை, இந்தியவீரர்களை எதிர்கொள்வது நியுசிலாந்து வீரர்களுக்கு பெரியமலையைக் கடப்பதுபோல இருக்கும் என நியுசிலாந்தின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சைமன் டபுள் தெரிவித்துள்ளார். இந்திய அணியின் இளம் ஆட்டக்காரர்கள் எந்த ஆடுகளத்திலும் விளையாடும் திறமைபடைத்தவர்கள். அனைவருமே அதிரடி ஆட்டக்காரர்களாக உள்ளனர். கடந்த டிசம்பரில் மேற்கிந்திய தீவுகளை எதிர்கொண்டது பேரல இந்தியாவுக்கு எதிரான தொடர் இருக்காது. ஆனாலும், நியுசிலாந்தின் குப்டில், ஜெசிரைடர், வில்லியம்சன், அடம் மில்னி, ஸ்ருவட் பின்னி ஆகியோர் சிறப்பாக விளையாடுவார்கள் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## பங்களாதேஷ்...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில் ஹசீனாவின் பணி இலகுவாக்கப்பட்டிருக்கிறது. அழுத்தங்களைச் சமாளிப்பதற்காக எதிர்க்கட்சி ஆர்ப்பாட்டங்களை பயங்கரவாதம் என்று முத்திரை குத்துவதில் அவர் வெற்றி பெற்றிருக்கிறார்.

ஜமாத்தே இஸ்லாமி என்ற கட்சியுடன் தொடர்பைத் துண் டித்து, வீதி ஆர்ப்பாட்டங்களைக் கைவிட்டால் மாத்திரமே பேச முடியும் என்று அவர் பங்களா தேஷ் தேசியக் கட்சிக்கு நிபந்தனை களை விதித்துள்ளார். ஆனால் இந்த நிபந்தனைகளை அந்தக் கட்சியால் எப்போதும் நிறைவேற்றமுடியாது என்பது அவருக்கும் தெரியும். வீட் டுக்காவலில் முடங்கிக் கிடக்கும் பேகம் காலிதா ஷியாவைப் பொறுத்தவரையில் வீதி ஆர்ப் பாட்டங்களைத் தவிர வேறு வழி கள் இருக்கிறதா என்பது தெரிய வில்லை.

எதுசரி, எது பிழை என்பதை அறிந்து தவறுகளைத் தண்டிக்க வேண்டிய சர்வதேச சமூகம், சுய நலம் கருதி ஒரு தரப்பை ஆதரிக்கிறது. இந்த நிலையில் பங்களா தேஷில் ஜனநாயகத்தைச் சிக்கலுக்குள் இருந்து மீட்பது என்பது இப்போதைக்கு இயலாத காரியம் என்பதுதான் ஜீரணிக்க முடியாத கசப்பான உண்மை.


BSI
ஸ்டீல்
தரத்திலும் தரநிலையிலும் உயர்ந்தது
SLS 375
RB 500 TMX QT BARS
முற்றிலும் தன்னியக்க ஜெர்மன் தொழில்நுட்பத்துடன் THERMEX வழங்கும்
- பிரிட்டிஷ் தரநிலைகள் சான்றிதழைப் பெற்றுள்ளது BS 4449
- தரமான முன்னேற்றமுடைய மூலப்பொருட்கள்
- மின் கம்பங்களை தயாரிப்பதற்காக CEB இனால் அனுமதிக்கப்பட்ட விசேட நீளத்தில் தரமான கம்பிகளை நாம் உற்பத்திசெய்கின்றோம்.
- BSI இரும்புக் கம்பிகள் நாடு பூராகவும் ஹார்ட்வெயார் முகவர்களிடம் கவர்ச்சிகரமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

அளவுகள்:
8 mm தொடக்கம் 20 mm விட்டம்
6 m தொடக்கம் 12 m நீளம்

ஆயத்த பொருட்களின் அதிகபட்ச தொழிற்சாலை விலை: ரூ. 108,900/- (வரி உள்ளடங்கியது)

"வங்கி உத்தரவாதத்துடன் வரும் உங்களுக்கு 30 - 90 நாட்கள் மீள் செலுத்துவதற்கான கால அவகாசம்" எந்தவொரு தொகைக்கும் 1 மெட்ரிக் டொன்னுக்கு மேலதிக கட்டணமாக மாதாந்தம் ரூ. 900/- செலுத்தவேண்டும்.
அழையுங்கள்:
0772 201 589, 0777 872 315
0773 541 929

Bhuwalka
புவல்க்கா ஸ்டீல் இண்டஸ்ட்ரீஸ் (ஸ்ரீ லங்கா) லிமிடெட்
அலுவலகம்: 5-10, "உலக வர்த்தக மையம்"
கிழக்கு கோபுரம், எச்சலன் சதுக்கம், கொழும்பு 01.
தொ.பே: 0112 382 455/66
பெக்ஸ்: 0112 382 477 மின்னஞ்சல்: bsil@sltnet.lk
தொழிற்சாலை முகவரி: கதுவெல்ல, மாதம்பே, வடமேல் மாகாணம்.






Dreamron
HAIR CARE







Hair Dye
இனால் ஒவ்வாமையா?
"ஒவ்வாமையிலிருந்து விடுபட்டு இளமையான தோற்றத்திற்கு ஜப்பான் தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்ட இயற்கை குணநலன்களுடன் கூடிய"
ECO
Hair Color

- PPD மற்றும் அமோனியா அடங்கிய தலைமுடி சாயங்களினால் ஒவ்வாமை உள்ளவர்களுக்காக
- பெறுமதி வாய்ந்த இயற்கை மூலப்பொருட்களினால் தயாரிக்கப்பட்டுள்ளது.
- இளநரையாக கொண்டவர்களுக்கு தலைமுடியின் நிறத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தாது இயற்கையான கருமை நிறத்தை பெற்றுத்தரும்.
- வெள்ளை நிறக்கூந்தலுக்கு இயற்கையான கருமை நிறத்தை பெற்றுத்தருவதுடன் கரு நிற கூந்தலுக்கு மேலதிக பாதுகாப்பை வழங்கி தலைமுடி நுனி நிறம் மாறுவதையும் தடுக்கும்.

நரைமுடியை கருமை நிறமாக்குவது சம்பந்தமான இரசாயன ஆலோசனைகளுக்காக அழையுங்கள் 071-4444700
மேலதிக விபரங்களுக்காக எமது தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது எமது இணையத்தளத்திற்கு பிரவேசியுங்கள் www.dreamron.lk
071-4444702.071-4444703,071-4444706.071-4444708.071-4444709.071-4444718
ஏக விநியோகஸ்தர்கள் : டிரீம்ரோன் லங்கா (தனி) நிறுவனம் ,112,சுனேத்ரா தேவி கொவ்வல , நுகேகொட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு -17, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2014 ஜனவரி 22 ஆம் திகதி வெளியிடப்பட்டது.